بسم الله الرحمن الرحیم

# கண்டறிந்த உண்மைகள்

Al-Intizar Publication
Email: alintizarpublication@gmail.com

*Kandarintha Unmaihal*
*First Edition: 2011*
*Second Edition: 2014*
(புதிய திருத்தங்களுடன்)

*Al-Intizar Publication*

## உள்ளே...

நுழையுமுன் ........................................................................2
ஷீஆயிஸத்தை புரிந்து கொள்வதற்கான சிறந்த அணுகுமுறைகள் ..............................4
ஷீஆ எதிர்ப்புப் பிரசாரத்தின் பின்னணி.......................................................4
ஷீஆ சுன்னா ஒற்றுமையின் சான்றுகள் ...........................................................6
ஷீஆயிஸத்தின் தோற்றமும் உருவாக்கமும்.....................................................10
ஷீஆ தோற்றம் பற்றிய சில ஊகங்கள் ...........................................................11
ஷீஆ உருவாக்கமும், நபிகளாரும்..................................................................12
ஷீஆ நம்பிக்கைகள்.......................................................................................14
1.ஏகத்துவம் ..................................................................................14
1.1.நீதி ...........................................................................................14
2.நபித்துவம் ...................................................................................14
3.இமாமத் (தலைமைத்துவம்) .........................................................15
3.1.இமாம் மஹ்தி(அலை) ...................................................................22
4.கியாமத்(மறுமை நாள்) ...............................................................24
ஷீஆ முஸ்லிமும், நல்லொழுக்கப் பண்புகளும்.................................................24
ஈரானிய ஷீஆ முஸ்லிம்களும், இஸ்லாமிய நெறிமுறைகளும்...............................25
ஈரான் இஸ்லாமியக் குடியரசும், இஸ்லாமிய அரசியற்பண்பாடும் ............................28
ஐயமும் தெளிவும்.........................................................................................30
01.ஷீஆக்களிடம் வேறொரு குர்ஆனா? ..............................................30
1.1.ஷீஆ எதிர்ப்புப் பிரசாரத்தில் புதுவித யுக்தி..................................36
1.2.ஹஸரத் அலியினால் ஒன்று சேர்க்கப்பட்ட அல்குர்ஆனும், விரிவுரையும் (முஸ்ஹஃபு அலி).......................................................................................37
1.3.முஸ்ஹஃபு அலி பற்றிய மேலதிக தகவல்கள் ....................................38
1.4.சந்தேகத்திற்கிடமான நூல் ...........................................................39
1.5.பலயீனமான ஹதீஸ்கள்..................................................................39

02.ஸஹாபாக்களைத் தூற்றலாமா? ........................................ 43

2.1.குர்ஆனின் பார்வையில் ஸஹாபாக்கள் ........................................ 44

2.2.ஸஹாபிகள் பற்றிய ஆய்விற்கான தேவை ........................................ 50

03.ஷீஆக்களிடம் மூவேளைத் தொழுகையா? ........................................ 52

04.ஷீஆக்கள் மண்ணில் சுஜூது செய்வதேன்? ........................................53

05. ஷீஆக்கள் தொழுகையில் கைவிட்டுத் தொழுவதேன்? ........................................ 56

06. ஷீஆயிசத்தை தோற்றுவித்தவன் அப்துல்லாஹ் இப்னு ஸபாவா ? ........................................ 62

07.முத்ஆ திருமணத்தை இஸ்லாம் அனுமதிக்கிறதா? ........................................ 64

7.1.இதற்கு தீர்வு என்ன? ........................................ 64

7.2.இதுவே தீர்வு ........................................66

7.3.மிஸ்யார் திருமணம் ........................................66

7.4.முத்ஆ திருமணம் என்றால் என்ன? ........................................68

7.5.முத்ஆ திருமணம் மற்றும் நிலையான திருமணம் இரண்டினதும் ஒற்றுமையும், வேற்றுமையும்........................................68

7.5.அல்குர்ஆனின் பார்வையில் முத்ஆ திருமணம் ........................................ 70

08. ஷீஆ நம்பிக்கையில் தகிய்யா என்ற நடிப்பு உள்ளதா? ........................................76

8.1.நிஃபாக்(நயவஞ்சகம்) மற்றும் தகிய்யாவுக்கிடையிலான வேறுபாடுகள் ........................................77

8.2.தகிய்யாவுக்குரிய ஆதாரங்களும், சான்றுகளும் ........................................77

8.3.தகிய்யாவின் வகைகள் ........................................ 80

09.ஷீஆக்கள் அஹ்லுல்பைத்தினரின் பெயர்களின் பின் ‘‘அலைஹிஸ்ஸலாம்’’ எனச் சொல்வதேன்? ........................................82

10.முஹர்ரம் மாதத்தில் அனாசாரங்களா? ........................................82

11. ஷீஆக்களின் (பாங்கு) அதான் வித்தியாசப்படுகிறதா? ........................................84

12.ஈரானில் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் புறக்கணிக்கப்படுகின்றனரா? ........................................85

13.ஷீயாக்கள் ஆயிஷா நாயகி மீது அவதூறு கூறுகின்றனரா? ........................................87

13.1.புனையப்பட்ட இஃப்க் கதையும் அதை பதிவு செய்துள்ள நூற்களும் ........................................88

13.2.இஃப்க் கதை பற்றிய ஷீயா தரப்பு வாதங்கள் ........................................ 90

14.ஷீயாக்கள் ஈரானில் கஃபா கட்டி ஹஜ் செய்கின்றார்களா? ....................................92
ஷீஆக்கள் பற்றி சுன்னிஅறிஞர்கள் ........................................................................ 94
ஷெய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி...................................................................... 94
(அல்–அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் முன்னால் விரிவுரையாளர்)........................... 94
அஷ்–ஷேய்க் அல்–இமாம் மஹ்மூத் ஷல்தூத்...................................................... 94
மௌலானா அபுல் அஃலா மௌதூதி...................................................................96
இமாம் அபூ ஸஹ்ரா...........................................................................................96
இமாம் அப்துல் ஹலீம் மஃமூத் ...........................................................................97
அம்மான் மாநாட்டில் வெளியிடப்பட்ட பத்வா.......................................................98
இதுவே தீர்வு!.....................................................................................................100
தீர்வுகளை எட்டுவதற்கானதற்கான சிறந்த அணுகுமுறை....................................... 102

## நுழையுமுன்

சுமார் இரு தசாப்தங்களுக்கு மேலாக ஷீஆக்கள் பற்றிய எதிரும் புதிருமான கருத்துக்களும், அபிப்பிராயங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. மிக வியக்கத்தக்கதாக அமைந்துள்ள இக்கருத்துக்கள் ஷீஆ சமூகத்திற்கெதிரான பிரசாரமாகவே தோன்றுகின்றது.

“ஷீஆக்கள் முஸ்லிம்களல்லர். அவர்கள் இஸ்லாமிய அகீதாவுக்கு முற்றிலும் முரண்பட்டோர், வேறு குர்ஆனைக் கொண்டோர், அலி அவர்களை ரஸூலெனக் கருதுவோர், ஸஹாபிகளை நிந்திப்போர், ஹஸரத் ஆயிஷா அவர்களை விபச்சாரி என்போர், மூவேளை மாத்திரம் தொழுவோர், கப்று வணக்கமும் சமாதி வழிபாடும் புரிவோர், இறைவனைவிட ஹஸரத் அலி அவர்களை மிகைப்படுத்திப் புகழ்வோர், மார்க்க விடயங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நடித்து, அதனைத் தகிய்யா என்போர், அப்துல்லாஹ் இப்னு ஸபா என்ற யூதனால் தோற்றுவிக்கப்பட்டோர், தொழுகை முடிவில் இருகைகளையும் உயர்த்தி (அலிக்குரிய நபித்துவத்தை முஹம்மது நபிக்குத் தவறுதலாக வழங்கி) ஜிப்ரீல் துரோகமிழைத்து விட்டார் எனச் சொல்வோர், முத்ஆ எனும் விபச்சாரத்தை சட்டபூர்வமாகக் கொண்டோர். ஹஜருல் அஸ்வத் கல்லைத் திருடியதுடன், ஹஸரத் ஹுஸைன் அவர்களுக்காக தம்மேனிகளைக் கீறிக்கிழித்துக் கொள்வோர், ஈரானில் கஃபதுல்லாஹ்வைக் கட்டி அங்கு ஹஜ்கடமை புரிவோர்... போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்படுகின்றன.

இப்பிரசாரங்கள் ஏன்? எதற்காக? இதன் பின்னணி என்ன? ஷீஆக்கள் பற்றிய உண்மைகள் என்ன? என்பன போன்ற விடயங்களை தமிழ் பேசும் உலகிற்குத் தெளிவுபடுத்தும் பொறுப்பை நாம் கொண்டிருப்பதாக உணர்கிறோம். ஷீஆ முஸ்லிம்களைப்பற்றி சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அவர்களின் இஸ்லாமிய சிந்தனை, கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை நேரில் கண்டறிந்து, அவர்களின் நம்பிக்கைகளை அவர்கள் நம்பியிருக்கும் விதத்தில் தெளிவு பெற்று, அவர்கள் தொடர்பாக எழுப்பப்படும் ஐயங்களை, அவர்களின் தலைசிறந்த அறிஞர்களிடம் நேரில் கேட்டறிந்து, ஷீஆக்களை எதிரிகளாகக் காண்போரின் ஷீஆ–விரோதக் கருத்துக்களையும் வேண்டியளவு செவிமடுத்து, அவற்றை வைத்தும் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கும் எமக்கு, குறித்த தார்மீகப் பொறுப்பு இருப்பதாக கருதுகிறோம்.

ஷீஆக்கள் பற்றிய பிழையான பிரசாரங்கள் நமது பிரதேசங்களில் பல காலமாக முன்னெடுக்கப்பட்டு வருவதைக் கண்டுங்கூட, சமூக ஐக்கியத்தை மனதிற்கொண்டு நாம் இதுவரை காலமும் மௌனம் காத்து வந்தோம். சமூகத்திற்குள் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சில்லரைப் பிரச்சினைகள் போதாததற்கு, இதையும் சேர்த்து பத்தோடு பதினொன்றாக அதிகரிக்கச் செய்து சமூக ஒற்றுமைக்கு உலைவைக்க நாம் முனையவில்லை.

ஆயினும், அண்மைக்காலமாக ஷீஆக்கள் பற்றிய தவறான பிரசாரங்கள் முஸ்லிம் பிரதேசங்களில் மிக உச்ச நிலையை அடைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. எல்லை மீறிச்செல்லும் இந்நிலையைப் பார்த்து, வாய்மூடி, மௌனம் காத்து, ஷீஆ சமூகத்தைப் பற்றிய உண்மைகளை தெளிவுபடுத்தாமல் இருப்பதை எம்மைத் தெரிந்த பலரும் எம்மை விமர்சிக்க தொடங்கிவிட்டனர்.

குற்றச்சாட்டுக்கள் ஒரு தலைப்பட்சமாக ஒரு சாராரினால் மாத்திரம் அள்ளி வீசப்படும் இவ்வேளையில், நாம் வாய்மூடி இருப்பது அச்சமூகத்திற்கு நாமும் சேர்ந்து செய்யும் துரோகமென்றே தோன்றுகிறது. ஷீஆக்களைப்பற்றி மிகத் தரக்குறைவாகப் பிரசாரம் செய்யும் கும்பல்களின் எல்லை மீறிய இந்நிலை, எம்சமூகத்திற்கு ஷீஆக்களைப்பற்றிய தெளிவைக் கொடுக்க எம்மைத் தூண்டுகிறது என்பதை நாமிங்கு ஞாபகமூட்டி, ஷீஆக்கள் சம்பந்தமான உண்மைத் தகவல்களை எவ்வித ஒளிவுமறைவின்றி அவர்களிடத்தில் உள்ளவாறு, ஓரளவு சுருக்கமாக உங்கள் முன் சமர்ப்பிக்க முனைகிறோம். இதற்கு அல்லாஹ்வே சாட்சியாளனும், போதுமானவனும் ஆவான்.

## ஷீஆயிஸத்தை புரிந்து கொள்வதற்கான சிறந்த அணுகுமுறைகள்

- அனைத்து சமய பிரிவுகளிலும், தீவிரப் போக்கை கடைப்பிடிப்போர் காணப்படுவது இயல்பானது. அவர்களின் சிந்தனைப் போக்கை வைத்து யதார்த்தத்தை அளவிட முடியாது. ஷீஆக்களும் இதற்கு விதிவிலக்கல்லர் என்பதை புரிந்து கொள்வது மிக அவசியமானது.

- ஷீஆ என்ன என்பதை சரியாக அறிவதற்கு அவர்களது பிரபல உலமாக்கள், நூற்கள் என்பவற்றைத்தான் நாடவேண்டுமே தவிர, ஷீஆ என்ற போர்வையைப் போர்த்திற் கொண்டு வருவோரின் கருத்துக்களையோ அல்லது அவர்களை எதிரிகளாகப் பார்ப்போரின் நூற்களையும் இணையதளங்களையும் பார்வையிட்டு மாத்திரமோ அறிந்து கொள்ளமுடியாது. ஷீஆயிசத்திற்கு எதிராக சுமார் எழுபதாயிரத்திற்கு மேற்பட்ட இணையத்தளங்கள் செயற்படுவதாக ஆய்வுகளில் கண்டயறியப்பட்டுள்ளது.

- ஷீயாக்களில் பெரும்பான்மையினரின் நம்பிக்கைதான் எடுகோளாகும். அது தவிர இஸ்லாத்தின் எதிரிகளால் ஷீஆயிசம் என அரங்கேற்றப்பட்ட நாடகங்கள், ஷீஆயிசத்திற்குள் ஆங்காங்கு ஊடுருவிய புல்லுருவிகள், பசுந்தோல் போர்த்திய புலிகளின் (யாசிர் அல்ஹபீப், பழ்லுல்லாஹ் நூரி) கருத்துக்கள் ஒரு போதும் ஷீஆ பொரும்பான்மையினரின் கருத்தைப் பிரதி பலிக்காது.

- ஷீஆயிசத்தை காழ்ப்புணர்ச்சி, கொள்கை வெறி, அரசியல் இலாபங்களுக்கப்பால் அறிய முற்படுவது ஓரளவு அதுபற்றிய தெளிவைத் தரலாம்.

## ஷீஆ எதிர்ப்புப் பிரசாரத்தின் பின்னணி

பல தசாப்தங்களாக அமெரிக்க மற்றும் சியோனிஸ ஏகாதிபத்தியம் தமது ஆதிக்கத்தையும், அடக்குமுறையையும் பல முஸ்லிம் நாடுகளில் மேற்கொண்டு வந்தமை மறுக்கமுடியாத உண்மையாகும். சர்வதேச அளவில் இஸ்லாமிய உம்மத்தின் கை வலுப்பெற்று, ஓங்கிவிடக்கூடாது என்பதை நோக்காகக்கொண்டு, முஸ்லிம் நாடுகளின் கனிவளங்களையும், அறிவுப் பொக்கிஷத்தையும் சூறையாடிக் கொண்டிருந்தன அவை. சீரழிந்த மேற்கத்திய கலாசாரம் மற்றும் பழக்க வழக்கங்களை முஸ்லிம் நாடுகளில் பரவச்செய்து இஸ்லாமிய சமூகத்தின் ஈமானையும், சமயப்பற்றையும் பறித்தெடுக்க முயற்சித்தன. இம்முயற்சிகள் சில முஸ்லிம் நாடுகளில் வெற்றிகரமாக அமைந்ததை மிக வருத்தத்தோடு ஏற்றாகவேண்டும்.

இஸ்லாமிய உலக வரலாற்றில் அமெரிக்க மற்றும் சியோனிஸ சக்திகளின் முழு இலக்காகக் காணப்பட்ட நாடுகளில் ஒன்றுதான் பாரசீகம் என்றழைக்கப்படும் ஈரான். மத்திய கிழக்கின் வர்த்தக கேந்திரம் என்றழைக்கப்படுமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாடு அது. அதை தனது பூரண ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்வதால், முழுமத்திய கிழக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முன் சரணாகதியாகிவிடும் என்பது அதன் நீண்டகால அவா. 1979ம் ஆண்டுக்கு முன் ஈரானில் அமெரிக்க ஆதிக்கம் மிகவும் தலைவிரித்தாடியது. அமெரிக்கா அன்றைய ஈரானிய மன்னர்களை விலைக்கு வாங்கி, அந்நாட்டின் கனியவளங்களைச் சூறையாடி, அந்நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருந்தது. அந்நாட்டு மக்களின் இஸ்லாமியப் பண்பாடுகளை மாற்றி மேற்கத்திய கலாசாரத்தை அந்நாட்டின்மீது திணித்துக் கொண்டிருந்தது. மனிதப்பண்புகள், கலாசார விழுமியங்கள் என யாவற்றையும் ஈரானிய மக்களிடமிருந்து அகற்றி, இஸ்லாத்தையும், உலமாக்களையும் இழிவாகவும், கேவலமாகவும் பார்த்தது.

சாபக்கேடான இந்நிலையிலிருந்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் விடுவிப்பதற்கான மாபெரும் எழுச்சிப் போராட்டம் இமாம் கொமைய்னி (ரஹ்) எனும் மாமனிதரால் முன்னெடுக்கப்பட்டது. அப்போராட்டம் ஒரு இஸ்லாமியப் புரட்சியாக உருவெடுத்து, அமெரிக்க ஆதிக்கத்தை அம்மண்ணிலிருந்து துடைத்து வீசியது. அதுவே ஈரான் இஸ்லாமியப் புரட்சி என புகழ் பெறுகிறது.

இமாம் கொமைய்னி (ரஹ்) அவர்களின் இஸ்லாமிய வழிகாட்டலில், உலமாக்களின் பல்வகை தியாகங்களுக்கு மத்தியில் வெற்றி கொள்ளப்பட்ட அப்புரட்சி, ஈரானிலும் முஸ்லிம் நாடுகளிலும் சுரண்டல், சூறையாடல்களில் மூழ்கியிருந்த அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு பேரடியாகவும், அச்சுறுத்தலாகவும் அமையத் தொடங்கியது. முஸ்லிம் நாடுகளில் நிலையாகக் குடிகொள்ளக் கனவுகண்டு கொண்டிருந்தவர்களுக்கு இப்புரட்சி ஒரு தலையிடியாகியது. இமாம் கொமைய்னி (ரஹ்) அவர்களின் இப்புரட்சி மூலம் ஈரானிலிருந்து அமெரிக்காவின் சுரண்டல் கரங்கள் துண்டிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கெதிரான உணர்வலைகள் இஸ்லாமிய உம்மாவின் உள்ளங்களில் எழத்தொடங்கின.

ஈரானிய மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு, உலக முஸ்லிம்களின் வெறுப்புக்குள்ளான அமெரிக்கா தனது பகைமையுணர்வை வெளிப்படுத்த தொடங்கி, ஈரானின் இஸ்லாமியப் புரட்சியாளர்களுக்கெதிரான சதித்திட்டங்களையும், எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தது. உலகில் முதன்முதலாக உலமாக்களின் இஸ்லாமியத் தலைமைத்துவத்தில் ஈரானில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அரசை முளையிலேயே கிள்ளி எறியும் நோக்கில் (சத்தாம்) ஈராக்கைத் தூண்டி விட்டு, ஈரானின்மீது எட்டு வருடப் போரைத் திணித்தது. தொடரான பொருளாதாரத் தடைகளையும், அரசியல் நெருக்கடிகளையும் ஈரானுக்கெதிராக ஏற்படுத்தியது. அரபு நாடுகள் உட்பட, பல உலக நாடுகளை ஈரானுக்கெதிராக அணி திரட்டியது.

அமெரிக்கா ஈரானுக்கெதிராக எவ்வகையான இடையூறுகளை முன்னெடுத்த போதிலும், அல்லாஹ்வின் மீது மிக உறுதியான நம்பிக்கை வைத்திருந்த ஈரானிய முஸ்லிம்கள், தமது அயராத உழைப்பின் பயனாக அவ்வனைத்து தடைகளையும் தாண்டி அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் உட்பட சகல துறைகளிலும் வெற்றி கண்டு கொண்டே வந்தனர். ஈரானில் உருவான இஸ்லாமியப் புரட்சியின் எழுச்சியை அடியோடு ஒழிக்க முனைந்த அமெரிக்காவுக்கும் அதன் அடிவருடிகளுக்கும் ஈற்றில் ஏமாற்றமே கிடைத்தது. அந்நாட்டு மக்களை அடிபணியச் செய்யும் வகையில் இறுதி முயற்சியாக அவர்களுக்கெதிரான கலாசாரத் தாக்குதல்களைத் தொடுத்து, அம்மக்களின் இஸ்லாமிய சிந்தனை குறித்து தவறான கருத்துக்களை உலக மக்களின் உள்ளங்களில் விதைக்க ஆரம்பித்தது. ஈரானியர்கள் ஷீஆ நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால் ஷீஆ எனும் அம்சத்தை ஆயுதமாகக் கொண்டு அவர்களை தாக்கமுயன்றது. ஷீஆ என்பது முழுக்க முழுக்க சுன்னி சமூகத்தை விட்டும் அந்நியமானது எனக்காட்டி முஸ்லிம் சமூகத்திலிருந்து ஷீஆக்களை தனிமைப்படுத்தி, ஓரங்கட்ட முயற்சித்தது.

உலக முஸ்லிம்களின் கிப்லாவையும், புனிதத்தலங்களையும் தம்கைவசம் கொண்டிருப்பதால் தம்மை உலக முஸ்லிம்களின் தலைவர்கள் என எண்ணிக் கொண்டிருந்தார்கள் அரபு மன்னர்கள். ஈரான் இஸ்லாமியப் புரட்சியானது உலக முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய விழிப்புணர்வைக் கொடுத்து அம்மக்களை தம்பக்கம் ஈர்த்து, அவர்களின் தலைமைத்துவத்தை தம்கையில் எடுத்துக் கொள்ளும் எனும் அச்சத்தை அம்மன்னர்களிடம் வளர்த்து ஈரானுக்கெதிரான போராட்டத்தில் அவர்களையும் இணைத்துக் கொண்டது அமெரிக்கா.

ஈரானிய ஷீஆ முஸ்லிம்களுக்கெதிரான பிரசாரத்தை, இன்று புனித(மக்கா,மதீனா) தலங்களின் காவலர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் மன்னர்கள், தமது தயவில் வாழும் தௌஹீத்(வஹ்ஹாபி)வாத உலமாக்களால் முன்னெடுத்து வருவதில் முன்னணியிலும் பின்னணியிலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஷீஆ சுன்னா ஒற்றுமையின் சான்றுகள்

ஷீஆக்கள் இன்று உலக முஸ்லிம் சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினராக, ஈராக், ஈரான், குவைத், கடார், ஆப்கானிஸ்தான், துருக்கி, பஹ்ரைன், சவுதிஅரேபியா, சிரியா, பாகிஸ்தான், இந்தியா, லெபனான், எகிப்து, ஆஸர்பைஜான்... போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். ஷீஆக்கள் தமது சுன்னி சகோதரர்களுடன் மிக அன்னியோன்னியமாகவும், ஒற்றுமையுடனும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக குறித்த நாடுகளில் வசித்து வருவதைக் காணமுடிகிறது. சுன்னி முஸ்லிம்களின் தொழிற்துறைகளில் ஷீஆக்கள் தொழில் புரிவதும் ஷீஆக்களின் தொழிற்சாலைகளில் சுன்னித் தொழிலாளர்கள் தொழில் புரிவதும், ஷீஆப்பள்ளிவாயல்களில் சுன்னிகள் தொழுவதும், சுன்னி பள்ளிகளில் ஷீஆக்கள் தொழுவதும், சுன்னிகள் அறுக்கும்

மாமிசங்களை ஷீஆக்கள் உண்பதும், ஷீஆக்கள் அறுக்கும் இறைச்சி வகைகளை சுன்னிகள் சாப்பிடுவதும், ஷீஆப் போராட்டக் குழுக்களுக்கு சுன்னிகள் ஆதரவு வழங்குவதும் (லெபனான் ஹிஸ்புல்லாஹ்களுக்கு சுன்னிகள் ஆதரவளிப்பது போல்), (பலஸ்தீன சுன்னி போராட்ட குழுக்களான ஹமாஸ் மற்றும் ஜிஹாத் இயக்கங்களுக்கு லெபனானிய ஹிஸ்புல்லாக்களும், ஈரானும் உதவுவதைப் போல்) சுன்னிப் போராட்டக் குழுக்களுக்கு ஷீஆக்கள் ஆதரவளிப்பதும் (பாகிஸ்தானிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றான ஜமாஅதே இஸ்லாமியினருக்கு பாகிஸ்தானிய ஷீஆக்கள் அரசியல் ஆதரவு வழங்குவதுபோல்) சுன்னி அரசியல் வாதிகளுக்கு ஷீஆக்கள் ஆதரவு வழங்குவதும் போன்ற பல உதாரணங்களை இவ்விரு சமூகத்தின் ஒற்றுமையைப் பறைசாற்றும் சான்றுகளாக காணலாம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காகச் சென்றோரும், முஸ்லிம் உலக அரசியல் நகர்வுகளைக் கூர்ந்து அவதானிப்போரும் இதனை அறியாமலிருக்க வாய்ப்பில்லை.

ஷீஆக்கள் காஃபிர்கள் என்பதற்கு எதிராக 'ஷீஆக்களும் முஸ்லிம்களேதான் அவர்களின் மத்ஹபு இஸ்லாமிய மத்ஹபுகளில் ஒன்றேதான்' என அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத் மார்க்க மேதைகளான எகிப்து அல்–அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் முதல்வர் அஷ்ஷெய்க் ஷல்தூத், முஹம்மது கஸ்ஸாலி, யூசுப் அல்–கர்ழாவி, ஜமாஅதே இஸ்லாமியின் ஸ்தாபகர் அபுல் அஃலா மவ்தூதீ, இஹ்வானுல் முஸ்லிமீன் ஸ்தாபகர் இமாம் ஹஸனுல் பன்னா … போன்ற பெரியார்கள் பத்வாக்கள் வழங்கியதற்கமைய ஷீஆ சமூகத்தினரை தமது சக சகோதரர்களாக சுன்னாக்கள் மதித்துள்ளமை இங்கு நினைவு கூறத்தக்கது.

இஸ்லாமிய சமூகத்தைப் பிரித்தாளும் நோக்குடன் அமெரிக்காவும், சியோனிசமும் ஷீஆ சுன்னா மோதல்களையும், மத வன்முறைகளையும் முஸ்லிம் உலகில் தோற்றுவிக்க பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அண்மைக் காலங்களில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், குறிப்பாக ஈரானின் வளர்ச்சி, லெபனானிய ஹிஸ்புல்லாஹ்களின் இஸ்ரேலுக்கெதிரான போர்வெற்றி, மத்திய கிழக்கில் அமெரிக்கா கண்டுவரும் தொடரான தோல்விகள்… போன்றவை அமெரிக்காவின் கோபத்தையும், ஆத்திரத்தையும் மென்மேலும் சீண்டிவிட்டுள்ளன.

இதனால் அமெரிக்காவும், அதன் கூலிகளும் முஸ்லிம்களின் ஐக்கியத்தைச் சீர்குலைப்பதை இலக்குவைத்து செயற்பட்டு வருகின்றனர்.

ஷீஆக்களுக்கு மத்தியில் அறபு ஷீஆ, அஜமீ ஷீஆ, குர்திஷ் ஷீஆ என்ற மொழிப் பாகுபாட்டையும் சுன்னாக்களுக்கு மத்தியில் அரசியல் மற்றும் மத்ஹபு வேறுபாடுகளையும் பெரிது படுத்தி மோதல்களை உருவாக்கி வருகின்றனர். இதன் பின்னணியில் பித்அத்களுக் கெதிரான போராட்டம் எனும் தோரணையில், "இவர்கள் கூட்டுதுஆ ஓதுவோர், தொழுகையில் விரலசைக்காதோர், அவர்கள் தஃலீம் புத்தகத்தை மட்டும்

பின்பற்றுவோர், இவர்கள் மௌதூதியர், அவர்கள் பன்னாக்கள். மேலும், இவர்கள் செய்பவை அனைத்தும் பித்அத்கள். பித்அத்கள் அனைத்தும் வழிகேடானவை. வழிகேடுகள் அனைத்தும் நரகத்திற்கே செல்பவை. இதனால் இவர்கள் அனைவரும் நரகத்திற்கே செல்லக் கூடியவர்கள்" எனவும், "இவர்கள் குதுபுகளையும், மகான்களையும் பின்பற்றுவோர், அவர்கள் கபுறுகளைத் தரிசிப்போர், இவர்கள் மீலாத் விழா கொண்டாடுவோர், அவர்கள் சுன்னிகள், இவர்கள் ஷீஆக்கள், அவர்கள் ஸஹாபிகளுக்கு ஏசுவோர், இமாம்களைத் தூற்றுவோர்..." என்றெல்லாம் பிளவுக்குரிய விடயங்களைக் கூறி, ஒரே சமூகமாக இருந்த இஸ்லாமிய உம்மத்தை துண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

இன்று முஸ்லிம் சமூகம், உலக ஏகாதிபத்தியத்தின் சதிவலையில் சிக்கி அழிவையும், வீழ்ச்சியையும் நோக்கி சென்று கொண்டிருக்கிறது. நேரிய தலைமைத்துவமின்றி தேசம், மொழி, மற்றும் மத நம்பிக்கை என்பவற்றால் பிரிந்து பிளவுபட்டு, சிறிய காரணங்களுக்காக ஒருவரையொருவர் கொல்லும் அபாயகரமான நிலைக்கும், ஒருவரையொருவர் காஃபிர், முஷ்ரிக் எனப்பார்க்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக்... போன்ற நாடுகளில் ஷீஆப் பள்ளிவாயல்களை குண்டு வைத்துத் தகர்த்து, ஷீஆக்களை கொன்று, சுன்னிகள்மீது பழியைப்போட்டும், சுன்னிகளைக் கொன்று ஷீஆக்களின்மீது பழியைப் போட்டும் இரு குழுக்களுக்கிடையிலும் இரத்தக்களரிகளுக்கு வழியமைக்கின்றனர். இத்தீய செயல்களில் உண்மையான மார்க்கப்பற்று கொண்ட எந்த ஷீஆ, சுன்னி முஸ்லிமும் சம்பந்தப்படுவதில்லை. இதன் சூத்திரதாரிகள் அமெரிக்காவும், அதன் கூலிகளுமே. அண்மையில் ஈரானில் கைது செய்யப்பட்ட ஜுன்துல்லாஹ் எனும் பயங்கரவாத அமைப்பின் தலைவன் அப்துல் மாலிக் ரீகீயிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் இதற்குத் தக்க சான்றாகும்.

முஸ்லிம் சமூகம் தனது ஒற்றுமையையும், பலத்தையும் இழந்து நிற்பதால் சுமார் 60 வருடங்களுக்கு மேலாக அபகரிக்கப்பட்ட பாலஸ்தீன் மண்ணையும், முதல் கிப்லாவான மஸ்ஜிதுல் அக்ஸாவையும் மீட்டெடுப்பதற்கு அருகதையற்றுப் போயுள்ளது.

பலஸ்தீன், ஈராக், ஆப்கானிஸ்தான், லெபனான்... போன்ற நாடுகளில் அமெரிக்க, இஸ்ரேலியப் படையினரால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்படுவதுடன், அவர்களின் உடைமைகளும், உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. இத்தகைய நிலையில் முஸ்லிம்கள், மிக விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்படுதல் அவசியமானது.

சீரழிந்து, பலமிழந்து போயுள்ள முஸ்லிம் உலகம் இன்னுமின்னும் தம்மை ஏகாதிபத்தியத்தின் சதிவலைகளில் சிக்கவைக்காது, ஒற்றுமையுடனும், சகோதரத்துவ

உணர்வுடனும் செயலாற்றி, தமது பலத்தை கட்டியெழுப்பும் அவசிய மற்றும் அவசரத் தேவை அதற்குள்ளது.

73 கூட்டமாக நபிகளாரின் உம்மத் பிரிந்து காணப்படும் எனும் முன்னறிவிப்பு (இவ்வறிவிப்பு சரியாக இருப்பின்), எனது உம்மத்தில் காணப்படும் கருத்து முரண்பாடு ரஹ்மத்தாகும் எனக் கூறப்படும் நபிவாக்குகளுக்கு அமைய, இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலிருந்து ஷீஆ சுன்னா கொள்கை முரண்பாடுகள் மற்றும் கருத்து வேறுபாடுகள் (சமயத்தின் அடிப்படைகளில்லாது துணைவிடயங்களில்) காணப்பட்டு வருகின்றமையையும், அவை நேற்று , இன்று தோன்றியவையல்ல என்பதையும் நாம் மறந்துவிடலாகாது. அதேபோன்று மனிதர்கள் சிந்தனை முரண்பாட்டையுடையோர் என்ற இயற்கையின் நியதியையும் மறந்து செயற்படலாகாது.

இது இவ்வாறிருக்க, கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம், கொள்கைச் சுதந்திரம் என்ற உரிமைகளால் மனிதர்கள் தம் கொள்கை கோட்பாடுகளை வெளிப்படுத்துவதை குறைகாணவும் முடியாது.

ஆயினும் இஸ்லாத்தின் வரையறைக்குள் வாழும் ஒருவரின் பார்வையில், மற்றொருவர் பிழையான கருத்தில் இருப்பதாகத் தோன்றினால், அவரை சிறந்த நல்லுபதேசத்தாலும், நன்னடத்தையாலும் மாற்றமுயல்வது நாகரீகமாவும், இஸ்லாமியப் பண்பாடாகவும் அமையும். தவிர இஸ்லாமிய தஃவா செய்வதாக எண்ணி மார்க்கத்தின் பெயரால் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதும் சமூகத்தின் ஒற்றுமை, சகோதரத்துவம், சமயோசிதம் மற்றும் இங்கிதம் பேணாமல் செயற்படுவதும், பிறசிந்தனைப் பிரிவுகளை அருவருப்பான மற்றும் அசிங்கமான வழிமுறைகளில் விமர்சிப்பதும் சிறந்த வழிமுறையாகாது. இன்று ஷீஆக்களுக்கு எதிராக அரங்கேறும் பிரசார முன்னெடுப்புகளில் அதிகமானவைகளில் அறியாமை, காழ்ப்புணர்வு, சுயநலம், பகைமையுணர்வு காணப்படுவதுடன் முறைகேடான முறையில் அவர்களின் நம்பிக்கைகள் தூசிக்கப்பட்டு விமர்சிக்கப்படுகினறன.

(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! (16:125)

அல்லாஹ் விதித்த இவ்வொழுக்கமுறையை ஒவ்வொரு முஸ்லிமும் பேணிக் கொள்வது கடமையாகும். சமூகங்களை வழிநடாத்தும் உலமாக்கள் நிச்சயம் இதை முழுமையாக கடைப்பிடிப்பதுடன் அவர்களின் வாயிலிருந்து வெளிப்படும் எந்தவொரு கூற்றும் கருத்தும் ஆழ ஆராயப்பட்டு, ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்திருத்தல் அவசியமாகும்.

அவர் ஒரு மார்க்கப் பிரசாரகர் என்ற வகையில் மக்களுக்கு உண்மையை மட்டுமே கூறக் கடமைப்பட்டிருக்கிறார். அவர் மக்களுக்கு பிழையானவற்றைக்கூறி, அவர்கள் பிழையாக வழிநடாத்தப்பட்டால் அவர்கள் அனைவருக்காகவும் அவர் தண்டிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை.

காழ்ப்புணர்ச்சி, இயக்கவெறி முதலானவற்றைக் கொண்டு எக்கோட்பாட்டையும் விமர்சித்தல் ஒரு அழைப்பாளனின் குணாம்சமாக இருத்தல் கூடாது என்பதுடன், பிரசார முன்னெடுப்புகள் யாவும் இஸ்லாத்தை மாசுபடுத்த கங்கணம் கட்டிச் செயற்படும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு தீனியாக ஆகுவதற்கும் இடமளிக்காமல் செயற்படுவது கடமையாகும். இன்று முஸ்லிம்களைப் பிரித்தாள இஸ்லாத்தின் எதிரிகளான அமெரிக்காவும், சியோனிசமும் பல வகையான முனைப்புகளில் செயற்பட்டு வருகின்றமையை கவனத்திற் கொள்வதுடன், வெளியிடும் கருத்து சந்தேகத்திற்கிடமான மற்றும் இஸ்லாத்தின் எதிரிகளால் புனையப்பட்ட நூற்களை அடிப்படையாக கொண்டவையாக அமையாமலிருக்கவும் முயற்சிக்க வேண்டும்.

## ஷீஆயிஸத்தின் தோற்றமும் உருவாக்கமும்

ஷீஆ எனும் சொல்லுக்கு அகராதியில் கட்சி, குழு, பின்பற்றுதல், தொடர்ந்து செல்லுதல் எனும் கருத்துக்கள் காணப்படுகின்றன. (அல்–முஃஜமுல் வஸீத்)

இமாம் ஜௌஹரி தனது அகராதியில் “ஷீஆ எனும் சொல்லுக்கு பின்பற்றுதல் அல்லது பின்தொடருதல் எனும் கருத்தே மிகச் சிறந்தது. “ஷீஅதுர் ரஜுல்” (شيعة الرجل) ஒரு மனிதனின் ஷீஆ என்றால் அம்மனிதனைப் பின்தொடர்பவன் எனப் பொருளாகும்” என்கிறார். இக் கருத்தின் அடிப்படையில்தான் பின்வரும் அல்குர்ஆன் வசனங்களிலும் ஷீஆ எனும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

وإن من شيعته لابراهيم

“மேலும் நிச்சயமாக நூஹின் வழியைப் பின்பற்றுபவராக இப்றாஹீம் இருந்தார்” (37:83)

هذامن شيعته وهذامن عدوه

“இவர் அவரைச் சார்ந்தோரில் உள்ளவர், மற்றவர் அவருடைய எதிரிகளில் உள்ளவர்” (28:15)

இவ்விரு வசனங்களில் ஷீஆ எனும் சொல் ஒருவரைப் பின்பற்றுதல் அல்லது சார்ந்து செல்லல் எனும் அடிப்படையிலேயே பயன் படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஷீஆ எனும் பதம் நபியவர்களின் வபாத்தின் பின்னர் அலியைப் பின்பற்றுவோரைக் குறிக்கிறது என இமாம் ஜௌஹரி குறிப்பிடுகிறார். (அல்–முஃஜமுல் வசீத் – இமாம் ஜொஹரீ)

சொல்லாய்வாளர்கள் சிலரின் கருத்துகள்:

ஸஹ்ரிஸ்தானி: ஷீஆ என்போர், நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்னர் அலியைப் பின்பற்றியோரும், நபியவர்களால் வஸிய்யத் மூலம் அவருடைய இமாமத் தெளிவாக கூறப்பட்டதாகக்கருதுவோருமாவர். (அல்–மிலல் வன்னிஹல் பாகம்–1 பக்கம்–107)

இப்னு ஹஸ்ம் : நபி (ஸல்) அவர்களுக்குப் பின் அலி அவர்களே மிகச்சிறந்த மனிதர், அவரும், அவரது சந்ததியினருமே கிலாபத்திற்குத் தகுதியானவர்கள் என நம்பிக்கை கொண்டோரே ஷீஆக்கள். (அல்–பஸல் 02ஃ113)

இஸ்லாமிய வரலாற்றாசிரியர் இப்னு கல்தூன்: அலியவர்களையும், அவர்களது சந்ததியினரையும் நேசம் கொண்டோரே ஷீஆக்கள். (முகத்தமா: 138)

ஷீஆ நம்பிக்கைப்படி "ஷீஆ எனப்படுவது: நபி (ஸல்) அவர்கள் தனது வபாத்திற்குப் பின்னர் தமது மார்க்கத்தை குர்ஆன் மற்றும் அஹ்லுல்பைத் வழிகாட்டலினூடாக பின்பற்றும் படி பணிப்புரை வழங்கினார்கள் (ஹதீதுஸ் ஸகலைன் – ஸஹீஹ் முஸ்லிம்)

இதனை செவிமடுத்து அவ்விரண்டினூடாக நபி பெருமானாரின் மார்க்கத்தை பின்பற்றுவோரை ஷீஆ எனும் பதம் குறிக்கிறது. இக்கட்டளைக்கமைய நபியவர்களின் வபாத்திற்குப்பின் அஹ்லுல்பைத்தைச் சேர்ந்த 12 இமாம்களின் தலைமைத்துவத்தையேற்று வாழ்பவர்கள் ஷீஆ என்றழைக்கப்படுகின்றனர்".

(அகாயிதுல் இமாமிய்யா)

## ஷீஆ தோற்றம் பற்றிய சில ஊகங்கள்

- கிலாபத் தெரிவின் போது அலிக்கு ஆதரவளித்தோரே ஷீஆக்கள்.
  (தாரீஹ் இப்னு கல்தூன்: 03:364)(கலாநிதி ஹஸன் இப்றாஹீம் –தாரீகுல் இஸ்லாம்: 03:37)
- கலீபா உஸ்மானின் கொலை நிகழ்வின்போது தோன்றியோரே ஷீஆக்கள்.
  (இமாம் இப்னு ஹஸ்ம் – அல் பஸ்ல் பில் மிலல்...)
- ஜமல் யுத்தத்தின் போது அலியின் தரப்பிலிருந்து போராடியோரே ஷீஆக்கள்.
  (இப்னு நதீம் – அல் கவாரிஜ் வஷ் ஷீஆ:146)
- சிஃப்பீன் யுத்தத்தின் போது அலிக்கு ஆதரவாக செயற்பட்டோரே ஷீஆக்கள்.
  (கலாநிதி காமில் முஸ்தபா அஷ்ஷெய்ஃபி – அஸ்ஸிலது பைன தஸவ்வுஃப் வத்தஷய்யுஃ : 23)
- இமாம் ஹுஸைனின் கொலைக்குப்பின் அவர்களுக்கு உதவி செய்யவில்லை என்று கைசேதப்பட்டோரே ஷீஆக்கள்.
- ஈரானில் ஸஃபவீ ஆட்சியாளரால் தோற்றுவிக்கப்பட்டோரே ஷீயாக்கள்.
- அப்துல்லாஹ் இப்னு ஸபா எனும் யூதனால் தோற்றுவிக்கப்பட்டோரே ஷீஆக்கள்.

(ஸாமி நஸ்ஸார் – நஸ்அதுல் பிக்ரில் பல்சபில் இஸ்லாம் : 18)

ஒன்றோடொன்று முரண்படும் இக்கருத்துக்கள் அனைத்தையும் மறுக்கும் ஷீஆக்கள், ஷீஆ என்ற பதம் நபியவர்களின் காலத்தில் அவர்களாலேயே மொழியப்பட்டு, அதன் மூலம் தோற்றுவிக்கப்பட்டது என நம்புகின்றனர்.

## ஷீஆ உருவாக்கமும், நபிகளாரும்

நபி (ஸல்) அவர்கள், இமாம் அலியுடன் இணைந்திருந்த ஸஹாபிகளைப் பார்த்து "ஷீஅது அலி" (அலியின் கூட்டத்தினர்) எனக் குறிப்பிட்டார்கள், இதன்படி ஷீஆ ஸ்தாபகர் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள் என ஷீஆக்கள் நம்புகின்றனர். பின்வரும் ஹதீதை இதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர்.

عن جابربن عبدالله قال: كناعندالنبى (ص) فأقبل على فقال النبى (ص) والذى نفسى بيده إنَ هذا وشيعته لهم الفائزون يوم القيامة ونزلت"إن الذين آمنوا وعملواالصالحات الئک هم خيرالبرية (درالمنثور- سورة البينة 7)

ஜாபிர் பின் அப்தில்லாஹ்(ரழி) அறிவிக்கிறார்: "நாம் நபி (ஸல்) அவர்களுடன் ஒரு சபையில் உட்கார்ந்திருந்தோம் அவ்வேளை அலியவர்கள் அங்கு வருகை தந்தார், அப்போது நபி (ஸல்) அவர்கள் "எனது உயிர் எவன் கைவசமுள்ளதோ அவன்மீது ஆணையாக, நிச்சயமாக இம்மனிதரும், இவரது ஷீஆக்களும் (இவரைப் பின்பற்றுவோரும்) கியாமத் நாளில் வெற்றியாளர்களாவர்" எனக் கூறினார்கள். அப்போது "நிச்சயமாக படைப்புக்களில் எவர் விசுவாசங் கொண்டு, நற்செயல்களைப் புரிகிறார்களோ அவர்களே மிகச் சிறந்தோர் ஆவார்கள்." எனும் திருவசனம் (98:07) இறங்கியது.

(இமாம் சுயூதீ - துர்ருல் மன்தூர் )

இதே ஹதீதை பின்வரும் நூல்களும் பதிவு செய்துள்ளன.

இமாம் சௌகானி: பத்ஹுல் கதீர்: பக்கம் 398
இமாம் ஆலூசி : ரூஹுல் மஆனி: பக்கம் 570
இமாம் அல் பலாதரி: அன்சாபுல் அஸ்ரார்: பக்கம் 182
இமாம் அல் குவாரிஸ்மி: அல் மனாகிப்: பக்கம் 111
இமாம் ஹாகிம் ஹஸ்கானி: ஷவாஹிதுத் தன்ஸீல் 02ஃ356
தப்ஸீருத் தபரி 03:365 (சவூதிப் பதிப்பு)
இப்னு அஸாகிர்: அத்தாரீக் தர்ஜுமது அலி 02:442

إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ
وَقَوْله : { إِنَّ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَات } يَقُول تَعَالَى ذِكْره : إِنَّ الَّذِينَ آمَنُوا

بِاَللَّهِ وَرَسُوله مُحَمَّد , وَعَبَدُوا اللَّه مُخْلِصِينَ لَهُ الدِّين حُنَفَاء , وَأَقَامُوا الصَّلَاة , وَآتَوْا الزَّكَاة , وَأَطَاعُوا اللَّه فِيمَا أَمَرَ وَنَهَى .
أُولَئِكَ هُمْ خَيْرُ الْبَرِيَّةِ
يَقُول : مَنْ فَعَلَ ذَلِكَ مِنْ النَّاس فَهُمْ خَيْر الْبَرِيَّة . وَقَدْ : 29208 - حَدَّثَنَا ابْن حُمَيْد , قَالَ : ثنا عِيسَى بْن فَرْقَد , عَنْ أَبِي الْجَارُود , عَنْ مُحَمَّد بْن عَلِيّ { أُولَئِكَ هُمْ خَيْر الْبَرِيَّة }
فَقَالَ النَّبِيّ صَلَّى اللَّه عَلَيْهِ وَسَلَّمَ : " أَنْتَ يَا عَلِيّ وَشِيعَتك "
- تفسير الطبري - المملكة العربية السعودية
وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

ஆகவே, நபியவர்கள்தான் “ஷீஆ” எனும் பதத்தை இமாம் அலியைச் சார்ந்தோரைப் பார்த்து பிரயோகித்துள்ளார்கள் என்பதை மேற்குறித்த ஹதீதுகள் பறைசாற்றுகின்றன.

ஷீஆக்களில் “இமாமிய்யா” பிரிவினரே பிரதானமானவர்கள். இவர்களை “இஸ்னா அஷரிய்யா” என்றும் அழைக்கப்படுகிறது. மேலே கூறப்பட்ட நாடுகளில் காணப்படும் ஷீஆக்களில் அதிகமானோர் இமாமியாக்கள் ஆவர். சைதிய்யா, இஸ்மாயிலிய்யா (போரா), கீஸானிய்யா எனும் பிரிவுகளும் ஷீஆ எனும் நாமத்திற்குள் அடங்கினாலும் ஷீஆ எனும் சொல் சமகாலத்தில் இமாமிய்யாக்களையே குறிக்கிறது. இமாம் ஜஃபர் ஸாதிக் (அலை) எனும் ஷீஆக்களின் ஆறாவது இமாமின் காலத்தில் ஷீஆ மத்ஹப், பிக்ஹ் ரீதியாக உயர்ந்த வளர்ச்சியைக் கண்டதால் இம்மத்ஹப், ஜஃபரீ மத்ஹபு எனவும் அழைக்கப்படுகிறது.

## ஷீஆ நம்பிக்கைகள்

### 1.ஏகத்துவம்

அல்லாஹ் ஒருவன், அவன் தனித்தவன், உருவமற்றவன், எவ்வித தேவையுமற்றவன், அனைத்துப் படைப்பினங்களையும் படைத்தவனும் அவனே. அவற்றை பரிபாலிப்பவனும் அவனே. வணக்கவழிபாடு, பிரார்த்தனை, அழைத்தல் மற்றும் கேட்டல் ஆகிய அனைத்திற்கும் தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே. அவனையன்றி பிறரிடம் கேட்பதும், பிரார்த்திப்பதும் அவர்களை தனது தேவைகளை நிறைவேற்றும் தனியாற்றல் கொண்டவர்களாக கருதுவதும் ஷிர்க் எனும் மன்னிக்கப்படமுடியாத பெரும்பாவமாகும்.

### 1.1.நீதி

இப்பிரபஞ்சம் நீதியின் அடிப்படையில் அமையப்பெற்றவை. இறைவனின் செயற்கள் அனைத்தும் நீதியானவையே. அவன் எவருக்கும் நீதிக்குப்புறம்பாக அநீதியை நாடுவதில்லை. எனவே நன்மை, தீமை இவ்விரண்டையும் மனிதனே தெரிவுசெய்கிறான்.

إِنّ اللهَ لا يَظْلِمُ مِثْقَالَ ذَرّةٍ

நிச்சயமாக அல்லாஹ் (எவருக்கும்) அணுவளவுங்கூட அநியாயம் செய்யமாட்டான். (4:40)

إِنّ اللهَ لا يَظْلِمُ النّاسَ شَيْئًاوَلَـكِنَّ النَّاسَ أَنفُسَهُمْ يَظْلِمُونَ

நிச்சயமாக அல்லாஹ் மனிதர்களுக்கு எவ்வித அநியாயமும் செய்வதில்லை. எனினும் மனிதர்கள்தான் தமக்குத்தாமே அநியாயம் செய்துகொள்கின்றனர் (10:44)

### 2.நபித்துவம்

ஷீஆ நம்பிக்கையில் “இறைவன் மனிதனைப் படைத்து, அவனது கட்டளைப் பிரகாரம் மனிதன் வழிநடாத்தப்பட, நபிமார்களையும், ரஸூல்மார்களையும் இவ் வுலகிற்கு அனுப்பினான். இவர்களில் முதலாமவர் ஹஸரத் ஆதம் (அலை) அவர்களும், இறுதியானவர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் ஆவார்கள். முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்குப்பின் எந்த நபியும், வஹியும் வரப் போவதில்லை. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் இஸ்லாம் மார்க்கம் மட்டுமே இறுதி மார்க்கமாகும். நபிமார்கள் அனைவரும் இறைதீனை முழுமையாகப் பின்பற்றி, மனிதர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து, அந்த மார்க்கத்தை மக்களுக்கு எத்திவைக்கவே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதனால் அவர்கள் யாவரும் மஃஸூம் (தவறிழைக்காதவர்) களாகவே இருப்பர். நபியானவர் பாவம் செய்யக்கூடியவராக அல்லது தவறிழைப்பவராக இருப்பின், அவரின் மீதுகொண்ட நம்பிக்கையின்மையால் அவரின் அழைப்பை (தஃவாவை) மனித சமூகம் ஏற்கமாட்டாது. இதனால் நபி என்பவர் ஒருபோதும் பாவமோ, தவறோ செய்யமாட்டார். நபிமார்கள் மற்றும் ரஸூல்மார்கள் வரிசையில் இறுதியாக வந்துதித்த முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அனைத்து இறைத்தூதர்களிலும் மேலான சிறப்புகளைப் பெற்றவர்கள்.

இப்புனித நபியை, அல்லாஹு தஆலா நபித்துவத்தை அருளுவதற்கு முன்பிருந்தே பிழைகள், தவறுகள் போன்ற சிறிய, பெரிய பாவங்கள் அனைத்திலுமிருந்தும் பாதுகாத்தான்.

மனித வர்க்கத்தின் நித்திய சட்டநூலாக, அருள்மிகு அல்குர்ஆனை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கியருளினான். இத்தகு, மகத்துவமிக்க நபியவர்கள் தமது தூதுப்பணியை திறம்படச் செய்து, அல்லாஹ்வின் அமானிதமான இஸ்லாம் எனும் தூதை தூய்மையான வடிவில் பரிபூரணமாக மனிதர்களிடம் ஒப்படைத்தார்கள். இதில் அவர்கள் எவ்வித சுயநலனைக் கொண்டிருக்கவுமில்லை எக்குறையையும் விட்டுவைக்கவுமில்லை தமது சகல உலக இன்பங்களையும் இஸ்லாத்தின் வெற்றிக்காகவே தியாகம் செய்தார்கள்".

நபி (ஸல்) அவர்களின் வரலாற்றுச் சரித்திரத்தையும், அவர்களது சிறப்புகளையும் பற்றி ஷீஆ அறிஞர்கள் ஆயிரக்கணக்கான நூல்களை யாத்துள்ளனர். இதற்குச் சான்றாக பின்வரும் நூற்களைக் குறிப்பிடலாம்:

கிதாபுல் இர்ஷாத் – செய்க் முபீத்

இஃலாமுல் வரா ஃபீஅஃலாமில் ஹுதா – தப்ரஸீ

தாயிரத்துல் மஆரிஃப்

பிஹாருல் அன்வார் – அல்லாமா மஜ்லிஸி

மவ்ஸூஅதுர் ரஸூலில் முஸ்தபா(ஸல்) – செய்யித் முஹ்ஸின் காதமி

### 3.இமாமத் (தலைமைத்துவம்)

நபி (ஸல்) அவர்களின் 23 வருடகால அயராத உழைப்பின் பயனாக இஸ்லாமிய சாம்ராஜ்யம் இப்புவியில் கட்டியெழுப்பப்பட்டு இறையாட்சி வியாபிக்கலானது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர், அவர்கள் போதித்த மார்க்கம் இறுதிமார்க்கம் எனும் வகையில் அவர்கள் நான்கு பாரிய பொறுப்புக்களைச் சுமந்தவர்களாகக் காணப்பட்டு, அந்நிலையிலேயே வபாத்தானார்கள். அவைகளாவன:

- புதிதாகத் தோற்றம் பெற்ற இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த ரோம் பாரசீகப் பேரரசுகள், முஸ்லிம் சமூகத்தினுள் ஊடுருவிய முனாஃபிகீன்கள் மற்றும் யூத கிறிஸ்தவ சதிகாரர்களின் சதிகளிலிருந்து இஸ்லாத்தைப் பாதுகாத்தல்.
- புனித அல்குர்ஆனை காலத்தேவைக்கேற்ப மனிதசமுதாயத்திற்கு வியாக்கியானம் செய்தல்.
- இறுதிநாள்வரை சகலவித திரிபுகளிலுமிருந்தும், இஸ்லாத்தின் தூய்மையைப் பாதுகாத்தல்.
- எதிர்காலத்தில் இஸ்லாம் சந்திக்கின்ற சவால்களை எதிர் கொள்ளல், மற்றும் அது சம்பந்தமாக எழுகின்ற ஐயங்களுக்குப் பதிலளித்தல்.

நபியவர்கள் உயிருடன் இருந்த காலப்பகுதியில் இவ்விடங்களுக்கு எவரும் தேவைப்படவில்லை. அவர்களே அப்பொறுப்புகளை செய்துவந்தார்கள். ஆனால் அவர்களின் வபாத்திற்குப்பின் குறித்த பொறுப்புகளைச் செய்ய நபியவர்களால் எவரும் பொறுப்பாக்கப்பட்டனரா? அல்லது நபியவர்கள் இப்பொறுப்புகளுக்கு எவரையும் நியமிக்காமல் தன் சமூகத்தை விட்டுச் சென்றார்களா? எனும் வினா எழுகிறபோது, இவ்வெற்றிடத்திற்கு எவரையும் நியமிக்காமலேயே நபியவர்கள் வபாத்தானார்கள் என முஸ்லிம்களில் ஒரு தரப்பினர் (அஹ்லுஸ்ஸுன்னாக்கள்) நம்பிக்கை கொள்ள,
நபியவர்கள் இல்லாத காலப்பகுதியில் நபியவர்களின் இவ்வெற்றிடத்தை நிரப்பி, அவர்கள் கொண்டுவந்த அல்குர்ஆனை, அவர்களின் விளக்கப்படியே வியாக்கியானம் செய்து, மார்க்கத்தை அவர்கள் போதித்தபடியே எவ்வித கூட்டல் குறைத்தலின்றி எதிர்கால சமுதாயத்திற்கு கியாமத் நாள் வரைக்கும் போதிக்க, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலம் அஹ்லுல்பைத்துக்கள் நியமிக்கப்பட்டனர் என்பதாக ஷீஆக்கள் நம்பிக்கை கொள்கின்றனர்.

இதனை எடுத்தியம்பும் நபிமொழிகளில் சிலதை இங்கு நோக்குவோம்.

عن زيد بن أرقم (رض) ،قال قام رسول الله صلى الله عليه وسلم يوما فينا خطيبا بماء يدعى خما بين مكة والمدينة فحمد الله وأثنى عليه ووعظ وذكر ثم قال أما بعد ألا أيها الناس فإنما أنا بشر يوشك أن يأتي رسول ربي فأجيب وأنا تارك فيكم ثقلين أولهما كتاب الله فيه الهدى والنور فخذوا بكتاب الله واستمسكوا به فحث على كتاب الله ورغب فيه ثم قال وأهل بيتي أذكركم الله في أهل بيتي أذكركم الله في أهل بيتي أذكركم الله في أهل بيتي.

சைதிப்னு அர்கம் (ரழி)கூறுகிறார்:
ஒருமுறை நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்கும், மதீனாவிற்கும் இடையிலுள்ள "கதீர்கும்" எனும் நீரூற்றடியில் நின்று குத்பா பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினார்கள்.
அதில் அல்லாஹ்வை போற்றிப்புகழ்ந்து, (மக்களுக்கு) உபதேசம் புரிந்த அவர்கள் "மனிதர்களே...! நிச்சயமாக நான் ஒரு மனிதனாவேன். எனது இறைவனின் தூதர்(மலகுல் மௌத்) என்னிடம் வந்து நான் அவரின் அழைப்பிற்கு பதிலளிக்கும் நேரம் நெருங்கி விட்டது. நான் உங்களுக்கு பெறுமதிமிக்க இரு விடயங்களை விட்டுச்செல்கின்றேன். அதில் முதலாவது ஒளியும், நேர்வழியுமிக்க இறைவனின் வேதமாகும். இறைவனின் அவ்வேதத்தை பின்பற்றி நடங்கள். இன்னும் அதை பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். –அல்லாஹ்வின் வேதத்தை வலியுறுத்திக் கூறிய நபியவர்கள்–(இரண்டாவது) எனது அஹ்லுல்பைத்தினராவர். எனது அஹ்லுல்பைத்தினர் விடயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை ஞாபகமூட்டுகிறேன். எனது அஹ்லுல்பைத்தினர் விடயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை ஞாபகமூட்டுகிறேன். எனது அஹ்லுல்பைத்தினர் விடயத்தில் நான் உங்களுக்கு அல்லாஹ்வை ஞாபகமூட்டுகிறேன்." என (மூன்றுமுறை) கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் 7: 122)

பிறிதொரு இடத்தில் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

إنّي تاركٌ فيكُم الثَقَلَيْن كتابَ الله وَعِتْرَتي أهلَ بَيْتي ما إنْ تَمَسَّكْتُمْ بهما لَنْ تَضلُّوا أبَداً وإنّهما لَنْ يَفْتَرِقا حَتى يَرِدا عَلَيّ الحَوْضَ.

நான் உங்கள் மத்தியில் பெறுமதிமிக்க இரு விடயங்களை விட்டுச்செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் இறுக்கமாகப் பற்றிப்பிடித்துக் கொண்டால் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள். அது அல்லாஹ்வுடைய வேதமும், எனது குடும்பத்தினராகிய அஹ்லுல்பைத்துமாகும். இவ்விரண்டும் ஹவ்ழ் (எனும் சுவனத்தின் நீர்த்தடாகத்தில் நீர் அருந்த) என்னிடம் வரும்வரை ஒன்றையொன்று பிரியமாட்டாது.

(திர்மிதி 2:307ளூ தாரமீ 2:432ளூ முஸ்னத் அஹமத் 3:14,17,26,59 ஹாகிம் 3:109)

அஹ்லுல்பைத்தினர் இமாமத் எனும் இப்பாரிய பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டோர் என்பதை குறித்த ஹதீதுகள் வலியுறுத்துகின்றன.

நபியவர்களின் வபாத்திற்கு முன்னரோ, பின்னரோ இறைக்கோட்பாட்டை நம்பிவாழ்ந்த சமூகம் இத்தகைய தலைமைத்துவமின்றி இருக்காது என்பது குர்ஆனினதும், ஹதீதினதும் கூற்றாகும். இறைவன் தனது அருள் மறையில் கூறுகிறான்:

يَوْمَ نَدْعُو كُلَّ أُنَاسٍ بِإِمَامِهِمْ فَمَنْ أُوتِيَ كِتَابَهُ بِيَمِينِهِ فَأُوْلَـئِكَ يَقْرَؤُونَ كِتَابَهُمْ وَلاَ يُظْلَمُونَ فَتِيلا

(நபியே) நாம் எல்லா மக்களையும் அவர்களுடைய தலைவர்களுடன் அழைக்கும் நாளை (நீர் நினைவூட்டுவீராக அந்நாளில்) எவருடைய (செயற்குறிப்பு) ஏடு அவருடைய வலக்கையில் கொடுக்கப்படுகிறதோ அவர்கள் தம் ஏடுகளை (நிம்மதியுடன்) படிப்பார்கள். இன்னும் அவர்கள் அணுவளவும் அநீதிக்குள்ளாக மாட்டார்கள். (17:71)

மேலும் குர்ஆன் கூறுகையில்,

وَيَقُولُ الَّذِينَ كَفَرُواْ لَوْلاَ أُنزِلَ عَلَيْهِ آيَةٌ مِّن رَّبِّهِ إِنَّمَا أَنتَ مُنذِرٌ وَلِكُلِّ قَوْمٍ هَادٍ

இன்னும் இந்நிராகரிப்போர், (நபியே உம்மைப்பற்றி) அவருக்கு அவருடைய இறைவனிடமிருந்து (நாம் விரும்பும்) அத்தாட்சி இறக்கப்பட வேண்டாமா? என்று கூறுகிறார்கள். நீர் அச்சமூட்டி எச்சரிப்பவரே ஆவீர். மேலும் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு நேர்வழிகாட்டியுண்டு. (13:07)

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அருளினார்கள்:

من مات ولم يعرف امام زمانه مات ميتة جاهلية

எவர் தனது காலத்திற்குரிய இமாமை (வழிகாட்டியை) அறியாமல் மரணிக்கிறாரோ, அவர் ஜாஹிலிய்யா காலத்தில் மரணித்தவராவார். (முஸ்னத் அஹமத்)

இதனடிப்படையில் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு இமாமை தனது உம்மத்தின் தலைவராகவும், தமது பிரதிநிதியாகவும் நியமித்தார்கள். இஸ்லாமிய சமயத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களை வழிநடாத்த, நபியவர்களின் மூலம் அஹ்லுல் பைத்தைச் சேர்ந்த 12 இமாம்கள் இதற்காக அறிமுகப்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஒருவரின்பின் ஒருவராக, ஒவ்வொரு காலத்தினதும் சமூகத்தின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று அவர்களை வழிநடாத்துவார்கள் என்பது ஷீஆ நம்பிக்கையாகும்.

இதனை நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

لايزال الاسلام عزيزأ الي اثني عشر خليفة كلهم من قريش
பன்னிரண்டு கலீபாக்கள் (தோன்றி, அவர்கள்) உள்ளவரை இஸ்லாம் பலமாகவே இருக்கும். அவர்கள் அனைவரும் குறைஷி வம்சத்தைச் சேர்ந்தோர்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுல் இமாரா)

عن جابر بن سمرة قال: سمعت رسول‌الله صلی‌الله‌علیه وسلم يقول: «لايزال الاسلام عزيزاً إلى اثنىعشر خليفة» ثم قال كلمة لم أفهمها، فقلت لأبى فقال: كلهم من قريش.

ஜாபிருப்னு சமுரா அறிவிக்கிறார்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற, நான் செவியுற்றேன். அவர்கள் கூறினார்கள். "பன்னிரண்டு கலீபாக்கள் (தோன்றி, அவர்கள்) உள்ளவரை இஸ்லாம் பலம் பெற்றிருக்கும்" - பின்னர் நபியவர்கள் கூறிய ஒரு வார்த்தை எனக்குக் கேட்கவில்லை. அதனை என் தந்தையிடம் வினவ அதற்கவர், "அவர்கள் அனைவரும் குறைஷி வம்சத்தைச் சேர்ந்தவர்கள்" என (நபியவர்கள் குறிப்பிட்டதாக) கூறினார்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் அஹ்காம், பாபுல் இஸ்திக்லாப்)

குறிப்பிடப்பட்ட திருமறை வசனங்களுக்கமைய ஒவ்வொருகாலத்திற்கும் ஒவ்வொரு இமாம்(வழிகாட்டி) இருப்பார் என்பதும், மேற்குறித்த நபிமொழிகளுக்கமைய 12 இமாம்கள் இஸ்லாமிய உம்மத்தை வழிநடாத்த நியமிக்கப்பட்டனர் என்பதும் ஷீஆ நம்பிக்கைக்கு வலுச்சேர்ப்பதாக உள்ளது.

மேலும் ஷீஆ நம்பிக்கைப்படி நபியவர்களால் நியமனம் பெற்ற இமாம்கள் அல்லது அந்த இமாம்கள் மூலம் நிர்ணயிக்கப்படும் முஜ்தஹிதுகள் (மார்க்க சட்டவியலாளர்கள்) முதலானோரையன்றி வேறு எவரும் மார்க்கத் தீர்ப்புகளை மக்களுக்கு எடுத்துக் கூற அனுமதிக்கப்படமாட்டார்கள். நபியவர்களால் நியமனம் பெற்ற இமாம்கள், நபியவர்கள் போதித்ததை உள்ளபடி மக்களுக்கு எடுத்துக்கூறும் பொறுப்பைச் சுமந்தவர்களாக இருக்கும் அதேவேளை நபியவர்களின் மார்க்கத்தை எவ்வித திரிபும், மாற்றமும் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கும் பாதுகாவலர்களாகவும் செயற்படுவார்கள்.

ஷீஆக்களின் ஆறாவது இமாமான, இமாம் ஸாதிக் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"لاتقبلواعليناحديثنا إلاماوافق القرآن والسنة أو تجدون معه شاهدا من احاديثنا المتقدمة... ولاتقبلواعلينا ماخالف قول ربنا تعالى وسنة نبينا محمد(ص) فإنا إذاحدثنا قلنا قال الله عزوجل وقال رسول الله (ص)"

குர்ஆனுக்கும், சுன்னாவுக்கும் அமைவாக இருக்கின்ற எமது கருத்தைத் தவிர, வேறெதனையும் எம்மிடமிருந்து நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம். அல்லது அதனை அத்தாட்சிப்படுத்தும் எமது முன்னைய கூற்றுக்களில் சான்று இருந்தாலுமே தவிர. மேலும் எமது இரட்சகனின் சொல்லுக்கு மாற்றமாகவோ, எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு மாற்றமாகவோ அமையும் எமது எந்த விடயத்தையும் நீங்கள் அங்கீகரிக்கவும் வேண்டாம்.

நிச்சயமாக நாங்கள் எதைச் சொல்வதாக இருந்தாலும், கண்ணியமிக்க அல்லாஹ் கூறுகிறான், இறைத்தூதர் கூறுகிறார்கள் என்று (அவர்கள் கூறியவற்றையே நாம்) கூறுகிறோம். (ரிஜாலுல் கஷ்ஷீ பக்:223 ஹதீஸ்:401)

மற்றொரு ஹதீதில் இமாம் ஸாதிக் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

إنا عن الله وعن رسوله نحدث ولانقول قال فلان وفلان فيتناقض كلامنا إن كلام آخرنا مثل كلام أولنا وكلام أولنا مصداق لكلام آخرنا وإذا أتاكم من يحدثكم بخلاف ذالک فردوه عليه.

“நிச்சயமாக நாம் இறைவனும், அனது தூதரும் கூறியவற்றையே சொல்லுகிறோம். எமது கருத்துக்கள் ஒன்றோடொன்று முரண்படும் வகையில், அவரிவர் சொன்னதாக நாம் எதனையும் கூறவில்லை. நிச்சயமாக எமது புதிய கூற்றானது, எமது பழைய கூற்றுடன் என்றும் ஒத்ததாகவே இருக்கும். எமது முதற்கூற்று, எமது இறுதியுரையின் உருப்பொருளாகவே இருக்கும். (இதனால்) இதற்கு மாற்றமாக எவர் (எம்மிடமிருந்து) எதைக்கூறினாலும் அதனை மறுத்து விடுங்கள்”

(ரிஜாலுல் கஷ்ஷீ பக்:223 ஹதீஸ்:402)

மார்க்கத்தில் எழும் பிரச்சினைகளுக்கு குர்ஆன் கூறும் சரியான தீர்வு என்ன? அவைபற்றி நபிவர்களின் வழிமுறை என்ன சொல்கிறது? என்பதை ஒரு முஸ்லிம் தெளிவாக அறிந்து, இறைவனின் எதிர்பார்ப்புக்கமைய நடந்தொழுக விரும்பினால், அவற்றை மேற்குறிப்பிட்ட இமாம்கள் ஊடாக மாத்திரமே அறிந்து செயற்படக் கடமைப்படுகிறார். நபியவர்கள் இல்லாத காலத்தில், அவர்களின் மார்க்கத்தை மக்களுக்கு தெளிவு படுத்த, உத்தியோகபூர்வமாக நபியவர்களால் நிர்ணயிக்கப்பட்ட இமாம்களின் வழியினூடாக அன்றி, வேறவரிடத்தில் நபிவழியைத் தேடமுனைந்தால், அது மனிதனை சரியான பாதைக்கு இட்டுச் செல்லாது என்பது ஷீஆ நம்பிக்கை.

சாதாரண மார்க்க அறிஞர்கள் குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஏனைய மூலாதாரங்களை வைத்து எடுக்கும் எந்தத் தீர்ப்புகளும், விளக்கங்களும், நபியவர்களது சுன்னாவையும் குர்ஆனின் கருத்தாக்கத்தையும் முழுமையாகத் தழுவியன என்ற, உத்தரவாதத்தைக் கொண்டதாக அமையுமா? என்பது ஐயத்திற்கிடமானதே. அண்மைக்கால நிகழ்வுகளை அவதானிக்கும் போது ஒவ்வொரு பிரிவும் தாமே சத்தியத்தில் இருப்பதாகவும், நபியவர்களின் சுன்னாவைத் தாமே யதார்த்தமாகப் பின்பற்றுவதாகவும் கூறி, பிறர் அசத்தியத்திலும், வழிகேட்டிலும் இருப்பதாகக் கருதுகின்றனர். இங்கு நபியவர்களின் சுன்னாவை யதார்த்தத்தமாகப் பின்பற்றுவோர் யார்? என வினா எழுப்பப்படுகின்றபோது மார்க்கத்தின் ஆழ அகலத்தை முழுமையாகத் தெரியாதவர் எவரும் குர்ஆன், ஹதீதை சரியாகப் புரிந்துகொள்வார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. நபிகளாரின் மார்க்கத்தை மக்களுக்கு எடுத்துக் கூற அவர்களால் நியமிக்கப்படாத இமாம்கள்,

முஃப்திகள், உலமாக்கள் மற்றும் முஜ்தஹிதுகளின் மார்க்க விளக்கங்களையும், தீர்ப்புகளையும் ஏற்றுப் பின்பற்றுவது, மறுமையில் மனிதனை பாதுகாக்கும் என உறுதிப்பட கூறமுடியாது.

ஏனெனில் இத்தகையோர், தவறிழைக்கக்கூடிய சாதாரண மனிதர்கள் என்ற காரணத்தினால் மார்க்க விடயங்களில் இவர்களது இஜ்திஹாத் முயற்சி ஆழங்குன்றி, இவர்களால் வெளியிடப்படும் ஃபத்வாக்கள், விளக்கங்கள் முழுமையற்று விடலாம் அல்லது பிழைத்துவிடலாம். இன்று முஸ்லிம் சமூகத்தில் மார்க்க அறிஞர்களாக நோக்கப்படுவோர், மார்க்கத்தைப்பற்றிய விரிவான பார்வையைக் கொண்டில்லாமலும், மட்டுப்படுத்தப்பட்ட ஹதீஸ்களை மாத்திரம் கண்டுகொண்டும் பத்வாக்களை வழங்குவதும், பின்னர் அதனை திருத்திக்கொண்டு மீளப்பெற்றுக் கொள்வதுமான துரதிஷ்ட நிலைகள் இவற்றுக்கான சான்றுகளாகும். இதன்தொடரில், தமிழ் இஸ்லாமிய உலகில் அண்மைக்காலமாக அறிஞரெனப் பேசப்பட்டு வந்த தமிழ் நாட்டைச்சேர்ந்த ஒருவர், நெஞ்சில் தக்பீர் கட்டுதல், விரலசைத்தல், பெண்கள் சியாரத்திற்கு செல்லுதல், ஸகாத் கொடுத்தல் போன்ற அம்சங்களில் ஃபத்வாக்களை வழங்கி பின்னர் அவற்றில் மாற்றமிருப்பதாகக் கூறி, அவற்றை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

குர்ஆன், ஹதீதைப் பற்றிய ஆழ்ந்தறிவில்லாமல், மார்க்கத்தை விளங்கி மக்களுக்கு ஃபத்வா வழங்கும் அதிகாரத்தை நபியவர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட அஹ்லுல்பைத் இமாம்களிடமிருந்தோ பெறாத முஃப்திகளுக்கும் இமாம்களுக்கும் கட்டுப்படுதல், மனிதனை நபிகளாரின் சரியான சுன்னாவை விட்டும் வழிதவறச் செய்துவிடும்.

மேற்குறித்த பிழையான முறைகளில் நபிவழியைத் தேடமுனைதல், பிழையான அணுகுமுறை என்பதில் தெளிவுற்ற ஷீஆக்கள்,இதற்காகவே நபியவர்கள் தமக்குப் பின், தம்வழிமுறையை மக்களுக்குப் பிழையின்றி எடுத்துக்கூறவும்,அவர்களை இஸ்லாமியப் பாதையில் சரியாக வழிநடாத்தவும் உத்தியோகபூர்வமான பன்னிரண்டு இமாம்களை நியமித்தார்கள் என்ற தத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள். இதற்காக அஹ்லுல்பைத் இமாம்கள் சமூகத்தை வழிநடாத்துவதற்குத் தேவையான அனைத்து அறிவுரைகளையும், உபதேசங்களையும் நபியவர்கள் இவர்களுக்கு வழங்கிவிட்டுத்தான் வபாத்தானார்கள் என்றும் நம்புகிறார்கள்.

ஒருமனிதன் இன்னொரு மனிதனின் உடலில் தோற்றுவிக்கும் ஒரு சிறிய கீறலுக்கான அபராதம் என்னவென்ற மிகச் சிறிய விடயம் முதல் ஒரு அரசை நிருவகிக்கும் வழிமுறை வரைக்குமான பல்வேறு விடயங்கள், எதிர்காலத்தில் உலக அறிவியல் வளர்ச்சியினால் இஸ்லாம் எதிர்நோக்கவிருக்கும் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றிய விடயங்கள் முதலானவற்றை நபி (ஸல்) அவர்கள் தமது அஹ்லுல்பைத் இமாம்களுக்குப் போதித்தார்கள் என்பது ஷீஆ நம்பிக்கையாகும்.

நபியவர்கள் தமது சமூகத்தின் எதிர்கால தலைமைத்துவத்தைக் கருத்திற்கொண்டு அஹ்லுல்பைத் இமாம்களில் முதலானவரான இமாம் அலி (அலை) அவர்களை அறிவு, ஆன்மீகம் மற்றும் ஆளுமை ரீதியாக நன்கு பயிற்றுவித்தார்கள். இதனால் இமாம் அலி (அலை) அவர்கள் அறிவிலும், ஆளுமையிலும் நிகரற்றவராகத் திகழ்ந்தார்கள். அவர்களின் அறிவாற்றலைப் புலப்படுத்தக் கூடியதாக "நஹ்ஜுல்பலாகா" எனும் அற்புதநூல் காணப்படுகிறது. இமாம் அலி(அலை) அவர்கள், நபி(ஸல்) அவர்களிடமிருந்து கற்றவைகளை தமக்குப்பின் இமாமாகத் திகழ்ந்த இமாம் ஹஸன் (அலை) அவர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். இமாம் ஹஸன்(அலை) அவர்கள் தமக்குப்பின் வந்த இமாமுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு இமாமும் தமக்குப்பின் தோன்றிய இமாமுக்கு அவற்றைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனக்குப்பின் இஸ்லாமிய உம்மத்தை வழிநடாத்துவதற்கு தமது பிரதிநிதிகளாக பன்னிரண்டு இமாம்களைக் கருத்திற்கொண்டு அவர்களின் பெயர்களை தெளிவாக அறிவித்தார்கள். இவ்விடயத்தை பின்வரும் ஹதீஸ் பறைசாட்டுகிறது.

நஃதல் எனும் பெயருடைய மனிதர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இறைவனின் ஏகத்துவம் பற்றியும், நாயகத்தின் வபாஅத்திற்குப் பிறகு தோன்றவிருக்கும் பிரதிநிதிகள் பற்றியும் வினவினார். அதற்கு நாயகம் (ஸல்) அவர்கள், இறைவனின் ஏகத்துவத்தைப் பற்றி விளக்கிவிட்டு, இமாம்களின் பெயர்களை ஒன்றன்பின் ஒன்றாக பின்வருமாறு கூறினார்கள்.

اِنَّ وَصِيِّي عَلِيٌّ بْنُ اَبِي طَالِبْ , وَبَعْدَهُ سِبْطَايِي الْحَسَنُ وَالْحُسَيْنُ , تَلُوْهُ تِسْعَةٌ اَئِمَّةٍ مِنْ صُلْبِ الْحُسَيْنِ قَالَ نَعْثَلُ يَامُحَمَّدُ فَسَمِّهِمْ لِي
قَالَ(ص): اِذَا مَضَي الْحُسَيْنُ فَابْنُهُ عَلِيٌّ فَاِذَا مَضَي عَلِيٌّ فَابْنُهُ مُحَمَّدٌ فَاِذَا مَضَي مُحَمَّدٌ فَابْنُهُ جَعْفَرُ فَاِذَا مَضَي جَعْفَرُ فَابْنُهُ مُوْسَي فَاِذَا مَضَي مُوْسَي فَابْنُهُ عَلِيٌّ فَاِذَا مَضَي عَلِيٌّ فَابْنُهُ مُحَمَّدٌ فَاِذَا مَضَي مُحَمَّدٌ فَابْنُهُ عَلِيٌّ فَاِذَا مَضَي عَلِيٌّ فَابْنُهُ الْحَسَنُ فَاِذَا مَضَي الْحَسَنُ فَابْنُهُ الْحُجَّةُ مُحَمَّدٌ الْمَهْدِي فَهؤُلاَءِ اثْنَا عَشَرَ .

எனது பிரதிநிதி அலி இப்னு அபீதாலிப், அவருக்குப்பின் எனது பேரர்களான ஹஸன் ஹுஸைன் ஆகியோராவர். அதன் பின் ஹுஸைனின் வழித்தோன்றலிலிருந்து ஒன்பது இமாம்கள் தோன்றுவர்' என நாயகம் (ஸல்) அவர்கள் கூற, அவர்களின் பெயர்களையும் குறிப்பிடுமாறு அம்மனிதர் வேண்டியதற்கு நபியவர்கள் ஹுஸைனின் காலம் முடிந்த பிறகு அவரது மகன் அலியும் (இமாம் ஸஜ்ஜாத்), அலிக்குப்பின் அவரது மகன் முஹம்மதும்(இமாம் பாக்கிர்) முஹம்மதிற்குப் பின் அவரது மகன் ஜஃபரும் (இமாம் ஜஃபர் ஸாதிக்), ஜஃபருக்குப்பின் அவரது மகன் மூஸாவும் (இமாம் காழிம்),

மூஸாவுக்குப் பிறகு அவரது மகன் அலியும்(இமாம் ரிழா), அலிக்குப் பிறகு அவரது மகன் முஹம்மதும் (இமாம் ஜவாத்), முஹம்மதுக்குப் பிறகு அவரது மகன் அலியும் (இமாம் ஹாதீ), அலிக்குப் பிறகு அவரது மகன் ஹஸனும் (இமாம் அஸ்கரீ), ஹஸனுக்குப் பிறகு அவரது மகன் முஹம்மத் மஹ்தியும் ஆவார்கள். இவர்களே அப்பன்னிரண்டு பேர் (இமாம்கள்) ஆவார்கள்' என பதிலளித்தார்கள்.
( யனாஃபீஉல் மவத்தா–ஹனஃபீ கன்தூஸீ, பக்கம்–441)

ஆகவே நபி (ஸல்) அவர்களின் சுன்னா வழிமுறையை சரியாகப் பின்பற்ற முனையும் ஒவ்வொருவரும் குர்ஆன், அஹ்லுல்பைத் ஆகிய இரண்டினூடாகவே செல்லல் வேண்டும் என்பது ஷீஆ நம்பிக்கை.

## 3.1.இமாம் மஹ்தி(அலை)

ஷீஆ நம்பிக்கையில், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது உம்மத்திற்குரிய இறுதிவழிகாட்டியாகவும் இமாமாகவும், இமாம் மஹ்தி (அலை) அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். இவர் 12 இமாம்களின் தொடரில் இறுதியானவர். அன்னை பாத்திமா நாயகி அவர்களின் வழித்தோன்றலாகக் இவர் காணப்படுவார்.

“மஹ்தி எனது குடும்பத்தைச் சேர்ந்தவரும், இவர் பாத்திமாவின் சந்ததியில் உள்ளவருமாவார்”. என நபி(ஸல்) அவர்கள் அருளினார்கள். (அபூதாவூத் 4271)
இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஹிஜ்ரி 255இல் பிறந்து, அல்லாஹ்வின் ஏற்பாட்டிற்கமைய மறைந்துவாழ்ந்து, இதுவரை காலமாக உயிரோடு இருந்து வருகிறார். இவர்களின் தந்தை 11வது இமாம், இமாம் ஹஸன் அஸ்கரீ (அலை) அவர்களும், தாயார் நர்ஜிஸ் அவர்களும் ஆவார்கள்.
இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மறுமை நாள் நெருங்குகின்ற இறுதிக்காலப்பகுதியில் வெளிப்பட்டு, அநீதியால் நிரம்பியிருக்கும் இவ்வுலகை நீதியாலும், நேர்மையாலும் நிரப்ப வருவார்கள்.
நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இமாம் மஹ்தி பற்றி அருளியதாக அபூஸயீதுல் குத்ரீ (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்:

“போரும், கொடுங்கோன்மையும் நிரம்பியிருக்கும் இப்பூமியில் அமைதியையும், நீதியையும் நிலைநிறுத்துவார். அவர் ஏழு வருடங்கள் ஆட்சி புரிவார்.
(அபூதாவூத் : 4272)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுப்படி, நாம் வாழுகின்ற சமகாலத்திற்குரிய இமாம், இமாம் மஹ்தி (அலை) அவர்கள்தான். எனினும், அவர்கள் தற்போது இறைவனின் ஏற்பாட்டிற்கமைய மறைந்து வாழ்வதால், இம்மறைவுக் காலத்தில் அவர்களின் பொதுப் பிரதிநிதிகளாக “ஃபுகஹா” எனும் மார்க்கச் சட்டக்கலை

வல்லுநர்கள் சமூகத்தை வழிநடாத்துவார்கள். இதனை “விலாயதுல் ஃபகீஹ்” (ஃபகீஹின் ஆட்சி) எனக் குறிப்பிடப்படும். இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மறைந்து வாழும் காலப்பகுதியில், மக்கள் தமது மார்க்க விடயங்களில் யாரை நாடுதல் வேண்டும் என வினவப்பட்ட போது இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள்:

قال المهدى (ع) وَ اَمَّا الحَوادِثُ الواقِعَةُ فَارجِعُوا فيها اِلى رُواةِ حَديثِنا فَاِنَّهُم حُجَّتى عَلَيكُم وَ اَنَا حُجَّةُ اللهِ عَلَى

«البحار 181/53» «الوسائل 101/18»

இமாம் மஹ்தி (அலை) அவர்கள் கூறினார்கள்: (நீங்கள்) எதிர்நோக்குகின்ற நிகழ்வுகளில் (எமது கருத்தை அறிந்து கொள்ள) எமது ஹதீதுகளை உங்களுக்கு எடுத்துக் கூறுவோரை அணுகிக் கேளுங்கள். நிச்சயமாக அவர்கள் உங்களுக்கு எமது அத்தாட்சியாக உள்ளனர். மேலும் நான், அவர்களுக்கு அல்லாஹ்வின் அத்தாட்சியாக உள்ளேன்.

(பிஹாருல் அன்வார் 53:181)

இமாம் மஹ்தி (அலை) அவர்கள் மறைந்திருப்பதற்கான காரணங்கள் பல இருந்தபோதிலும், அவர்கள் பிறந்தகாலத்தில் அப்பாசியக் கொடுங்கோல் ஆட்சியாளர்கள், அவர்களைக் கொல்ல முயற்சித்தமையும், இறைவனின் நாட்டமுமே இதற்கான முக்கிய காரணங்களாக உள்ளன. இறுதிக் காலத்தில் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வெளிப்படுவார்கள் என்றே ஹதீதுகளில் வந்துள்ளதால் உரிய நேரத்தில் வெளிப்படுவதற்காக இறைவனால் தயார்படுத்தப்பட்ட நிலையில் இமாம் இருக்கிறார்கள். இறைவனின் அனுமதி கிடைத்ததும் வெளிப்படுவார்கள் என்பது ஷீஆ நம்பிக்கை.

இமாம் மஹ்தி (அலை) அவர்கள் பிறந்து இற்றைக்கு சுமாராக ஆயிரத்தி நூறுக்கு அதிகமான வருடங்களான போதிலும் அவர்கள் உயிருடன் இப்பூமியில் வாழ்ந்து வருவதை சிலர் சாத்தியமற்ற ஒன்றாக கருதலாம்.

ஒரு மனிதனைப் பல்லாயிரம் வருடங்கள் உயிர் வாழவைப்பதென்பது அல்லாஹ்வின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக எவரும் கருதுவதற்கில்லை. முஸ்லிம்களின் நம்பிக்கைப்படி நபி ஈஸா (அலை) அவர்களும், நபி ஹிழ்ர்(அலை) அவர்களும் இன்னும் ஜீவிக்கின்றனர். குர்ஆனின் கூற்றுக்கமைய நபி ஆதம் (அலை) அவர்கள் ஆயிரம் வருடங்களும், நபி நூஹ் (அலை) அவர்கள் 950 வருடங்களும் உயிர் வாழ்ந்துள்ளனர்(29:14). அதேநேரத்தில் விஞ்ஞான ஆய்வுகளின் படி (கடல்களில் வாழும் மீன்கள் உற்பட)பல படைப்பினங்கள் பல்லாயிரம் வருடங்கள் உயிர்வாழுகின்றன. எனவே இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்நாள் மிகநீண்டது என்பது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல.

**4.கியாமத்(மறுமை நாள்)**

உலகில் மனிதர்கள் தாம் புரிந்த நன்மை, தீமைகளின் பெருபேறுகளை பெற்றுக் கொள்ள கியாமத் எனும் தீர்ப்பு நாள் உருவாகும். அதில் மரணித்த அனைவரும் உயிர்பெற்றெழுந்து தமது செயல்கள் குறித்து விசாரிக்கப்படுவர். நன்மை செய்தவரும், தீமை செய்தவரும் தத்தமது செயல்களுக்குரிய கூலிகளை நீதியினடிப்படையில் முழுமையாப் பெற்றுக் கொள்வர். விசாரணை, சுவர்க்கம் நரகம், ஷஃபாஅத்... என்பன அங்கு இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளாகும். (அகாயிதுல் இமாமிய்யா – ஜஃபர் சுப்ஹானீ)

## ஷீஆ முஸ்லிமும், நல்லொழுக்கப் பண்புகளும்

ஒரு முஸ்லிமை வைத்து இதுதான் இஸ்லாம் என்பதற்கும், இஸ்லாத்தின் உண்மை நிலையைப் புரிந்துகொண்டு ஒரு முஸ்லிம் இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்பதற்கும் இடையில் நிறையவே வேறுபாடுகள் உள்ளன. இந்த அணுகுமுறையின் அடிப்படையில்தான் ஒவ்வொரு இயக்கத்தையும் அதன் ஆதரவாளர்களையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஷீஆக்களை வைத்து ஷீஆசிந்தனையை புரிந்துகொள்ள முயற்சிப்போருக்கு, நபி(ஸல்) அவர்களின் பரிசுத்தக் குடும்பத்தினரைப் பின்பற்றுகின்ற ஷீஆ முஸ்லிம் ஒருவரின் நடத்தைசார் பண்புகள், ஷீஆசிந்தனையின்படி எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றி இங்கு நாம் குறிப்பிடுவது சாலச்சிறந்தது.

ஷீஆ இமாம்களுள் ஒருவரான இமாம் ஸாதிக் (அலை) அவர்கள், ஒரு ஷீஆ முஸ்லிம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"எமது ஷீஆக்கள் தக்வா, கடின உழைப்பு, வாக்குறுதி மீறாமை, அமானிதம் பேணுதல், உலகப் பற்றின்மை, இறைவழிபாடு போன்றவற்றில் சிறந்து விளங்குவார்கள். அவர்கள் ஒரு நாளில் 51 ரக்அத் (17 ரக்அத் ஐவேளைத் தொழுகை, 34ரக்அத் நாஃபிலான தொழுகைகள்) தொழுவார்கள்.
இரவை வணக்கத்தில் கழித்து பகலில் நோன்பு இருப்பார்கள். தமது பொருள்களுக்குரிய ஸகாத்தை கொடுப்பார்கள். ஹஜ் கடமையை நிறைவேற்றுவார்கள். ஹராமிலிருந்து விலகி நடப்பார்கள்". (பிஹாருல் அன்வார் 65:167)

மேலும் இமாம் பாக்கிர் (அலை) அவர்கள் ஒரு ஷீஆ முஸ்லிமின் பண்பு குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்:

"எமது ஷீஆக்கள் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுவோராகவும் அவனது கட்டளைகளை நிறைவேற்றுவோராகவும் இருப்பர். இவர்கள் பணிவு, அமானிதம் பேணல், இறைநினைவு,

நோன்பு, தொழுகை, பெற்றோருக்கு நற்பணி செய்தல், அயலவரோடு நற்குணத்துடன் வாழுதல், உண்மை பேசுதல், குர்ஆன் ஓதுதல், நாவடக்கம் பேணுதல், மக்கள் மத்தியில் நம்பிக்கையாக வாழுதல் முதலானவற்றின் மூலம் அறியப்படுவர்"

.(பிஹாருல் அன்வார் 75:175)

இமாம் ஸாதிக் (அலை) அவர்கள் ஷீஆக்களின் அடையாளங்கள் பற்றி வேறிடத்தில் குறிப்பிடுகையில்,எமது ஷீஆக்களை பின்வரும் அடையாளங்களைக் கொண்டு அறிந்து கொள்ளுங்கள்:தனது சக ஈமானிய சகோதரனுக்கு கொடுத்துதவுவார்,தினமும் 51 ரக்அத் தொழுகைகளைத் தொழுவார்,எதிரிகளின் விடயத்தில் மிக விழிப்பாக இருப்பார்,மார்க்க சட்டங்களுக்கு ஏற்ப நடப்பார். (பிஹாருல் அன்வார் 75:281)

## ஈரானிய ஷீஆ முஸ்லிம்களும், இஸ்லாமிய நெறிமுறைகளும்

ஷீஆக்களின் நடத்தைகளை நேரில் நாம் கண்ணுற்றவகையில், ஷீஆக்கள் சிறுபான்மையினராக வாழுகின்ற முஸ்லிம் நாடுகளைத்தவிர, முழுச்சுதந்திரத்துடன் பெரும்பான்மையாக வாழுகின்ற ஈரான் இஸ்லாமியக்குடியரசு போன்ற நாடுகளில் அவர்கள் சமயவிவகாரங்களில் அதீத பற்றுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் கொடுக்கல், வாங்கல்களில் மிக நேர்மையுடையோராகத் திகழ்ந்து, இஸ்லாமியப் பொருளாதார முறைப்படி தமது வியாபாரம் மற்றும் வங்கி நடைமுறைகளை அமைத்துச் செயற்படுவதுடன் ஷரீஆவுக்கமைவான வட்டியில்லாப் பொருளியலைக் கையாளுகின்றனர்.

இஸ்லாமியப் பொருளாதாரம் பற்றி முதன் முதலில் நூற்களை யாத்த பெருமை ஷீஆ அறிஞர்களைத்தான் சாரும். அல்லாமா அஷ்-ஷஹீத் பாக்கிர் சத்ர் அவர்களின் உலகப்புகழ்பெற்ற "இக்திஸாதுனா" எனும் நூல் இதற்குச் சான்றாகும். இந்நூல் இன்று சர்வதேசப் புகழ் பெற்ற பல பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிப் பொருளியல்துறையின் மூலநூலாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

ஷீஆக்கள் வாழும் பகுதிகளில் பொருட்களையும், உடைமைகளையும் பாதுகாத்தல் மிகவும் இலகுவானது எனுமளவுக்கு களவு, கொள்ளை என்பன மிகவும் அரிது. வீதிகளில் தொகையான பணத்துடன் மனிதர்கள் அச்சமின்றி நடமாடுவர். வீதிகளில் கண்டெடுக்கப்படும் பணங்கள் உரியவர் பெற்றுக்கொள்ளும் வகையில் பலநாட்கள் விளம்பரப் பலகைகளில் அறிவித்தல்கள் தொங்கவிடப்படுவதை அவதானிக்கலாம்.

உண்ணல், குடித்தல் மற்றும் உணவு வகைகளில் ஹலால், ஹராம் பேணுவதில் ஷீஆக்கள் மிக மிக அவதானமாக செயற்படுகிறார்கள். காஃபிர் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மாமிச உணவுகள் அல்லது காஃபிர்களின் மேனியிலிருந்து ஈரம் பட்ட

உணவுகள் போன்றவற்றை உண்ணமாட்டார்கள். நீருக்கு வெளியில் சாகாத மற்றும் செதிலில்லாத மீன்வகைகளை தவிர்ந்து நடப்பார்கள்.

முற்றிலும் ஷீஆ நாடான ஈரானில் மதுபானத்தடை மிக உறுதியாகப் பேணப்பட்டுவருகிறது. இறைவழிபாடுகளில் மிகவும் ஈடுபாட்டைக்கொண்டோர் ஷீஆக்கள் என்பதனால் தொழுகைகளை அவற்றின் முதல் நேரத்தில் தொழ முயற்சிப்பார்கள். தொழுகையை முறையாக நாட்டின் பல பாகங்களிலும் நிலை நிறுத்துவதற்காக தனிப்பட்ட ஒரு அரசத்திணைக்களமே அந்நாட்டில் செயற்படுகிறது. ஐவேளைத் தொழுகைகளை அவற்றுக்கான ஐந்து நேரங்களில் அல்லது அவ்வைந்து தொழுகைகளையும் இஸ்லாமிய ஆதாரங்களுக்கமைய மூன்று நேரங்களில் பேணித் தொழுகிறார்கள். எந்தவொரு தொழுகையும் கழாவாகத் தவறிவிடாமல் பேண முயற்சிப்பார்கள். அவர்களது பஸ் மற்றும் புகையிரதம் போன்ற போக்குவரத்து தரிப்பிடங்கள் அனைத்திலும் பள்ளிவாயல்கள் அமைந்திருக்கின்றன.

தொழுகை நேரங்களை கவனத்தில் கொண்டே பஸ்வண்டிகளும், புகையிரதங்களும் தரித்துச் செல்கின்றன. ஐவேளைத் தொழுகைகளைத் தவிர, பிற நாஃபிலான தஹஜ்ஜுத் தொழுகை, ஸலாத்துல் குஃபைலா உட்பட சுபஹ், ளுஹர், அஸர், மக்ரிபு, இஷாவுக்குரிய நாஃபிலான தொழுகைகளையும் நாளாந்தம் தொழுது வருகிறார்கள்.

அதிகளவில் துஆப் பிரார்த்தனைகளில் ஈடுபடும் அவர்கள், துஆக்களை அழுது கண்ணீர்பெருக ஓதுவார்கள். ஹஜ் காலங்களில் ஷீஆக்களின் துஆ நிகழ்ச்சிகள் மக்கா, மதீனா போன்ற புனித இடங்களில் மிகச்சிறப்பாக நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்துபயனுற பன்னாட்டு முஸ்லிம்களும் ஈடுபாடுகாட்டுவதைக் காணக்கூடிதாகவுள்ளது.

குர்ஆன், ஸஹீபா ஸஜ்ஜாதிய்யா, மபாதீஹுல் ஜினான் போன்ற இறைத்தொடர்பை ஏற்படுத்துகின்ற புனித நூற்கள் அவர்களுடன் என்றுமே காணப்படுபவைகள். அவற்றில், மனிதன் பிறந்ததிலிருந்து அவன் மரணிக்கும் வரையிலான இரவு, பகல், காலை, மாலை, விசேட தினங்கள், விசேட இடங்கள் போன்ற அனைத்திற்குமான துஆக்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பேணி ஓதிவரும் ஷீஆக்கள், தினமும் ஓதவேண்டிய துஆக்கள், குறிப்பாக வெள்ளிக்கிழமை இரவில் ஓதப்படும் துஆ–குமைல், அதன் அதிகாலையில் ஓதப்படும் துஆ–நுத்பா, செவ்வாய் இரவுகளில் ஓதப்படும் துஆ–தவஸ்ஸுல், அரபா தினங்களில் ஓதப்படும் துஆ–அரபா, புனித லைலதுல் கத்ர் இரவுகளில் ஓதப்படும் துஆ–ஜௌஷன் கபீர், ரமழான் காலங்களில் ஓதப்படும் துஆஉல் இப்திதாஹ், நாளாந்தம் ஓதப்படும் துஆ மகாரிமுல் அஹ்லாக் மற்றும் ஷஃபானில் ஓதப்படும் முனாஜாத்துஷ் ஷஃபானிய்யா போன்ற துஆக்கள் மிகக் கருத்தாழமிக்கவை. நபியவர்களின் போதனைக்கமைய அவர்களின் வாரிசுகள் மூலமாக கிடைக்கப் பெற்ற இந்த துஆக்களை ஷீஆக்கள் மிக பெறுமதிமிக்கனவாகப் பார்க்கின்றனர். மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு இந்நூற்கள் அரும்பணியாற்றுகின்றன.

இஸ்லாமியக் கலாசார விழுமியங்களைப் பேணுவதில் நாம் கண்ட ஈரானிய ஷீஆக்களை முன்மாதிரி என்றே கூறவேண்டும். பெண்கள் ஹிஜாபை பேணுகின்றனர். யுவதிகள் எந்நேரத்திலும், எவ்விடத்திலும் தனிமையில் நடமாடுவதற்கான பாதுகாப்பான சூழ்நிலையை இந்நாட்டில் காணமுடிகிறது.

மனிதன் இயற்கை உணர்வுகளைக் கொண்டவன் என்பதால் இஸ்லாம் அவனது உணர்வுகளுக்கு ஏற்பவே சட்டங்களை வகுத்துள்ளது. ஈரானில் இளம் சமூகத்தினரின் உணர்வுகளைக் கவனத்திற்கொண்டு அவர்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இன்றைய சீர்கேடான சினிமாவிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட்டு இஸ்லாமிய சினிமாவை நோக்கி வழிநடாத்தப்படுகின்றனர். போதைப்பொருளுக்கு அடிமையாகாமலிருக்க பல்வேறு தொழில் மற்றும் கலைப்பயிற்சிகள் போன்றவை மூலம் வாழ்வை இலங்கச்செய்கின்றனர். இஸ்லாமிய சிந்தனையை மையப்படுத்தி உருப்பெற்றுள்ள ஈரானின் தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் மற்றும் சினிமாக்கள் போன்றவை எவற்றிலும் ஆபாசக் காட்சிகளையோ அல்லது இஸ்லாம் அனுமதிக்காத இசையையோ, ஆடல் பாடலையோ காணவும் முடியாது கேட்கவும் முடியாது. சினிமாக்களில் கூட பெண்கள் ஹிஜாபின்றி தோன்றமாட்டார்கள்.

ஷீஆ நகரங்களின் முழு வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் ஸதகா சேகரிப்பதற்கான பெட்டிகள் நடப்பட்டு, அதில் அம்மக்கள் ஸதகா இட்டு, தம்காலைப்பொழுதை ஆரம்பிக்கின்றனர். ஸதகா, ஸகாத் மற்றும் கும்ஸ் போன்ற நிதியங்களால் வருடாவருடம் வறுமைக் கோட்டில் வாழும் பல்லாயிரக்கணக்கான திருமணமாகாத இளைஞர்கள் மற்றும் யுவதிகளுக்கு ஒரே இடத்தில் வைத்து ஈரானின் ஆன்மீகத்தலைவரினால் திருமணம் செய்து வைக்கப்படும் காட்சி மிக அருமையானது.

புதிதாகப் பருவவயதை அடையும் பெண்பிள்ளைகளுக்கு மார்க்க கடமைகள் பற்றி தெளிவு படுத்தப்பட்டபின் தமது முதலாவது வாஜிபான தொழுகையை ஜமாஅத்துடன் தொழுது, அதன்மூலம் இஸ்லாமியப் பற்றை வெளிப்படுத்துவார்கள். ஈரானில், குர்ஆனியக் கலாசாரம் வேரூன்றிக் காணப்படுகிறது. அறிவியற் தொழிநுட்பம் மற்றும் அணுத்திட்டம் உட்பட பல்வேறு துறைகளின் வளர்ச்சிகள் அச்சமூகத்தின் தன்னிறைவை படம்பிடித்துக் காட்டுகின்ற அதேவேளை, இம்முன்னேற்றத்திற்கு மூலகாரணியாக, அல்குர்ஆனையே அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் இஸ்லாமியக் குடியரசும், இஸ்லாமிய அரசியற்பண்பாடும்

ஈரானின் இஸ்லாமிய அரசியல் எழுச்சி, அம்மக்களின் வளர்ச்சியின் இன்னுமொரு மைல் கல்லாகும். இஸ்லாமிய ஷரீஆவை அடிப்படையாகவும், அரசியலமைப்பாகவும் கொண்டதே ஈரானிய அரசாட்சியாகும். ஈரானின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் எச்சட்டமும் “ஷூராயே நிகஹ்பான்” எனும் மார்க்க அறிஞர்களைக் கொண்ட பாதுகாப்புச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அச்சபை, அதனை ஷரீஆவுக்கமைவானதா? என சரிபார்த்த பின்னரே அச்சட்டம் அமுலாக்கப்படுகிறது.

ஈரானிய அரசு சட்டத்துறை, நீதித்துறை, நிருவாகத்துறை என மூன்றாகப் பிரிக்கப்பட்டு, இவை ஒவ்வொன்றும் தமக்குரிய அதிகாரங்களுடன் தனித்தனியே செயற்படுவதன் மூலம் சமூகப் பாதுகாப்பையும், நல்லாட்சியையும் அங்கு காணமுடிகிறது.

இம்மூன்று துறைகளுக்குமான பொதுத்தலைவராகவும், முப்படைகளின் தலைவராகவும், இஸ்லாமிய அரசியல் இறைமையை தன்னகத்தே கொண்டவராகவும் அந்நாட்டு ஆன்மீகத்தலைவர் திகழ்கிறார். ஜனாதிபதி என்பவர் இவரது பிரதிநிதியாகவும், நிருவாகத்துறைக்கான தலைவராகவும் செயற்படுவார். இம்மூன்று துறைகளுக்குள் ஏற்படுகின்ற சிக்கல்களை ஆன்மீக தலைவரே தீர்த்துவைப்பார். இதனால் ஈரான் இஸ்லாமியப் புரட்சிவெற்றியின் தொடக்கம் முதல் இற்றைவரை அந்நாட்டு இஸ்லாமிய ஆட்சி, எதிரிகளின் எவ்வித கையாடல்களுக்கும் உட்படாததாகவே இருந்துவருகிறது. அந்நிய அரசியற் தலையீடுகளிலிருந்து தனது அரசியற்தனித்துவத்தைக் காப்பதில் அதி தீவிரம் காட்டிவரும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு, எவ்வல்லரசுக்கும் அடிமையாகாமலும், எச்சக்திக்கும் அஞ்சாமலும் தலைநிமிர்ந்து வெற்றிக்கொடிகட்டுவது யாவரும் அறிந்ததே. ஈரானிய ஆட்சி பீடங்களில் இருப்போர், மிக எளிமையான வாழ்க்வைக் கொண்டோராகக் காணப்படுகின்றனர். ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஆன்மீகத் தலைவர் செய்யித் அலீ காமனயீ அவர்கள் தொடக்கம் கீழுள்ள அதிகாரிகள் வரை மிக எளிமையாக வாழ்பவர்கள்.

ஷீஆ முஸ்லிம்களால் உருவாக்கப்பட்ட ஈரான் இஸ்லாமியக் குடியரசு, ஈரானுக்குள்ளும் அதற்கு வெளியிலும் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக ஏகாதிபத்தியத்தால் ஏற்படுத்தப்படும் எவ்வித அச்சுறுத்தலையும் எதிர்கொள்வதற்கு பின்தயங்கி நின்றதில்லை. ஈரான் இஸ்லாமியக் குடியரசு ஷீஆ, சுன்னியென்று பாரபட்சம் பாராது அநீதி இழைக்கப்பட்ட முஸ்லிம்களுக்காக குரல் கொடுப்பதையும், அவர்களுக்கு உதவுவதையும், சர்வதேச முஸ்லிம்களின் நலனுக்காக உழைப்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை.

இஸ்லாத்தையும், நபிபெருமானாரையும் அவமதித்த “ஸல்மான் ருஷ்தி”க்கு, சுன்னி முஸ்லிம் அறிஞர்கள் எதுவும் பேசாதநிலையில், இமாம் கொமைனி (ரஹ்) அவர்களால்

மரணத்தீர்ப்பு வழங்கப்பட்டமை உலக முஸ்லிம்களின் கவனத்தை ஷீஆ இஸ்லாத்தின்பால் திருப்பிவிட்டது. இப் ஃபத்வாவை வழங்கும்முன் இஸ்லாத்தின்பால் ருஷ்தியை மீண்டும் அழைத்து, அவர் மறுக்கும் பட்சத்தில் இப் ஃபத்வா வழங்கப்பட்டிருக்க வேண்டும் என சில சுன்னி அறிஞர்கள் கருத்து தெரிவித்தனர். ஆனால், அவ்வாறு சொன்னோரால் கூட தாங்கள் சொன்னதை இற்றைவரை செய்யமுடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இது ஷீஆ ஃபத்வா என்பதற்கப்பால், ஒரு இஸ்லாமிய ஃபத்வா என்றும், எல்லா முஸ்லிம்களும் இப் ஃபத்வாவை நிறைவேற்றுவார்கள் என்றும் அஞ்சி இன்றுங்கூட ருஷ்தி, சுதந்திரமாக நடமாடமுடியாத நிலைக் காணப்படுவதை அறிகிறோம்.

பலஸ்தீனர்களுக்கும், பலஸ்தீன மண்ணுக்கும் ஆதரவாக குரல் கொடுத்து றமழான் மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமையை சர்வதேச குத்ஸ் தினமாகப் பிரகடனப்படுத்தி உலகமுஸ்லிம்களை குத்ஸுக்கு ஆதரவாக அணிதிரட்டிய பெருமை இமாம் கொமைனி (ரஹ்) அவர்களுக்கே உரியது.

ஹமாஸ், ஜிஹாத் போன்ற பலஸ்தீன விடுதலைப் போராட்டக் குழுக்களுக்கு உதவுதல், பலஸ்தீன் உரிமைக்காக சர்வதேச அரங்குகளில் குரலெழுப்புதல், பொஸ்னியா, ஹிர்ஸகோவினா, செச்சினியா, காஷ்மீர், லெபனான், ஆப்கான் மற்றும் ஈராக் போன்ற நாட்டுகளைச்சேர்ந்த முஸ்லிம்களுக்கு உதவிக்கரம் நீட்டி வரவேற்றல் மற்றும் சர்வதேச இஸ்லாமிய உம்மாவின் ஐக்கியத்திற்கும், பலத்திற்கும் உறுதுணையாக இருத்தல், அவற்றுக்காக உழைத்தல் என்பன ஈரான் இஸ்லாமியக் குடியரசு, ஓர் இஸ்லாமியக் கருத்தியல் அரசு என்பதற்கான சான்றுகளாகும்.

பலஸ்தீனுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் ஆதரவாக குரல் கொடுத்து வருவதனால் சர்வதேச ரீதியில் பல அரசியற் பொருளாதார நெருக்கடிகளை ஈரான் இஸ்லாமியக் குடியரசு சந்தித்த போதிலும் தனது நிலைப்பாட்டில் இற்றைவரை உறுதியாகவே உள்ளது. அநீதிக்கும், அடக்குமுறைக்கும் பேர்போன அமெரிக்க, சியோனிஸ சக்திகளுக்கு எதிராகச் செயற்படக்கூடிய ஒரேயொரு நாடு ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்பதில் இரண்டாவது கருத்திற்கிடமில்லை.

எனவே, ஷீஆக்கள் இவ்வாறான ஆரோக்கியமிக்க அரசியல், பொருளாதாரம், சமூகவியல் கட்டமைப்பைக் கொண்டிருப்பதற்கு அவர்களின் இஸ்லாமிய நம்பிக்கைகள் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

## ஐயமும் தெளிவும்

### 01.ஷீஆக்களிடம் வேறொரு குர்ஆனா?

"முஸ்லிம்களிடம் காணப்படும் குர்ஆன் திரிபுக்குள்ளானது. அத்துடன், அது அல்லாத வேறொரு குர்ஆனை ஷீஆக்கள் கொண்டிருக்கிறார்கள்" என்று அபாண்டம் கூறப்படுகிறது. இதனால், ஷீஆ முஸ்லிம்கள் மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைவிடவும், ஷீஆ முஸ்லிம்களின் குர்ஆன் பற்றிய நம்பிக்கை எவ்வாறு அமைந்துள்ளது என்பதனை பின்வருமாறு நோக்கலாம்.

"உலக முஸ்லிம்களின் கைகளிற்தவழும் புனித அல்குர்ஆன், எவ்வித மாற்றத்திற்கும் உட்படாதது. அதில் எவ்வித திரிபும் ஏற்படவில்லை. காலம் காலமாக இன்று வரை முஸ்லிம்கள் ஓதிவரும் அதே குர்ஆன்தான் சுமார் 1400 வருடங்களுக்கு முன் இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கட்கு, ஹஸரத் ஜிப்ரீல்(அலை) அவர்கள் மூலம் இறக்கியருளப்பட்டது" என்பதாக ஷீஆ முஸ்லிம்களும், அவர்களின் அறிஞர்களும் நம்புகின்றனர். இந்நம்பிக்கைக்கு அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களை நோக்குவோம்.

அல்லாஹு தஆலா, தான் இறக்கிவைத்த வேதத்தை, தானே பாதுகாப்பதாக உத்தரவாதம் வழங்கியுள்ளான்.

إنّا نحن نزلنا الذكر وإنا له لحافظون

"நிச்சயமாக நாமே (திக்ரு எனும் இவ்)வேதத்தை (உம்மீது) இறக்கிவைத்தோம். நிச்சயமாக நாமே அதனைப் பாதுகாப்போம்". (9:15)

உலகில் வாழும் அனைத்து ஷீஆக்களும், தமது வழிகாட்டி நூலாக புனித அல்குர்ஆனையே நம்பிக்கை கொண்டுள்ளனர். குறித்த திருமறை வசனத்திற்கமைய புனித குர்ஆனை எவ்வித மாற்றமுமின்றி இறைவனே பாதுகாத்து வருகிறான். இந்நிலையில் ஷீஆ முஸ்லிகளால் மட்டும் எப்படி அதனை மாசுபடுத்தமுடியும். உலகில் வேறொரு குர்ஆன் இருப்பதாக நம்புவது "குஃப்ர்" என்பதாக ஷீஆக்கள் நம்புகின்றனர்.
ஷீஆ இஸ்லாமிய நம்பிக்கையின்படி, இறுதி நபி முஹம்மத்(ஸல்) அவர்களின் பிரதிநிதியும், முதலாம் இமாமுமான ஹஸரத் அலி(அலை) அவர்கள், நபியவர்களின் (குத்தாபுல் வஹி) வஹியை எழுதியோரில் ஒருவராகத் திகழ்ந்தார்கள். அவர்கள் பல முக்கிய சந்தர்ப்பங்களில் மக்களை இப்புனித குர்ஆனையே பின்பற்றி வாழும்படி ஏவியுள்ளார்கள். இதனால், ஷீஆ முஸ்லிம்கள் தாங்கள் பின்பற்றும் இமாமின் கட்டளைக்கு மாற்றமாக குர்ஆனுடைய விடயத்தில் நடக்கமாட்டார்கள். இந்தவகையில், இமாம் அலீ (அலை) அவர்களின் திருக்குர்ஆன் தொடர்பான சில உபதேசங்கள் இதோ:

واعلموا أن هذا القرآن هو الناصح الذى لا يغش والهادى الذى لايضل

“நிச்சயமாக இக்குர்ஆனானது, எவரையும் ஏமாற்றாத விதத்தில் உபதேசிக்கக்கூடியதும், எவரையும் வழிகெடுக்காது நேர்வழி காட்டக்கூடியதும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்”. (நஹ்ஜுல் பலாகா – குத்பா 176)

إن الله سبحانه لم يعظ بمثل هذا القرآن فإنه حبل الله المتين وسببه المبين

“நிச்சயமாக அல்லாஹ் இக்குர்ஆனைக் கொண்டு மனிதர்களை உபதேசித்தது போல் வேறு எதனைக் கொண்டும் உபதேசிக்கவில்லை. நிச்சயமாக இவ்வேதம் (பற்றிப்பிடித்துக் கொள்வதற்கான) அல்லாஹ்வின் பலமான கயிறாகவும், (நேர்வழிபெறுவதற்கான) அவனது தெளிவான காரணியாகவும் உள்ளது.

(நஹ்ஜுல் பலாகா – குத்பா 176)

...أنزل عليه الكتاب نورا لاتطفأ مصابيحه وسراجا لايخبواتوقده ومنهاجا لايضل نهجه وفرقانا لايخمد برهانه

“...தன்தீபங்கள் ஊதியணையா ஜோதியாகவும், தன் சுடர்கள் மங்கிவிடா ஒளிவிளக்காகவும், தன்வழித்தொடர் யாரையும் கெடுக்காத பாதையாகவும், தன் நிரூபணம் வலுவிழந்திடாமல் பொய், மெய்யைப் பிரித்தறிவிக்கக்கூடியதாக அல்லாஹ் தஆலா, (திருக்குர்ஆனாகிய) இவ்வேதத்தை (தன்தூதராகிய) அவர்மீது இறக்கியருளினான்”.

(நஹ்ஜுல் பலாகா – குத்பா198)

ஷீஆக்களின் முதலாம் இமாம் ஹஸரத் அலி(அலை) அவர்களின் மேற்குறித்த பொன்மொழிகளின்படி, குர்ஆனானது மனித சமூகத்தை ஒளியின்பால் இட்டுச் செல்வதாகவும், நேர்வழியின் ஒளிவிளக்காகவும் திகழ்கிறது. அதனைப் பின்பற்றுவோர் வழிகெடமாட்டார் என்பதை உணர்த்துகிறது. இதனால் இக்குணாதிசயத்தைக் கொண்ட, புனித அல்–குர்ஆன் என்றைக்குமே திரிபுக்குட்பட முடியாது என்பதை ஷீஆ முஸ்லிம்கள் உறுதியாக நம்புகின்றனர்.

ஷீஆக்களின் இரண்டாவது இமாமான இமாம் ஹஸன்(அலை) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

“குர்ஆனானது, மறுமையில் முன்வந்து அதன் ஹலாலை ஹலாலாகவும், அதன் ஹராமை ஹராமாகவும் எடுத்து நடந்து, அதன் முதஷாபிஹாத்தான வசனங்களை ஈமான் கொண்டோரை சுவனத்திற்கு இட்டுச்செல்லும். அதன் சட்டங்களைமீறி, அதன் ஹராமை ஹலாலாக்கியோரை அது நரகத்தை நோக்கி வழிகாட்டும்”.

இமாம் ஹஸன்(அலை) அவர்களின் கூற்றுப்படி குர்ஆன் மாற்றமடையாத ஒரு நிலையான வேதம்.

குர்ஆன் மற்றும் அஹ்லுல்பைத் எனும் இரு வழிகாட்டிகளைப் பின்பற்றி வாழும்படி நபியவர்கள் முஸ்லிம்களைப் பணித்துள்ளார்கள். முஸ்லிம்கள் அவ்விரண்டையும் பின்பற்றிவாழும் காலமெல்லாம் வழிகெடவே மாட்டார்கள் எனக் கூறினார்கள்.

ஷீஆ மற்றும் சுன்னிக் கிரந்தங்களில் "முதவாத்திர்" என்ற முதல்நிலையைப் பெற்ற ஸஹீஹான ஹதீதாக இது காணப்படுகிறது. இதனடிப்படையில் குர்ஆனானது எவ்வித கையாடல்களுக்கும், திரிபுகளுக்கும் உட்படாது காணப்படும் என்பதை உணரலாம். குர்ஆன் மாற்றம் பெற்றுள்ளதாக நம்பினால் திரிபுக்குள்ளான குர்ஆனைப் பின்பற்றி மனிதன் எவ்வாறு நேர்வழி பெறமுடியும்? என்ற வினா எழுமல்லவா?

ஷீஆ இமாம்கள் மற்றும் மார்க்க அறிஞர்களின் பார்வையில் உண்மை – பொய்மை, சத்தியம் – அசத்தியம் முதலானவற்றைப் பிரித்து வேறுபடுத்திக்காட்டும் ஒரேயொரு அளவுகோல் குர்ஆன் மாட்டுமேயாகும்.
ஹதீஸ்களின் உண்மைத்தன்மையைக் கூட அறிய, அவற்றை குர்ஆனோடு ஒப்பிடுதல் வேண்டும். குர்ஆனுடன் உடன்பட்டால் மட்டுமே அவைகள் நம்பகத்தன்மையைப் பெறும் என்பது ஷீஆ நம்பிக்கை. இதை வலியுறுத்தும் ஷீஆ தரப்பு ஹதீதுகள் அதிகளவில் காணப்படுகின்றன.
இமாம் ஸாதிக் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

مالم يوافق من الحديث القرآن فهو زخرف

"குர்ஆனுடன் முரண்படும் எந்த ஹதீதும் பொய்யானதாகும்"
(உஸூலுல் காஃபீ – கிதாபு பழ்லில் இல்ம் பா:01,பக்:04)

இவ்வறிவிப்பின்படி இறுதி நாள்வரை சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்தறிவிக்கும் அளவுகோலாகத் திகழும் அல்குர்ஆன் ஒருபோதும் திரிபுக்குள்ளாக முடியாது ஷீஆ நம்பிக்கையாகும்.

"குர்ஆன் திரிபுக்குள்ளாகாத இறைவேதம். அது மறுமைவரை கூட்டல், குறைத்தல் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்படும்"என்பது ஷீஆ அறிஞர்கள் அனைவரினதும் ஏகோபித்த கருத்தாக உள்ளது. இங்கு அவர்களில் பிரதானமான சிலரின் கருத்தைத் தருகிறோம்.

01)அபூஜஃபர் முஹம்மத் பின் அலி பின் ஹுஸைன் பாபவைஹ் கும்மீ
(ஷெய்க் ஸதூக் – வபாத்–381ஹிஜ்ரி)
"குர்ஆன் பற்றிய எமது நம்பிக்கையின்படி, அது இறைவனின் கூற்றும் வஹியுமாகும். அதில் பிழைகள், தவறுகள் இடம்பெறாது. ஞானமும், நுட்பமும் நிறைந்த அல்லாஹ்வின் புறத்திலிருந்து அது இறக்கப்பட்டது. அதை அனுப்பியோனும் அவனே, அதை காப்போனும் அவனே. (அல் இஃதிகாத் பக்: 93)

02)செய்யித் முர்தஸா அலி பின் ஹுஸைன் மூஸவி (அலமுல் ஹுதா, மரணம் 436ஹி)
"அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், உபை பின் கஃப் போன்ற நபித்தோழர்கள் குர்ஆனை ஆரம்பம் முதல் இறுதிவரை பல தடவைகள் நபியவர்களுக்கு ஓதிக்காண்பித்துள்ள

விடயம், குர்ஆன் எவ்வகையான கூட்டல், குறைத்தலுக்கும் உள்ளாகவில்லை என்பதைக் குறிக்கிறது". ( மஜ்மவுல் பயான் பா: 01, பக்: 10)

03)அபூஜஃபர் முஹம்மத் பின் ஹஸன் தூஸி (செய்குத்தாயிஃபா– மரணம் 460ஹி)

"கூட்டல், குறைத்தல் இடம்பெற்றன எனும் வாதம் குர்ஆனைப் பொறுத்தவரைப் பிழையானது. ஏனெனில் அனைத்து முஸ்லிம்களும் அதனை மறுக்கின்றனர். குர்ஆன் திரிபடையவில்லை என்பது எமது மத்ஹபின் நிலைப்பாடாகும். செய்யிது முர்தஸா அவர்களும் இவ்வாறே நம்பிக்கை கொண்டுள்ளார். எமது ஹதீதுகளும் இதனையே வலிவுறுத்துகின்றன.." (தப்ஸீருத் திப்யான் பா: 01, பக்: 03

04)அபுஅலி தபர்ஸி (மஜ்மஉல் பயான் தப்ஸீரின் ஆசிரியர்):
"குர்ஆனில் திரிபு இடம் பெறவில்லை என்பதில் அனைத்து முஸ்லிம்களும் ஏகோபித்த கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர்." (மஜ்மஉல்பயான் பா: 01 பக்: 10)

05)அலிபின் தாவூஸ் ஹில்லி (செய்யித் பின் தாவூஸ், மரணம் 664):
"குர்ஆன் திரிபுக்குள்ளாகவில்லை என்பது ஷீஆ நம்பிக்கையாகும்.
(ஸஃதுஸ் ஸுஊத், பக்: 144)

06)ஷெய்க் செயினுத்தீன் ஆமுலி (மரணம் 877):
إنا نحن نزلنا الذكر وإنا له لحافظون (09/15)
மேற்படி வசனத்திற்கு வியாக்கியானமளித்த இவர், "நாம் குர்ஆனை சகல விதமான மாற்றங்கள், திரிபுகள் முதலானவற்றிலிருந்து பாதுகாப்போம்" என்பதே இதன் பொருளெனக் குறிப்பிடுகிறார். (இழ்ஹாருல் ஹக், பா: 02 பக்: 130)

07)காழி செய்யித் நூருத்தீன் துஸ்தரி, இஹ்காகுல்ஹக்கின் நூலாசிரியர் (மரணம் 1019)
"ஷீஆக்களிடம் குர்ஆன் மாற்றம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் அவதூறை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது". (ஆலாவுர் ரஹ்மான் பாகம்:25)

08)முஹம்மத் பின் ஹுஸைன் (பஹாவுத்தீன் ஆமுலி, மரணம் 1030)
"மகத்தான இக்குர்ஆன் எவ்வித கூட்டல், குறைத்தலுக்கும் உட்படாது என்பதே நம்பிக்கையாகும்." (ஆலாவுர் ரஹ்மான், பா:25)

09)ஷெய்க் ஹுர் ஆமுலி (மரணம் 1104)

“ஆயிரக்கணக்கான நபித்தோழர்களது அறிவிப்பின் பிரகாரமும், முதவாதிரான ஹதீஸ்களின் வாயிலாகவும் குர்ஆனானது, நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே ஒன்றுசேர்க்கப்பட்டு முழுமை பெற்றுவிட்டது என்பதை வரலாற்றுத்துறை மற்றும் ஹதீத்துறையில் ஆழமான ஆய்வை மேற்கொள்வோர் எவரும் புரிந்துகொள்வர்”.

(ஆலாவுர் ரஹ்மான் பாகம்:25)

10) ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் ஸ்தாபகர் இமாம் கொமைனி (ரஹ்) அவர்கள்:

“புனித அல்–குர்ஆன் எழுதப்பட்டு, ஒன்று சேர்க்கப்பட்டமுறை மற்றும் அது பாதுகாப்படும் விதம் பற்றிய அறிவைப்பெற்ற எந்தவொரு முஸ்லிமும், குர்ஆன் மாற்றமடைந்துள்ளது எனும் அபாண்டத்தை அங்கீகரிக்கவே மாட்டார். அத்துடன் குர்ஆன் மாற்றப்பட்டதற்கு ஆதாரமாகக் காண்பிக்க முயலும் ஹதீதுகளில் சில பலவீனமானவையும், புனையப்பட்டவையுமாகும். அவற்றில் மற்றும் சில, தப்ஸீருடன் தொடர்புடையயவை. இதுபற்றி நூலொன்றை எழுத எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதில் குர்ஆனின் வரலாறும், அதன் நெடுங்கில் நேர்ந்தவையும் பற்றி விளக்க முடியும்.
மேலும் இன்று பாவனையிலுள்ள இக்குர்ஆன், அன்று நபி பெருமானாருக்கு அருளப்பட்ட அதே வேதமே என்பதையும் எம்மால் நிரூபிக்க முடியும். குர்ஆனை ஓதும் விதத்தில் ஏற்பட்டிருக்கும் பல்வகை கிறாஅத் முறைகள் பின்னர் தோன்றியதாகும். அவற்றிற்கும், ஜிப்ரீல் (அலை) அவர்கள், நபியவர்களின் உள்ளத்தில் இறக்கிவைத்த குர்ஆனுக்கும் எத்தொடர்பும் கிடையாது.

(தஹ்தீபுல் உஸூல் தக்ரீராது துரூஸ் – இமாம் கொமைனி(ரஹ்), பா: 02, பக்: 96)

எனவே ஷீஆக்களின் நம்பிக்கைப்படி இன்று முஸ்லிம்கள் ஓதுகின்ற குர்ஆனானது, அன்று நபிகள் நாயகத்திற்கு இறைக்கியருளப்பட்ட அதே வேதமே. மேலும் இக்குர்ஆனானது கூட்டல், குறைத்தல் போன்ற எவ்வித மாற்றத்திற்கும் உட்படாதது என்பது கருத்திற் கொள்ளத்தக்கது. அல்–குர்ஆன் மாற்றப்படவில்லை என்பதுடன், அதனைப்போன்ற ஒன்றை எவராலும் கொண்டுவர முடியாது எனவும் ஷீஆக்கள் நம்புகின்ற அதேவேளை, குர்ஆனின் மகிமையைச் சிதைக்க முனையும் ஸல்மான் ருஷ்திபோன்ற ஏகாதிபத்திய கைக்கூலிகளுக்கு எதிராகவும் செயற்படுவோர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
மேற்கத்தியவாதிகள் அல்–குர்ஆன்மீதான முஸ்லிம்களின் நம்பிக்கையை மாசுபடுத்த முனைந்துவருவது கவனத்திற் கொள்ளவேண்டியதாகும். ஷீயாக்களிடம் வேறொரு குர்ஆன் என்ற தவறானப் பிரச்சாரத்தில் தீவிரம் காட்டுபவர்களும், இப்பிரச்சாரத்தினால் கவரப்படும் அப்பாவி முஸ்லிம்களும் இது தொடர்பான பின்வரும் உண்மைகளைத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

1.ஷீஆக்களிடம் வேறொரு குர்ஆன் உள்ளது என்று கூறப்படுகிறதே தவிர, எவரும் அதனைக் கண்டதுமில்லை, காட்டியதுமில்லை. ஏன் இப்பொய்ப்பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது என்பதை ஆராயுமிடத்து, ஏகாதிபத்தியம் மற்றும்

சியோனிஸத்திற்கு எதிரான இஸ்லாமிய உம்மாவின் ஐக்கியமும், அதன் எழுச்சியும் குர்ஆனிலிருந்தே உருவெடுப்பதால், அல்–குர்ஆனை முஸ்லிம்களின் வாழ்விலிருந்து அகற்றிட அந்நிய சக்திகள் முனைந்து வருகின்றன.

இருக்கின்ற குர்ஆன் ஒன்றே. அதில் எவ்வித மாற்றமும் கிடையாது என்ற ஷீஆ–சுன்னா முஸ்லிம்களின் பலமான நம்பிக்கை ஏகாதிபத்தியத்தின் சதிமுயற்சிக்கு பதிலடியாக அமைந்து வருகிறது. இந்நிலையில் அந்நம்பிக்கையை தகர்க்கும் முயற்சியாக ஷீஆக்களிடம் இன்னுமோர் குர்ஆன் என்ற கோசத்தை யூதக் கிறித்துவ ஏகாதிபத்தியம், அவர்களின் கைக்கூலிகளின் மூலம் கிளப்பிவிட்டு, இருக்கின்ற குர்ஆனில் நம்பிக்கை இழக்கச் செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது.

மேலும் இஸ்லாமிய உலகில் பல குர்ஆன்கள் இருக்க முடியும் என்ற நம்பிக்கையை தோற்றுவித்து, யூதர்களுக்குச் சார்பாக இயற்றிய போலிநூலைக் குர்ஆனாக அறிமுகப்படுத்தி, இருக்கின்ற குர்ஆன்களில் இதுவே உண்மையானது என்று முஸ்லிம்களை ஏமாற்றவே அது முயல்கிறது. இச்சதிமுயற்சியில், ஷீஆக்களிடம் வேறொரு குர்ஆன் உண்டு என்ற நம்பிக்கையில் முஸ்லிம்கள் சிலரும் சிக்கிக்கொண்டு மீளமுடியாமல் தவிப்பது கவலைக்கிடமானதே.

2.ஷீஆக்களிடம் வேறு குர்ஆன் உள்ளது எனும் பொய்ப்பிரசாரத்தின் மூலம், முஸ்லிம்களின் சகோதரர்களாக வாழும் ஷீஆ முஸ்லிம்களை முஸ்லிம் உலகை விட்டும் வேறுபடுத்தி தனிமைப்படுத்த எடுக்கும் முயற்சிகளில் ஒன்றே இது. வரலாறு நெடுங்கிலும் ஷீஆக்களிடம் தோல்வி கண்ட மேற்குலகு இவ்வகைப் பிரசாரத்தின் மூலம் பழிதீர்த்துக்கொள்ள முனைகின்றது.

3.முஸ்லிம் சமூகத்தின் ஐக்கியத்தையும், நல்லுறவையும் சீர்குலைத்து, அதன் மூலம் இஸ்லாமிய உம்மத்தின் முழு பலத்தையும் இழக்கச் செய்வதற்கான சதியாகவும் இது பார்க்கப்படுகிறது. இஸ்லாத்தின் எதிரிகள், ஷீயா–சுன்னா மோதல்களை ஏற்படுத்த இம் முரண்பாடுகளைத் தோற்றுவித்து வருகின்றனர். துரதிஷ்டவசமாக, இவ்விழிவான செயல்களுக்கு இஸ்லாத்திற்குள் இருக்கின்ற சிலர் கோடரிக்காம்புகளாகப் பயன்படுத்தப்படுகின்றனர்.

4.ஷீஆக்களிடம் வேறொரு குர்ஆனுள்ளது எனும் பொய்ப்பிரசாரத்திற்கு மற்றொரு காரணம், இன்றுவரைக்கும் மாற்றப்படாத வேதம் அல்குர்ஆன் ஒன்றுதான். கிறித்துவம் உட்பட உலக சமயங்கள் எல்லாவற்றினதும் வேதங்களும் கையாடல்களுக்குள்ளானவை. கையாடல் பண்ணப்படாத ஒரே வேதநூல் என்ற புகழ் அல்–குர்ஆனுக்கு மட்டுமே உண்டு. இப்புகழை இல்லாமற்செய்யும் முயற்சியில் யூதக் கிறித்துவ மிஷனரிகள் இவ்வாறான பொய்ப் பிரச்சாரங்களைக் கையாண்டு வருகின்றன. முஸ்லிம்களில் ஒரு பிரிவினர், மற்ற பிரிவினரிடம் வேறொரு குர்ஆனுள்ளதாகக் கூறுவது, குர்ஆன்

மாற்றப்பட்டுள்ளதற்கு சான்று எனக்காட்ட முயற்சிக்கின்றனர். 6666 வசனங்களையும், 114 அத்தியாயங்களையும் கொண்டதாக உலக முஸ்லிம்கள் நம்புகின்ற அதே குர்ஆனைத்தான் ஷீஆக்களும் நம்புகின்றனர். இதுதவிர, அல்–குர்ஆன் பற்றிய வேறெந்த தவறான நம்பிக்கையும் அவர்களிடமில்லை.

“ஷீஆக்களின் குர்ஆனில் சுமார் 17000 வசனங்களிருப்பதாகவும், அது 40 ஜுஸ்ஊக்களைக் கொண்டதாகும்”; என இஸ்லாத்திற்கு எதிரானோரின் பொய்ப்பிரசாரம் காணப்படுகின்றது. பிறர்மீது வீண்பழி சுமத்துவதில் சற்றேனும் தயக்கம் காட்டாத இவர்கள், முஸ்லிம் சமூகத்தின் ஒரு பகுதி மக்களிடம் வேறு குர்ஆன் காணப்படுவதாகக் கூறி, குர்ஆனின் மகிமைக்குப் பங்கம் ஏற்படுத்தி வருகின்றனர்.

## 1.1.ஷீஆ எதிர்ப்புப் பிரசாரத்தில் புதுவித யுக்தி

ஷீஆக்களிடம் வேறுகுர்ஆன் இருப்பதாக கூறப்பட்டு வந்த பொய்ப்பரசாரத்தை நம்பி ஏமாறாத மக்கள், அந்த குர்ஆனைக் காட்டும்படி அக்கருத்தை கூறிவந்தவர்களிடம் வேண்டினர். பொய்கூறி அதன் விபரீதத்தில் சிக்கிக் கொண்ட அவர்கள் “ஷீஆக்களிடம் குர்ஆன் வேறுதான். ஆனால் அதனை அவர்கள் எம்மிடம் காண்பிக்கமாட்டார்கள். அவர்களிடம் தகிய்யா எனும் நடிப்பு இருக்கிறது” எனச் சாட்டுச் சொல்லி மக்களின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றார்கள்.

அவ்வேளையில் உலகிலுள்ள ஷீஆ அமைப்புக்கள் சில முன்வந்து “அப்படியானதொரு குர்ஆனை கண்டுபிடித்துத் தருமாறும், அதனைப் கண்டுபிடித்துத் தருவதற்கான சகல வசதிகளையும் செய்து தருவதாகவும், அதற்கான முழு செலவினங்களையும் பொறுப்பேற்பதாகவும்” அறைகூவல் விடுத்தன. முதுகெலும்பில்லாத இப்பொய்யர்கள் மூக்குடைந்து போன வரலாறு இன்னும் நினைவிலிருக்கிறது.

ஷீஆ மனிதர் ஒருவர், சுன்னிகள் செரிந்து வாழும் பிரதேசமொன்றுக்குள் நுழைந்தால், (இப்பொய்யர்கள் கூறுவது போன்று) அவர் தகிய்யா செய்து தனது கொள்கையை மறைத்துக் கொள்வதற்கு சாத்தியமுண்டு எனக் கருதினாலும், சுன்னி ஒருவர் ஷீஆக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்குச் சென்றால், இந்த ஒரு சுன்னி மனிதரைக்கண்டு அங்குள்ள ஷீஆ மக்கள் அனைவரும் தங்களது நம்பிக்கையையோ, அகீதாவையோ மறைத்துக்கொள்ள வாய்ப்பில்லை, தேவையும் இருக்காது.

இது இவ்வாறிருக்க, இன்று ஷீஆக்கள் உலகில் அல்லாஹ்வைத்தவிர வேறு எந்த சக்திக்கும் அஞ்சாது, உலகின் உரிமையாளர்கள் என தன்னைக் கருதிக் கொண்டிருக்கும் மேற்குலக சக்திகளுக்கு அஞ்சாது அஞ்சா நெஞ்சத்துடன் தலை நிமிர்ந்து வீறுநடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஈரான் மற்றும் ஹிஸ்புள்ளாஹ் ஷீஆக்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. வேறெந்த சக்திக்கும் அஞ்சி, தமது

இஸ்லாமிய சிந்தனையை, கொள்கையை மறைக்க வேண்டிய தேவை கிடையாது. ஆயினும், இவ் அறைகூவலை ஒரு சவாலாக எடுத்து, குறித்த குர்ஆனை பெற்றுத்தருமாறு ஷீஆ அமைப்புகள் வேண்டிக்கொண்டன.

இச்சவாலுக்கும் முகம் கொடுக்க முடியாமல் திண்டாடி அவமானமுற்றுப்போன இப்பொய்யர்கள் புதியதொரு யுக்தியைக் கையாளுவதை காணமுடிகிறது. அதாவது "ஷீஆக்களிடம் குர்ஆன் வேறுதான் ஆனால் அது தற்போது அவர்களின் கைகளில் இல்லை. மாறாக அது அவர்களின் இறுதி இமாமிடம் மட்டுமே உள்ளது. மறைந்திருக்கும் (இமாம் மஹ்தி) அவர்கள் வெளியாகி வரும் போதுதான் அதனை கொண்டுவருவார் எனக்கூறி நழுவிக்கொள்கின்றனர்.

## 1.2.ஹஸரத் அலியினால் ஒன்று சேர்க்கப்பட்ட அல்குர்ஆனும், விரிவுரையும் (முஸ்ஹஃபு அலி)

நபி(ஸல்) அவர்களது காலத்தில் புனித அல்குர்ஆனை எழுதிக் கொண்டிருந்த "குத்தாபுல் வஹீ" என்போரில் ஹஸரத் அலி(அலை) அவர்களும் ஒருவராகத் திகழ்ந்தார்கள். புனித வஹீ இறக்கப்பட்டு நபியவர்களால் அது வியாக்கியானம் செய்யப்பட்ட அனைத்து இடங்களிலும், நேரங்களிலும் சமூகமளித்து அவற்றை நேரடியாகக் கண்டு, பதிவு செய்யும் பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது. மட்டுமன்றி நபியவர்கள் விசேடமாக ஹஸரத் அலி அவர்களுக்கு, குர்ஆனுடன் தொடர்புபட்ட அறிவுரைகளையும் வழங்கினார்கள். நபியவர்களால் போதிக்கப்பட்ட அனைத்தையும், எதுவும் விடுபடாமல் ஏடுகளில் பதிவு செய்தார்கள் ஹஸரத் அலி அவர்கள். ஷீஆ நம்பிக்கைப்படி "ஹஸரத் அலி அவர்கள் ஒன்று சேர்த்த குர்ஆனானது, நபியவர்களுக்கு இறக்கியருளப்பட்ட திருமறை வசனங்கள் ஒவ்வொன்றும் எங்கு? எப்போது? யாருடைய விடயத்தில் இறக்கப்பட்டது? அது எவ்விடயத்தை சொல்கிறது? போன்ற அனைத்து தப்ஸீர் விளக்கங்களையும் உள்ளடக்கியாதாக இருந்தது. இது முஸ்ஹஃபு அலீ என்றழைக்கப்படுகிறது.

நபியவர்களின் வபாத்திற்குப்பின் பல ஏடுகளாக காணப்பட்ட அல்குர்ஆனை ஒருமைப்படுத்தி உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டிய தேவை அக்காலத்தில் உணரப்பட்டது. அப்போது ஸஹாபிகளான உபை பின் கஅப், செய்து பின் தாபித் முதலானோர் தங்களால் ஒன்றுதிரட்டப்பட்ட குர்ஆனை முன்வைத்தார்கள்.

ஹஸரத் அலி அவர்களும், தான் ஒன்று சேர்த்த குர்ஆனைக் காண்பித்தார்கள். நபியவர்கள் போதித்த பிரகாரம் வியாக்கியானங்களும், விளக்கங்களும் அதில் அடங்கி இருந்தன. ஒருவரின் உடலில் மற்றொருவரினால் ஏற்படுத்தப்படும் சிறிய கீறல் ஒன்றுக்கு அபராதம் என்ன? என்பதுபோன்ற மிக நுணுக்கமான, மிகச் சிறிய விடயங்களுங்கூட அதில் இருக்கின்றன என அவர்களால் உணர்த்தப்பட்டது. ஆனால் அன்றைய கிலாபத்

பதவியிலிருந்தோர், அக்குர்ஆனின் விளக்கங்கள் தமக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை எனும் காரணத்தால் அதனை ஏற்க மறுத்து விட்டனர். ஹஸரத் அலி(அலை) அவர்கள் பலதடவைகள் அதனை வலியுறுத்திக் கூறியும் மறுத்து நின்ற அவர்களைப் பார்த்து “ஆம், என்மீதிருந்த இப்பொறுப்பைச் செய்து விட்டேன். இதனால் மறுமையில் என்மீது பழிவந்து விடக்கூடாது என நான் அஞ்சினேன். எனவே இதனை மறுப்பதுதான் உங்களின் நிலைப்பாடு என்றால் இதன் பிறகு இக்குர்ஆனை நீங்கள் காணவேமாட்டீர்கள்” எனக் கூறினார்கள். ஷீஆக்களின் நம்பிக்கைப்படி, ஹஸரத் அலி(அலை) அவர்களால் ஒன்று திரட்டப்பட்ட அந்த குர்ஆன் மேலதிக வியாக்கியானங்களைக் கொண்டது. அக்குர்ஆன், அவர்களுக்குப் பின்வந்த இமாம்களிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது, அது இறுதி இமாமான இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கையில் இருந்து வருகின்றது.

### 1.3.முஸ்ஹஃபு அலி பற்றிய மேலதிக தகவல்கள்

1.முஸ்ஹபு அலி எனும் தஃப்ஸீர் நூல் உள்ளடக்கியிருக்கும் குர்ஆன், வசனங்கள், அத்தியாயங்கள், சொற்கள், எழுத்துக்கள் முதலானவை, அடிப்படையில் முஸ்லிம்கள் ஓதுகின்ற குர்ஆனுக்கு எவ்வகையிலும் வித்தியாசப்படாத ஒன்றாகும்.
2.ஒவ்வொரு வசனத்திற்கு கீழும் அது பற்றி நபியவர்களால் வழங்கப்பட்ட வியாக்கியானங்கள் குறிக்கப்பட்டுள்ளன.
3.எக்காரணத்திற்காக, எவருடைய விடயத்தில் இறக்கப்பட்டது எனும் “சபபுந்நுஸூல்” களும் அதில் காணப்படுகின்றன.
4.இதில் மன்ஸூக் எனும் மாற்றப்பட்ட சட்டங்களைக் கூறும் நஸ்க் வசனங்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

ஹஸரத் அலி(அலை) அவர்கள் இத் தஃப்ஸீர் குர்ஆன் பற்றிக் குறிப்பிடுகையில்,

“நபி பெருமானார்(ஸல்) அவர்கள் தமக்கு இறங்கிய ஒவ்வொரு வசனத்தையும் எனக்கு ஓதிக் காண்பிக்க, நான் எனது கையினால் அவைகளை எழுதினேன்.
எனக்கு அதனுடன் தொடர்புடைய தப்ஸீர்–தஃவீல், நாஸிக்–மன்ஸூக், முஹ்கம்–முதஷாபிஹ் முதலானவற்றைக் கற்றுத்தந்தார்கள். இதனை, நான் மறக்காமல் பாதுகாப்பதற்கு இறைவனிடம் எனக்காகப் பிரார்த்தித்தார்கள். அன்றிலிருந்து நான் நபியவர்கள் போதித்த எந்த வசனத்தையும் மறக்கவுமில்லை, அவர்கள் கற்றுத்தந்து நான் எழுதிய எவ்விடயத்தையும் இழக்கவுமில்லை.” (தப்ஸீருல் புர்ஹான், பா: 01, பக்: 16)

முஸ்ஹபு அலி எனும் தஃப்ஸீர் குர்ஆனுக்கும், முஸ்லிம்களின் கைகளிலுள்ள குர்ஆனுக்கும் இடையில் எவ்வித வித்தியாசமும் கிடையாது. இவ்விரண்டு பிரதிகளும் ஒரே வகையான சூறாக்களையும், வசனங்களையுமே கொண்டதுதான் என்பதே ஷீஆ நம்பிக்கை. இதில் தப்ஸீர் (விளக்கங்கள்) மாத்திரம் மேலதிகமாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஹஸரத் அலி அவர்கள் ஒன்று சேர்த்து இமாம்களிடம் ஒப்படைத்த இத்தப்ஸீர் நூலைத்தான் சிலர், ஷீஆ இமாம்களிடம் வேறொரு குர்ஆன் இருப்பதாகவும், அதில் சுமார் 17000 வசனங்கள் உள்ளதாகவும் பொய்ப்பிரசாரம் செய்கின்றனர். அறியாமை காரணமாக குர்ஆனின் மகிமைக்கு பங்கமேற்படுத்த முனைபவர்களுக்கும், திட்டமிட்டு சதி செய்யும் சதிகாரர்களுக்கும் அல்லாஹ்வே போதுமானவன்.

## 1.4.சந்தேகத்திற்கிடமான நூல்

ஷீஆக்கள் வேறொரு குர்ஆனைக் கொண்டுள்ளனர் என்பதற்கு ஆதாரம் கற்பிக்க முனையும் இஸ்லாத்தின் எதிரிகள், ஷெய்க் பழ்லுல்லாஹ் நூரீ என்பவரால் எழுதப்பட்டதாகக் கூறப்படும் فصل الخطاب (பஸ்லுல் கிதாப்) எனும் நூலை மேற்கோள் காட்டுவது வழக்கம். ஷீஆக்கள் மேற்குறித்த நூலை சந்தேகத்திற்கிடமான ஒன்றாகவே பார்க்கின்றனர். அதனையும், அதில் கூறப்பட்டவையையும் ஷீஆக்கள் அங்கீகரிப்பதில்லை. சந்தேகத்திற்கிடமான இந்நூலை எதிர்த்து ஷீஆ அறிஞர்கள் பலர், நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளனர். ஷெய்க் மஹ்மூத் பின் அபில் காஸிம் (மரணம் 1313 ஹிஜ்ரி) كشف الارتياب فى عدم تحريف الكتاب எனும் நூலை எழுதினார். அல்லாமா செய்யித் முஹம்மத் ஹுசைன் ஷஹ்ரிஸ்தானி (1315 ஹிஜ்ரி) حفظ الكتاب الشريف عن شبهة القول بالتحريف எனும் நூலை யாத்தார். அல்லாமா பலாகீ (1352ஹிஜ்ரி) تفسيرآلاءالرحمان எனும் நூலை எழுதினார். ஷீஆ நம்பிக்கையை பிரதிபலிக்காத ஒரு சந்தேகத்திற்கிடமான நூலை அடிப்படையாக வைத்து அவர்களின் குர்ஆன்பற்றிய உறுதியான நம்பிக்கையை மாசுபடுத்த முயல்வது, ஷீஆக்களுக்கு செய்யும் துரோகம் என்பதை விடவும், குர்ஆனுக்குச் செய்யும் துரோகமென்றே கூறவேண்டும்.

ஷீஆ அறிஞர்களில் எவருமே குர்ஆன் மாற்றப்பட்டதாகவோ, நபியவர்களுக்கு இறக்கப்பட்ட குர்ஆன் தவிர்ந்த வேறொரு குர்ஆன் உள்ளதாகவோ ஏற்றுக்கொள்ளவில்லை.

## 1.5.பலயீனமான ஹதீஸ்கள்

ஷீஆசார் நூற்களில் குர்ஆன் திரிபுக்குள்ளானதாக கூறும் பலயீனமான அறிவிப்புகள் காணப்படுவது போன்று சுன்னி கிரந்தங்களிலும் அவ்வாறான அறிவிப்புகள் காணப்படவே செய்கின்றன. சுன்னி தரப்பு அறிவிப்புகளில் சிலதை இங்கு நோக்குவோம்.

“குர்ஆனில் ஹல்ஃ, ஹப்த் எனும் இரு அத்தியாயங்கள் இருந்தன. அவ்விரண்டும் மறைந்து விட்டன” என இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி கூறுகின்றார். இவ்விரு அத்தியாயங்களில் சில வசனங்களை அதில் சுட்டிக்காட்டுகின்றார். (துர்ருல் மன்தூர், இமாம் சுயூத்தி பா:06 பக்:420)

உபை பின் கஃப் மற்றும் அன்னை ஆயிஷா ஆகிய இருவரும் அறிவிக்கின்றார்கள் “(73 அத்தியாயங்களைக் கொண்ட)சூரா அஹ்ஸாப், நபியவர்களின் காலத்தில் (286 வசனங்களைக்கொண்ட) சூரதுல் பகராவின் எண்ணிக்கையளவு காணப்பட்டது இதில் ஆயதுர்ரஜ்ம்(கல்லெறிந்து கொள்ளும் தண்டனை பற்றிய) வசனமும் இருந்தது”.
(கன்ஸுல் உம்மால் பா: 02 பக்: 567, பத்குல் கதீர் பா: 01 பக்: 126, தப்சீர் குர்துபி பா: 14 பக்: 113)
இக்கூற்றின்படி, இப்போதுள்ள குர்ஆனில் காணப்படும் சூரா அஹ்ஸாப் சுமார் 213 வசனங்களை இழந்து காணப்படுவதுபோலல்லவா தெரிகிறது !

இரண்டாம் கலீபா அவர்கள் தனது இறுதி ஹஜ்ஜின் போது கூறினார்கள், “நபியவர்களின் காலத்தில் ஆயதுர்ரஜ்ம் (கல்லெறிந்து கொள்ளும் சட்டைத்தைக் கொண்ட) வசனத்தை நாம் ஓதிவந்தோம். ஆனால் அது தற்போது இல்லை. (புகாரி பாகம்: 08 பக்: 208)

மீண்டும் அவர் கூறுகையில் «أن لا ترغبوا عن آباءكم فإنه كفر بكم أن ترغبوا عن آباءكم» எனும் வசனத்தை நாம் நபியவர்களின் காலத்தில் ஓதிவந்தோம். அதை தற்போது காணமுடியாதுள்ளது. (புகாரி பாகம்: 08 பக்: 208, முஸ்லிம் பா:04 பக்கம் 167)

«أن جاهدوا كما جاهدتم اوّل مرّة» எனும் ஜிஹாதிய வசனம் குர்ஆனில் இருந்ததாக உபை பின் கஅப் அவர்களிடம் கூறப்பட்டதற்கு “ஆம் அதுவும் இல்லாமல் போன வசனங்களில் ஒன்றாகும் என்றார்.
(கன்ஸுல் உம்மால் பா:02 பக்:567, துர்ருல் மன்தூர் பா:01 பக்:106)

அப்தில்லாஹ் பின் உமர் கூறுகின்றார் “உங்களில் எவரும் தன்னை முழு குர்ஆனையும் ஓதக்கிடைத்த ஒருவர் என நினைக்க வேண்டாம். முழுக்குர்ஆன் என்றால் என்னவென்று அவருக்குத் தெரியுமா? குர்ஆனின் அதிகமான பகுதிகள் இல்லாமல் போய்விட்டன. வெளிப்படையாக காண்பதைத்தான், தான் பெற்றிருப்பதாக அவர் கொள்ளட்டும்”.
(அல் இத்திகான், இமாம் சுயூத்தி பா: 03 பக்: 72, துர்ருல் மன்தூர் பா: 01 பக்: 106)

இப்னு சிஹாப் கூறுகின்றார் “ தற்போது இருப்பதை விட அதிகளவான குர்ஆனிய வசனங்கள் இறங்கியதாக எமக்கு அறியக்கிடைக்கிறது. யமாமா போரில் அதை நன்கறிந்தவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.
அவர்களுக்குப்பிறகு அது அறியப்படவுமில்லை எழுதப்படவுமில்லை.
(கன்சுல் உம்மால் பா:02 பக்:584)

அன்னை ஆயிஷா நாயகியின் அடிமையான அபூயூனுஸ் கூறுகின்றார் “
«انّ اللّه و ملائكته يصلون على النبيّ يا ايها الذين آمنوا صلوا عليه و سلموا تسليما و على الذّين يصلون الصفوف الأوّل»
எனும் வசனம் மேற்கண்டவாறுதான் காணப்பட்டது. (அல் இத்திகான் பா: 03 பக்: 73)

உபை பின் கஅப் கூறுகின்றார் "நபியவர்களின் காலத்தில் சூரா பய்யினாவில் பின்வரும் அத்தியாயமும் காணப்பட்டது. அது தற்போது குர்ஆனில் இல்லை".

«لو أنّ لإبن آدم واديين من مال لسأل وادياً ثالثاً و لا يملأ جوف ابن آدم الا التراب»

(முஸ்னத் அஹ்மத் பா: 5 பக்: 132, தப்ஸீர் குர்துபி பா: 5 பக்: 139)

அபூமூஸா அஷ்அரி பசராவைச் சேர்ந்த முன்னூறு (குர்ஆன் ஓதுநர்களான) காரிகளைப்பார்த்து சொன்னார் "நாங்கள் சூரா பராஅத்துடைய எண்ணிக்கையளவில் ஒரு சூராவை ஓதிவந்தோம். அதிலிருந்து ஒரு வசனத்தைத்தவிர மற்றவைகளை மறந்துவிட்டோம். அது,

«لو كان لإبن آدم واديان من مال لابتغى وادياً ثالثاً و لا يملأ جوف ابن آدم الا التراب»

என்பதாகும். அதேபோன்று சப்பஹலில்லாஹி எனும் அத்தியாயத்தைப் போன்றதொரு அத்தியாயத்தை நபியவர்களின் காலத்தில் நாம் ஓதிவந்தோம் அதிலிருந்து

«يا ايّها الذين آمنوا لم تقولون ما لا تفعلون فتكتب شهادة في اعناقكم فتسألون عنه يوم القيامة»

எனும் வசனம் மாத்திரமே என் நினைவில் இருக்கிறது. (முஸ்லிம் பா: 3 பக்: 100)

சுர்பின் ஹுபைஸ் கூறுகின்றார் "உபை பின் கஅப் என்னிடம் 'சூரா அஹ்ஸாப் எத்தனை வசனங்களைக் கொண்டுள்ளது என்று தெரியுமா?' எனக் கேட்டார். 73 என்றேன். 'இல்லை! அது சூரா பகரா அளவு இருந்தது. அதில், و الشيخة إذا زنيا فارجموهما البيتة எனும் வசனமும் காணப்பட்டது" (அல் இத்திகான் பா: 03பக்: 72)

மாலிக் பின் அனஸ் கூறுகின்றார்: "சூரதுல் பராஅத் எனும் அத்தியாயம் சூரா பகராவின் அளவுக்கு நீண்டதாக காணப்பட்டது. அதிலிருந்த பல வசனங்கள் இல்லாமலுள்ளன. அதன் ஆரம்பத்திலிருந்த பிஸ்மில்லாஹ்வும் இல்லாமல் போயுள்ளது.

(அல் இத்திகான் 1:183)

ஹுதைபா பின் யமானி கூறுகின்றார்: "நீங்கள் சூரா பராஅத்தின் நாங்கிலொரு பகுதியைத்தான் இப்போது ஓதுகின்றீர்கள். அதற்கு தௌபா என பெயரிட்டுள்ளீர்கள். ஆனால் அதன் பெயர் சூரா "அதாப்" ஆகும். (அல் இத்திகான் 1:184)

அப்தில்லாஹ் பின் அப்பாஸ் கூறுகின்றார்:

حتى تستأذنوا وتسلموا எனும் வசனம்,«حتى تستأنسوا و تسلموا على اهلها» என பிழையாக ஓதப்படுகிறது.

(தஃப்ஸீருத்தபரி – ஜாமியுல் பயான் 87,18)

அப்தில்லாஹ் பின் அப்பாஸ் «أفلم ييأس الذين آمنوا» எனும் வசனத்தை «افلم يتبين الذين آمنوا» என ஓதினார். ஏன் இப்படி ஓதுகின்றீர் என அவரிடம் கேட்கப்பட்டதற்கு அதை பதிவு செய்தவர் தூக்கத்தில் இருந்துள்ளார் என்றார்.

(தபசீருத்தபரி – ஜாமியுல் பயான் பாக:13 பக்: 104))

உர்வது பின் சுபைருக்கு மூன்று குர்ஆனிய வசனங்களில் சந்தேகம் எழுந்தது. அதனை ஆயிஷா நாயகியிடம் அவர் வினவினார். அதற்கு அவர் "எனது சகோதரியின் மகனே! இது எழுத்தாளர்களின் தவறு" என்றார்.

(அல் இத்திகான் 1:182)

சுன்னத் வல்ஜமாத் கிரந்தங்களில் காணப்படும் இது போன்ற பல அறிவிப்புகள் குர்ஆனில் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டுகின்றன. வெளிப்படையில் குர்ஆனில் திரிபுகள் இடம்பெற்றுள்ளதை இது கூறினாலும் சுன்னத் வல் ஜமாஅத் அறிஞர்கள் இதை மறுக்கின்றனர்.

இந்த வகை ஆதாரங்களை வைத்து சுன்னத்வல்ஜமாஅத்தினரும் மாற்றப்பட்ட குர்ஆனையே நம்பிக்கை கொண்டுள்ளனர் என யாரும் வாதிட முடியாது. ஷீஆ ஹதீஸ் கிரந்தங்களிலும் இது போன்ற குர்ஆனில் கூட்டல், குறைத்தல் இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டும் ஹதீஸ்கள் காணப்படுவதை யாரும் மறுக்க வில்லை.

எனினும் அவைகளில் அதிகளவானவை பலயீனமான ஆதாரங்களாகவும், இன்னும் சில தப்சீருடன் தொடர்புடைவைகளாகவும் நோக்கப்படுகின்றன. குர்ஆன் மாற்றமடையாத வேதம் என்பதை மிக ஆணித்தரமாக எடுத்துக்கூறும் பெருந்தொகை ஆதாரங்களை நோக்கும் போது, இவை மிகவும் அரிதானவை. இத்தகைய ஹதீஸ்களை ஷீஆ அறிஞர்கள் தொன்று தொட்டு இன்றுவரை மறுத்தே வந்துள்ளனர்.

ஆகவே, குர்ஆன் மாற்றமடையாத வேதம் அது தவிர்ந்த வேறு குர்ஆன் இருப்பதாக ஷீஆக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை.எகிப்தைச் சேர்ந்த இப்னுல் கதீப் மிஸ்ரீ எனும் சுன்னி அறிஞர் "அல்புர்ஹான் பீ தஹ்ரீபில் குர்ஆன்" البرهان فى تفسير القرآن எனும் நூலை எழுதி, குர்ஆன் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இவரின் பிழையான வாதத்தை தூக்கிப்பிடித்து "சுன்னிகளும் மாற்றமடைந்த குர்ஆனையே நம்பிக்கை கொண்டுள்ளனர்" என ஷீஆக்கள் கூறவில்லை.

ஏனெனில், இதுவொரு பிழையான அணுமுறையாகும். இதனையே ஷீஆக்கள் விடயத்தில் மற்றவர்கள் கையாளுவதைக் காணலாம்.

ஷீஆக்களிடம் வேறு குர்ஆன் இருப்பதாக பொய்ப்பிரசாரம் செய்வோர்

குர்ஆன் மாற்றப்பட்டுள்ளது என்றோ அல்லது வேறு குர்ஆன் உள்ளதாகவோ கூறுபவர்கள் இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் துரோகமிழைத்து, மேற்கத்திய சதிகளுக்கு

துணைபோகிறார்கள். குர்ஆன் பற்றி தவறாகக் கூறி, முஸ்லிம்களின் மூல வழிகாட்டியான இறைவேதத்தில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறார்கள். குர்ஆனைப் போன்ற ஒன்றை எவராலும் கொண்டு வரமுடியாது என இறைவன் சவால்விட்டிருக்கும் போது, ஷீஆக்களால் வேறொரு குர்ஆன் உருவாக்கப்பட்டுள்ளது எனக் கருதினால் இறைவனது சவால் என்னாவது?.

இஸ்லாத்தின் எதிரிகளால் புனையப்பட்ட கட்டுக்கதைகளை நம்பி ஏமாந்து, பிறர் மீது அபாண்டம் கூறுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டியதாகும். அதிலும் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடொன்றை இத்தகைய முறைகேடான நடத்தை மூலம் தகர்த்தெறிய இடமளிப்பது மகாபாவமாகும். இத்தீமையின் பால் செல்வோரும், சமூகத்தை வழிகெடுப்போரும் நிச்சயமாக குர்ஆனின் சாபத்திற்கு ஆளாகுவார்கள் என்பது தின்னம்.

**02.ஸஹாபாக்களைத் தூற்றலாமா?**

ஷீஆக்கள் நபித்தோழர்களை ஏசுபவர்கள், தூற்றுபவர்கள் அவர்களை காபிரென்பவர்கள் என்ற குற்றச்சாட்டு ஷீஆக்கள் மீது சுமத்தப்படுகிறது. இது தொடர்பாக ஷீஆக்களின் கண்ணோட்டத்தை இதில் நோக்குவோம்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் அல்லது அவர்களது காலத்தில் வாழ்ந்து ஸஹாபி எனும் நாமத்தைப் பெற்றோர், இறைவஹியை இன்புறச் சுவைத்து, சுகித்தோராகவும், நபியவர்களின் அற்புதங்களை தம் கண்களால் கண்டு அவர்களின் போதனைகளை தம்செவிகளினால் கேட்டு பின்பற்றி வாழ்ந்தோராகவும் இருந்தார்கள். ஸஹாபிகள் இஸ்லாத்தைக் கட்டியெழுப்புவதில் அரும்பாடுபட்டோர்கள். அதனை வளர்த்தெடுப்பதில் நிகரில்லாத பல தியாகங்களைப் புரிந்தோர்கள்.
அவர்களின் தியாகங்கள் பின் வந்தவர்களின் தியாகங்களுடன் எவ்வகையிலும் ஒப்பிடமுடியாதது. இதனைப் பிரதிபலிக்கும் வகையில் வரலாறு அவர்களின் பெயர்களையும் சரித்திரங்களையும் பதிவு செய்து பெருமைப்படுவதை நாம் காண்கிறோம்.
எனினும் ஸஹாபி எனும் நாமத்திற்குள் உள்ளடக்கப்படுவோர் அனைவரும் நீதி, நேர்மை, உண்மை, தக்வா முதலானவற்றைக் கொண்டு பரிபூரணம் பெற்றவர்களாக, தூய்மையானவர்களாக வாழ்ந்தார்களா? அல்லது அவர்களில் நேர்வழியிலிருந்து தவறியோரும் காணப்பட்டார்களா? என ஆராயும்போது இவ்விடயத்தை கீழ்வருமாறு நோக்கலாம்.
எதிர்மறையான இரு கருத்துக்கள்

- "ஸஹாபிகள் அனைவரும் தூய்மையானோரும், தக்வா மற்றும் நன்னடத்தை கொண்டோருமாக இருந்தனர். இதனால் அவர்கள் செய்த எத்தகைய தவறானாலும் அதனை நியாயப்படுத்தி ஏற்றுக்கொள்வதோடு ஒருபோதும்

அவர்களில் குறைகாணக்கூடாது" என முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் நம்பிக்கை கொண்டிருக்க, முஸ்லிம்களில் இன்னுமொரு பிரிவினர்,

- "ஸஹாபிகள் நன்மை, தீமை புரியும் விடயத்தில் ஏனைய மனிதர்களைப் போன்றவர்கள். இதர மனிதர்களை நல்லவர்கள், கெட்டவர்கள் என தரம்பிரிக்கக் கையாளும் அணுகுமுறைகளை ஸஹாபிகள் விடயத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். நீதியை நீதியாகவும், அநீதியை அநீதியாகவுமே பார்க்க வேண்டும். உண்மைக்கும் சத்தியத்திற்கும் முரணாக அமைந்த எச்செயலையும் நியாயப்படுத்த முடியாது. காரணம் இச்செயலால் இஸ்லாம் எனும் கோட்டைக்குள் (நயவஞ்கம்) நிஃபாக்கும், குஃப்ரும் ஊடுருவும் நிலை உருவாகும்" என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ்விரண்டாவது கருத்தைக் கொண்டவர்களாக ஷீஆக்கள் காணப்படுகின்றனர். ஷீஆக்களின் கண்ணோட்டத்தில் "ஸஹாபாக்களில் அதிகமானோர் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், இஸ்லாத்திற்கும் மிகவிசுவாசமாக இருந்தார்கள். இவர்கள் மரியாதையோடும், சங்கையோடும் நோக்கப்பட வேண்டியவர்கள். இஸ்லாத்திற்கும் குஃப்ருக்குமிடையில் நிகழ்ந்த யுத்தங்களில் உயிர் நீத்த ஷுஹதாக்களும், நபிவழியில் இறுதி மூச்சுவரை வாழ்ந்த தோழர்களும் இவர்களுள் அடங்குவர். இதே நேரத்தில் ஸஹாபிகள் என்ற வட்டத்திற்குள் நயவஞ்சகர்களும், உளநோய் கொண்டோரும், நபியவர்களுக்கு தெரிந்த மற்றும் தெரியாத வேடதாரிகளும் உள்ளடங்கி இருந்தனர் என்பதை இஸ்லாமிய வரலாற்றையும், குர்ஆனையும் நன்கறிந்த எவரும் மறுக்கமாட்டார். இக்கருத்தை நிருவும் ஆதாரங்களை பின்வருமாறு நோக்கலாம்.

### 2.1.குர்ஆனின் பார்வையில் ஸஹாபாக்கள்

அல்குர்ஆன் நபித்தோழர்களை இரு வகையாகப் பிரித்துக் காண்பிக்கிறது.
1.முதலாவது பிரிவினர்

குர்ஆனின் நிலையான திருவசனங்கள் இப்பிரிவினரை என்றும் புகழ்ந்துரைத்துக் கொண்டே இருக்கிறது. இவர்கள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் அரும்பாடுபட்டோர். இவர்களைப் புகழும் திருமறை வசனங்களைக் கீழே காண்போம்
1 – I.<u>இறைதிருப்தியைப் பெற்றோர்</u>
பரிபூரண ஈமானையும், இஹ்லாஸையும் கொண்டு வாழ்ந்த முஃமின்கள். இவர்களின் உள்ளங்களை ஈமான் ஆழமாக ஆட்கொண்டதால், இறைவனும் இவர்களை பொருந்திக் கொண்டான். இவர்களும் இறைவனைப் பொருந்திக் கொண்டனர்.
இறைவன் குர்ஆனில் இவ்வாறு புகழ்கிறான்:
وَالسَّابِقُونَ الأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالأَنصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُم بِإِحْسَانٍ رَّضِيَ اللّهُ عَنْهُمْ وَرَضُواْ عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي تَحْتَهَا الأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ذَلِكَ الْفَوْزُ الْعَظِيمُ

இன்னும் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார்களில் முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக்கொண்டோரும், நலவைப் புரிவதில் இவர்களைப் பின்பற்றியோருமாக இருக்கிறார்களே அத்தகையோரை அல்லாஹ் பொருந்திக் கொண்டான். அவர்களும் அவனைப் பொருந்திக் கொண்டனர். மேலும், நித்தியமாக அவர்கள் தங்கியிருக்கும் நிலையிலான, ஆறுகள் கீழாக ஓடுகின்ற சுவனபதிகளை அவர்களுக்காக சித்தப்படுத்தியுள்ளான் – இதுவே மகத்தான வெற்றியாகும். (9:100)

1 – II. <u>மரத்தடியில் பைஅத் செய்தோர்</u>

لَقَدْ رَضِيَ اللَّهُ عَنِ الْمُؤْمِنِينَ إِذْ يُبَايِعُونَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِي قُلُوبِهِمْ فَأَنزَلَ السَّكِينَةَ عَلَيْهِمْ وَأَثَابَهُمْ فَتْحًا قَرِيبًا

முஃமின்கள் அந்த மரத்தடியில் உம்மிடம் பைஅத் செய்தபோது, மெய்யாகவே அவர்களைப் பொருந்திக் கொண்டான். மேலும் அவன், அவர்களுடைய இதயங்களில் இருப்பதை அறிந்து, அவர்கள் மீது அமைதியைப் பொழிந்து, அண்மித்த வெற்றியை அவர்களுக்கு வழங்கினான். (48:18)

1 – III. <u>முஹாஜிரீன்கள்</u>

لِلْفُقَرَاء الْمُهَاجِرِينَ الَّذِينَ أُخْرِجُوا مِن دِيارِهِمْ وَأَمْوَالِهِمْ يَبْتَغُونَ فَضْلًا مِّنَ اللَّهِ وَرِضْوَانًا وَيَنصُرُونَ اللَّهَ وَرَسُولَهُ أُوْلَئِكَ هُمُ الصَّادِقُونَ

தம் வீடுகளையும், சொத்துக்களையும் விட்டு வெளியேற்றப்பட்ட ஏழை முஹாஜிர்களுக்கும் (ஹிஜ்ரத் செய்தவர்களுக்கும் அப்பொருளில் பங்குண்டு). இவர்கள் அல்லாஹ்வின் அருளையும், திருப் பொருத்தத்தையும் தேடியோராகவும், அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் உதவுவோராகவும் இருக்கின்றனர். நிச்சயமாக அவர்களே உண்மையாளர்கள்.

(59:08)

1 – IV. <u>வெற்றிக்குரியோர்</u>

مُّحَمَّدٌ رَّسُولُ اللَّهِ وَالَّذِينَ مَعَهُ أَشِدَّاء عَلَى الْكُفَّارِ رُحَمَاء بَيْنَهُمْ تَرَاهُمْ رُكَّعًا سُجَّدًا يَبْتَغُونَ فَضْلًا مِّنَ اللَّهِ وَرِضْوَانًا سِيمَاهُمْ فِي وُجُوهِهِم مِّنْ أَثَرِ السُّجُودِ

இறைத்தூதரான முஹம்மது(ஸல்) அவர்களும், அவர்களுடன் இருப்போரும் காஃபிர்கள்மீது கண்டிப்பானோராகவும், தமக்கிடையே இரக்கமுள்ளோராகவும் இருக்கின்றனர். அல்லாஹ்விடமிருந்து அருளையும், திருப் பொருத்தத்தையும் தேடிய நிலையில் ருகூஃ செய்வோராகவும், ஸுஜூது செய்வோராகவும் அவர்களை (நபியே) நீர் காண்பீர். அவர்களுடைய அடையாளமானது, ஸுஜூதுடைய பிரதிபலிப்பினால் அவர்களுடைய முகங்களில் (நெற்றியில் ஏற்பட்டு) இருக்கும். (48:29)

2.இரண்டாவது பிரிவினர்

இப்பிரிவினரில் பாவிகளும், உளநோய் கொண்டோரும், நபியவர்களுக்கு தெரிந்த, தெரியாத வேடதாரிகளும் உள்ளடங்குவர். இப்பிரிவினர் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

2.I – அறியப்பட்ட முனாஃபிகுகள் (நயவஞ்சகர்கள்)

إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ قَالُوا نَشْهَدُ إِنَّكَ لَرَسُولُ اللَّهِ وَاللَّهُ يَعْلَمُ إِنَّكَ لَرَسُولُهُ وَاللَّهُ يَشْهَدُ إِنَّ الْمُنَافِقِينَ لَكَاذِبُونَ

“(நபியே!) முனாஃபிக்குகள் (நயவஞ்சகர்கள்) உம்மிடம் வந்து, நிச்சயமாக, நீர் அல்லாஹ்வின் தூதராக இருப்பதை நாங்கள் சாட்சி சொல்கிறோம் எனக் கூறுகின்றனர். மேலும், நிச்சயமாக (நபியோ) நீர் அவனுடைய தூதராக இருக்கிறீர் என்பதை அல்லாஹ் நன்கறிவான். ஆனால், நிச்சயமாக முனாஃபிக்குகள் (வஞ்சகமாகப்) பொய்யுரைப்போரே என அல்லாஹ் சாட்சி கூறுகிறான். (63:1)

இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் முனாஃபிக்குகள் யார் என்பதை நபியவர்கள் நன்கறிந்திருந்தார்கள்.

2.II – அறியப்படாத முனாஃபிகுகள்

وَمِمَّنْ حَوْلَكُم مِّنَ الأَعْرَابِ مُنَافِقُونَ وَمِنْ أَهْلِ الْمَدِينَةِ مَرَدُواْ عَلَى النِّفَاقِ لاَ تَعْلَمُهُمْ نَحْنُ نَعْلَمُهُمْ سَنُعَذِّبُهُم مَّرَّتَيْنِ ثُمَّ يُرَدُّونَ إِلَى عَذَابٍ عَظِيمٍ

“பாலைவன அரபிகளுள் உங்களைச் சுற்றியுள்ளோரில் நயவஞ்சகர்களும் இருக்கின்றனர். மேலும் மதீனாவாசிகளில் சிலரும், நிஃபாக்கிலே (கபடத்திலேயே) நிலைத்திருக்கின்றனர். (நபியே) நீர் அவர்களை அறியமாட்டீர். நாமே அவர்களை அறிவோம். விரைவில் இருமுறை அவர்களை வேதனை செய்வோம். பின்னர், கடுமையான வேதனையின்பால் அவர்கள் திருப்பப்படுவார்கள். (9:101)

முனாஃபிக்குகள் என்போர் முஸ்லிம் என்ற போர்வையில் இஸ்லாத்திற்கு எதிராகச் செயற்பட்டோராவர். இவ்வசனத்தில் குறிப்பிடப்படும் முனாஃபிகுகளை நபியவர்கள் அறியமாட்டார்கள். அவர்களை அல்லாஹ் மாத்திரமே நன்கறிவான் என்பதை விளங்கமுடிகிறது. அறியப்படாத இந்த முனாஃபிக்குகள் நபி(ஸல்) அவர்களுடன் சஹாபிகள் என்ற வேடத்தில் இருந்தார்கள் என்பது புலனாகிறது.

2.III – உளநோய் கொண்டோர்

وَإِذْ يَقُولُ الْمُنَافِقُونَ وَالَّذِينَ فِي قُلُوبِهِم مَّرَضٌ مَّا وَعَدَنَا اللَّهُ وَرَسُولُهُ إِلَّا غُرُورًا

அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் நமக்கு ஏமாற்றத்தைத் தவிர, வேறெதையும் வாக்களிக்கவில்லை என நயவஞ்சகர்களும், தம் இதயங்களில் நோயைக் கொண்டோரும் கூறிய சமயத்தையும் (நபியே நினைவு கூறுவீராக). 33:12

2.IV – பாவிகள்

وَآخَرُونَ اعْتَرَفُواْ بِذُنُوبِهِمْ خَلَطُواْ عَمَلاً صَالِحًا وَآخَرَ سَيِّئًا عَسَى اللّهُ أَن يَتُوبَ عَلَيْهِمْ إِنَّ اللّهَ غَفُورٌ رَّحِيمٌ
வேறு சிலர் தம் குற்றங்களை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அவர்கள் சாலிஹான அமலை கெட்ட ஒன்றுடன் சேர்த்து விடுகிறார்கள். சிலநேரம் அல்லாஹ் அவர்களை மன்னிக்கக் கூடும். நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போனும், பெருங்கிருபையாளனும் ஆவான். ( 9:102)

மேலும் சில வசனங்கள்

"(யுத்தத்திற்குச் செல்லாதிருக்க) உம்மிடம் அனுமதி கேட்பதெல்லாம் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் ஈமான் கொள்ளாதோர் மட்டுமே. மேலும், அவர்களுடைய இதயங்கள் சந்தேகத்தில் ஆழ்ந்துவிட்டன. ஆகவே அவர்கள் தங்கள் சந்தேகத்திலேயே தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். (9:45)

"மேலும் அவர்கள் (போர் செய்யப்) புறப்படுவதை நாடியிருந்தால், அதற்குரிய தயார்நிலைகளில் இறங்கியிருப்பார்கள். எனினும் (உம்முடன்) அவர்கள் புறப்படுவதை அல்லாஹ் வெறுத்து, அவர்களை(ப் புறப்படாது) தடுத்தும் விட்டான். (யுத்ததிற்கு வரமுடியாமல் வீட்டில்) உட்கார்ந்திருப்போருடன் நீங்களும் உட்கார்ந்து விடுங்கள் என்று (அவர்களுக்குக்) கூறப்பட்டு விட்டது" (9:46)

"அவர்கள் உங்களுடன் புறப்பட்டிருந்தாலும், குழப்பத்தைத் தவிர வேறெதையும் உங்களுக்காக மேலதிகமாய் செய்திருக்க மாட்டார்கள். மேலும், உங்களுக்கு மத்தியில் குழப்பத்தை வேண்டுவோராக அவர்கள் இருக்கும் நிலையில், உங்களிடையே தங்களுக்கான உளவாளிகளையும் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அல்லாஹ் அநியாயக்காரர்களை நன்கறிவோன் ஆவான். (9:47)

ஸஹாபிகள் பற்றிய மேற்கூறப்பட்ட குர்ஆனிய வசனங்களுக்கு அமைவாக நபிகளாரின் ஹதீதுகளும் காணப்படவே செய்கின்றன. நபித்தோழர்களை புகழ்ந்துரைத்து ஹதீஸ்கள் காணப்படுவது போன்று, அவர்களில் சிலரை இகழ்ந்துரைத்தும் ஹதீஸ்கள் பதிவாகியுள்ளன.

"என்னுடைய சகாபாக்கள் வானில் மின்னும் நட்சத்திரங்களைப் போன்றோர். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் வெற்றிபெறுவீர்கள்" என நபியவர்கள் ஸஹாபாக்களைப் புகழ்ந்து கூறினார்கள். ஸஹாபாக்களில் சிலரை இகழ்ந்துரைத்த நபிவாக்குகளில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

عنأنس(رض)
عن النبي صلى الله عليه وسلم قال ليردن علي ناس من أصحابي الحوض حتى عرفتهم اختلجوا دوني فأقول أصحابي فيقول لا تدري ما أحدثوا بعدك
(மறுமையில்) என் தோழர்களில் சிலர் (அல்கவ்ஸர்) தடாகத்தினருகில் என்னிடம் வருவார்கள். நான் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளும்போது என்னைவிட்டும் அவர்கள் விலக்கி வைக்கப்படுவார்கள். அப்போது நான் '(இவர்கள்) என்

தோழர்களாயிற்றே! என்பேன். அதற்கு இறைவன், ‘உங்களுக்குப் பின்னால் இவர்கள் என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள்” என பதிலளிப்பான் என்று நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள்.

عن ابن المسيبأنه كان يحدث عن أصحاب النبي صلى الله عليه وسلم
أن النبي صلى الله عليه وسلم قال يرد على الحوض رجال من أصحابي فيحلئون عنه فأقول يا رب أصحابي فيقول إنك لا علم لك بما أحدثوا بعدك إنهم ارتدوا على أدبارهم القهقرى

(மறுமைநாளில்) என் தோழர்களில் சிலர் என்னிடம் ‘அல்கவ்ஸர்” தடாகத்திற்கு வருவார்கள். அப்போது அவர்கள் அத்தடாகத்தைவிட்டும் விரட்டப்படுவார்கள். உடனே நான் ‘இறைவா! (இவர்கள்) என் தோழர்கள்” என்பேன். அதற்கு இறைவன் ‘உங்களுக்குப் பின்னால் இவர்கள் செய்தது குறித்து உங்களுக்குத் தெரியாது. இவர்கள் திரும்பிப் பார்க்காமல் வந்த வழியே (தங்கள் பழைய மதத்திற்குத்) திரும்பிச் சென்றுவிட்டனர்” என பதிலளிப்பான் என்பதாக நபியர்கள் குறிப்பிட்டார்கள். இதனை சில நபித்தோழர்களிடமிருந்து ஸயீத் இப்னு முசய்யப்(ரஹ்) அறிவிக்கிறார்கள்.

أبو حازم عن سهل بن سعد قال
قال النبي صلى الله عليه وسلم إني فرطكم على الحوض من مر علي شرب ومن شرب لم يظمأ أبدا ليردن علي أقوام أعرفهم ويعرفوني ثم يحال بيني وبينهم قال أبو حازم فسمعني النعمان بن أبي عياش فقال هكذا سمعت من سهل فقلت نعم فقال أشهد على أبي سعيد الخدري لسمعته وهو يزيد فيها فأقول إنهم مني فيقال إنك لا تدري ما أحدثوا بعدك فأقول سحقا سحقا لمن غير بعدي وقال ابن عباس سحقا بعدا يقال سحيق بعيد سحقه وأسحقه أبعده

நான் உங்களுக்கு முன்பே (அல்கவ்ஸர்) தடாகத்திற்குச் சென்று (நீர் புகட்டக்) காத்திருப்பேன். யாருக்கு என்னிடம் வருவதற்கு முடிகிறதோ, அவர் (அத் தடாகத்தின் நீரை) அருந்துவார். (அதை) அருந்துவோருக்கு இனி ஒருபோதும் தாகமே ஏற்படாது. (இந்நிலையில்) என்னிடம் சிலர் வருவார்கள். அவர்களை நான் அறிந்துகொள்வேன். என்னை அவர்கள் அறிந்துகொள்வார்கள். பிறகு எனக்கும், அவர்களுக்கும் இடையே தடுப்பிடப்படும் என நாயகம் (ஸல்) கூறியதாக ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். (இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்) அபூ ஹாஸிம் ஸலமா இப்னு தீனார்(ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: (நான் இந்த ஹதீஸை அறிவித்தபோது) நான் கூறுவதை செவியுற்றுக் கொண்டிருந்த நுஃமான் இப்னு அபீ அய்யாஷ்(ரஹ்) அவர்கள் ‘இவ்வாறுதான் ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அவர்களிடமிருந்து நீங்கள் செவியுற்றீர்களா?” என்று வினவினார்.

நான் ‘ஆம்‘ என்றதற்கு, அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அவர்கள் இதைவிடவும் மேலதிகமாக அறிவிப்பதைக் கேட்டுள்ளேன். அதாவது ‘(இறைவா!) இவர்கள் என்னைச் சேர்ந்தவர்கள் என்று நான் கூறுவேன். அதற்கு உங்களுக்குப் பின்னால் இவர்கள் (புதிது புதிதாக) உருவாக்கியதை நீங்கள் அறியமாட்டீர்கள் என்று சொல்லப்படும். உடனே நான் எனக்குப் பின்னால் (தம் மார்க்கத்தை) மாற்றிவிட்டோரை இறைவன் தன் கருணையிலிருந்து அப்புறப்படுத்துவானாக!, அவர்களை இறைவன் தன்

கருணையிலிருந்து அப்புறப்படுத்துவானாக! என்று (இருமுறை) கூறுவேன், (என நபியவர்கள் குறிப்பிட்டார்கள்).
(இந்த ஹதீஸின் வாக்கியத்திலுள்ள) 'சுஹ்கன்' (அப்புறப்படுத்தல்) என்பதற்குரிய அர்த்தம் தூரப்படுத்தல், ஒதுக்கிவைத்தல் என்பதாக இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார்.

عن أبي هريرة أنه كان يحدث أن رسول الله صلى الله عليه وسلم قال يرد علي يوم القيامة رهط من أصحابي فيحلئون عن الحوض فأقول يا رب أصحابي فيقول إنك لا علم لك بما أحدثوا بعدك إنهم ارتدوا على أدبارهم القهقرى

மறுமை நாளில் என் தோழர்களில் ஒரு குழுவினர் என்னிடம் வருவார்கள். அப்போது அவர்கள் (அல்கவ்ஸர்) தடாகத்தைவிட்டும் ஒதுக்கப்படுவார்கள். உடனே நான் 'இறைவா! (இவர்கள்) என் தோழர்கள்" என்பேன். அதற்கு இறைவன் "உங்களுக்குப் பின்னால் இவர்கள் (புதிது புதிதாக) உருவாக்கியது குறித்து உங்களுக்குத் தெரியாது. இவர்கள் திரும்பிப் பார்க்காமல் வந்த வழியே (தங்கள் பழைய மதத்திற்குத்) திரும்பிச் சென்றுவிட்டனர்" என்று பதிலளிப்பான் என நாயகம் (ஸல்) அவர்கள் அருளியதாக அபூ ஹுரைரா அறிவிக்கிறார்.

عن أبي هريرة
عن النبي صلى الله عليه وسلم قال بينا أنا قائم إذا زمرة حتى إذا عرفتهم خرج رجل من بيني وبينهم فقال هلم فقلت أين قال إلى النار والله قلت وما شأنهم قال إنهم ارتدوا بعدك على أدبارهم القهقرى ثم إذا زمرة حتى إذا عرفتهم خرج رجل من بيني وبينهم فقال هلم قلت أين قال إلى النار والله قلت ما شأنهم قال إنهم ارتدوا بعدك على أدبارهم القهقرى فلا أراه يخلص منهم إلا مثل همل النعم

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
"நான் உறங்கிக்கொண்டிருந்தேன். அப்போது (கனவில்) நான் (அல்கவ்ஸர் தடாகத்தினருகில்) நின்றுகொண்டிருந்தபோது, ஒரு குழுவினரை நான் அடையாளம் கண்டுகொண்டேன். எனக்கும் அவர்களுக்குமிடையே ஒரு(வான)வர் தோன்றி (அந்தக் குழுவினரை நோக்கி), 'வாருங்கள்' என்று அழைத்தார். உடனே நான் அவரிடம் 'எங்கே (இவர்களை அழைக்கிறீர்கள்)" என்றேன். அவர் 'அல்லாஹ்வின்மீது ஆணையாக! நரகத்திற்கு" என்றார். அதற்கு நான் 'இவர்கள் என்ன செய்தார்கள்? "என்றேன். 'உங்களுக்குப் பின்னால் இவர்கள் திரும்பிப் பார்க்காமல் வந்த வழியே மதம் மாறிச்சென்றனர் என்றார். பிறகு மற்றொரு குழுவினரையும் நான் அடையாளம் கண்டுகொண்டேன்.

எனக்கும், அவர்களுக்குமிடையே ஒரு(வான)வர் தோன்றி, 'வாருங்கள்' என (அவர்களிடம்) கூறினார். நான் '(இவர்களை) எங்கே (அழைக்கிறீர்)? " என்றேன். அவர் 'அல்லாஹ்வின்மீது ஆணையாக! நரகத்திற்கு" என்றார். நான் 'இவர்கள் என்ன செய்தார்கள்? " என்று வினவியதற்கு அவர், 'இவர்கள் உங்களுக்குப் பின்னால் திரும்பிப்

பார்க்காமல் வந்த வழியே மதம் மாறிப் போய்விட்டார்கள்" என்று பதிலளித்தார். காணாமற்போன ஒட்டகத்தைப் போன்று அவர்களில் ஒரு சிலரைத் தவிர வேறெவரும் தப்பித்துக் கொள்வார்கள் என நான் கருதவில்லை என்று நபியவர்கள் அருளியதாக அபூஹுரைரா அறிவிக்கிறார்.

(ஸஹீஹுல் புகாரி– கிதாபுர் ரிகாக்)

## 2.2.ஸஹாபிகள் பற்றிய ஆய்விற்கான தேவை

இது தொடர்பாக இரு விடயங்களைக் கவனத்திற்கொள்ளல் அவசியமானது.
1.நபியவர்களின் ஸீராவையும், சுன்னாவையும் சரியாக விளங்கி, அவற்றைப் பின்பற்றி வாழ்வது ஒவ்வொரு முஸ்லிமுடைய தலையாயக் கடமையாகும். நபியவர்களின் சுன்னாவின்படி வாழ்வதானது அதனைச் சரியாகவும், தெளிவாகவும் விளங்கிக் கொள்வதில் தங்கியுள்ளது. நபியவர்களின் சுன்னாவை அறிவிப்போரும், அதனைக் கண்டோரும் ஸஹாபிகளாகத் திகழ்கின்றனர். எனவே நபியவர்களின் வழிமுறையை ஒரு ஸஹாபியிடமிருந்து ஏற்றுக் கொள்வதற்கு அந்த ஸஹாபி நம்பத் தகுந்தவரா? குர்ஆனில் புகழப்பட்டவரா? அல்லது இகழப்பட்டவரா? என ஆய்ந்தறிதல் அவசியமானது. இதனை ஷீஆக்கள் மட்டுமல்ல சுன்னிகள் கூட ஹதீதை அறிவிக்கும் ராவிகளை ஸஹாபிகள், ஸஹாபியல்லாதோர் என தரம் பிரித்து "ஜரஹ் வத் தஃதீல்" செய்துள்ளனர்.

இவ்விடயத்தில் இமாம் சுயூதி, இப்னு ஜவ்ஸி, தஹபி, அஸ்கலானி போன்ற சுன்னி அறிஞர்களும் பலநூற்களை யாத்திருத்தல் கவனிக்க வேண்டியதாகும். இந்நூற்களில் ஸஹாபிகள் உட்பட ஹதீதுகளை அறிவிக்கும் ராவிகளை நல்லோர், கெட்டோர், பொய்யர், ஹதீதுகளைப் புனைந்தோர், மோசடிசெய்தோர்... எனத் தரப்படுத்தி இகழ்ந்தும், புகழ்ந்தும் கூறப்பட்டுள்ளது. ஷீஆக்கள் ஸஹாபிகளை ஆராய்வதற்கும், சுன்னிகளின் இவ்வழிமுறைக்கும் எவ்வித வித்தியாசத்தையும் காணமுடியாது. எனவே ஷீஆக்கள் ஸஹாபிகள் பற்றி ஆராய்வதற்கு பிரதான காரணங்களில் ஒன்றாக, ஹதீத்துறையில் அடங்குகின்ற ஜரஹ்வத்தஃதீல் காணப்படுகிறது.

2.ஸஹாபிகளிடம் குறைகண்டு, அவர்களைத் தூற்றுவதற்கான எத்தேவையும் ஷீஆக்களுக்கு கிடையாது. எந்த ஸஹாபி சுவர்க்கவாதி? எவர் நரகவாதி? எனத் தீர்மானிப்பவன் இறைவன். அதேநேரம், எழுதப்பட்டுள்ள ஸஹாபிகளின் வரலாற்றில் அவர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் சபித்தது மட்டுமன்றி ஒருவரையொருவர் கொலைசெய்த சம்பவங்களும் காணப்படவே செய்கின்றன. கலீபா முஆவியாவின் ஆட்சியில், ஹஸரத் அலி அவர்களை மிம்பர்களில் தூசித்தும், சபித்தும் வந்தார்கள்.
ஹஸரத் அலியின் ஆட்சிக்காலத்தில் அன்னை ஆயிஷா மற்றும் ஹஸரத் அலி ஆகியோருக்கிடையில் நடந்த ஜமல் யுத்தத்திலும், ஹஸரத் அலி மற்றும் முஆவியா

ஆகியோருக்கிடையில் நிகழ்ந்த சிஃப்பீன் யுத்தத்திலும் பல்லாயிரக்கணக்கான ஸஹாபிகள் கொல்லப்பட்டனர்.

ஆயினும் ஸஹாபிகளின் கடந்த வரலாற்றை அலசி நீதி, நியாயம் கற்பிக்க முனைதல், பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் செயல் என சிலர் எச்சரிக்கின்றனர். ஆம், இது உண்மைதான். ஆயினும் இவ்விடயத்தில் ஒரு முக்கிய விடயத்தை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

அதாவது நபியவர்களின் மரணத்திற்குப்பின் அவர்களின் சுன்னாவை உள்ளடக்கிய இஸ்லாத்தை அதன் தூயவடிவில் பெற்றுக்கொள்வதற்கு இஸ்லாமிய உம்மா யாரை நாடுவது? என்ற வினா எழும்போது, நபியவர்களின் வழிமுறையை நேரிற்கண்டு, அவ்வழியில் இறுதி மூச்சுவரை இறையச்சத்தோடும் இஹ்லாசோடும் வாழ்ந்ததுடன் அறிவு, ஆன்மீகம் பேன்றவற்றில் தலைசிறந்து விளங்கிய முன்மாதிரியான ஸஹாபிகளை நாடவேண்டியது, ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமை என்பதை எல்லோரும் ஏற்றாக வேண்டும். இந்தவகையில் குர்ஆனும், ஹதீதும் குறிப்பிடுகின்ற நயவஞ்சகர்களையும், பாவிகளையும் ஸஹாபிகள் என்றபேரில் கண்மூடித்தனமாகப் பின்பற்ற முடியாது. நட்சத்திரமாய்த் திகழும் ஸஹாபிகளை மட்டும் கண்டறிவதற்கு ஸஹாபிகள் பற்றிய ஆய்வு தேவை என்பதையும், அதன்போது சில ஸஹாபிகளின் குறைகள் வெளிப்படுத்தப்படுதல் ஆய்வின் நோக்கமல்ல என்பதையும், நல்லதிலிருந்து கெட்டதைப் பிரித்தறிய குறைகளைச் சுட்டிக்காட்டுவதை தூற்றுதல் என யாரும் கருதுவதில்லை என்பதையும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

எனவே ஸஹாபிகள் விடயத்தில் ஷீஆக்கள் மேற்குறித்த கண்ணோட்டத்தையே கொண்டுள்ளனர். ஷீஆக்கள் ஸஹாபிகளைத் தூற்றுவதாகவும், ஏசுவதாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் அதிகமானவை இஸ்லாத்தின் எதிரிகளாலும், அவர்களின் கூலிகளாலும் இஸ்லாத்தின் தூயவடிவம் காக்கப்படாமலிருக்கவும், முஸ்லிம்களுக்குள் பிரிவினையைத் தோற்றுவிக்கவும் அரங்கேற்றப்படும் சதிகளாகும். ஷீஆக்கள் ஸஹாபிகளை ஏசுகின்றனர் எனும் எதிரிகளின் கூற்றானது, ஹதீஸ் மற்றும் வரலாற்றுத்துறை சார்ந்த ஆய்வுகளுக்கப்பால் ஷீஆக்களிடமுள்ள நடைமுறையல்ல என்பதைக் கவனத்திற்கொண்டவர் பொய்யென இலகுவாகவே புரிந்துகொள்வார்.

அண்மையில் அன்னை ஆயிஷா அவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டிய உரையொன்று இணையதளம் ஊடாக உலாவி, முஸ்லிம்களுக்கு மத்தியில் பல அசௌகரியங்களை ஏற்படுத்தியது. இந்த உரையை வழங்கியவர் தன்னை ஒரு ஷீஆ என அறிமுகப்படுத்தியிருந்தார். இது முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் இஸ்லாத்தின் எதிரிகளின் ஒரு சதி என கண்டித்த ஈரான் இஸ்லாமியக்குடியரசின் ஆன்மீகத்தலைவர் ஆயதுல்லாஹ் செய்யித் அலி காமெனயி அவர்கள் “உம்மஹாத்துல்

முஃமினீன்களை ஏசுவதும், தூற்றுவதும் ஹராமாகும்' என ஃபத்வா வழங்கி, அச்சதியை முறியடித்தார்கள்.

### 03.ஷீஆக்களிடம் மூவேளைத் தொழுகையா?

இஸ்லாமிய ஷரீஅத் சுபஹ், ளுஹர், அஸர், மஃரிப் மற்றும் இஷா, ஆகிய ஐந்து தொழுகைகளை முஸ்லிம்கள் மீது கடமையாக்கி, அவைகளை தினந்தோறும் தொழுது வருமாறு பணித்ததுடன் அவைகளுக்கென தனித்தனி நேரங்களை நிர்ணயித்துள்ளது. இவ் ஐந்து தொழுகைகளையும் அதற்குரிய சிறப்பான நேரங்களில் தொழுவது சிறந்தாகும். அதேநேரம் இத்தொழுகைகளில் ளுஹர், அஸர் ஆகியவற்றை ஒன்றாகவும், மஃரிப், இஷா ஆகியவற்றை ஒன்றாகவும் பிரயாணம், அடைமழை மற்றும் பயம் போன்ற காரணங்களுக்காக சேர்த்துத் தொழுவதற்கு இஸ்லாத்தில் அனுமதியிருப்பதைப் போன்று, எவ்விதக் காரணங்களும் இல்லாமற்கூட அவற்றைச் சேர்த்துத் தொழுவதற்கு ஷரீஅத் அனுமதித்துள்ளது என்பது ஷீஆ நம்பிக்கையாகும். இதற்கு ஆதாரமாகப் பல்வேறு ஹதீஸ்களை ஸஹீஹான கிரந்தங்களில் காணமுடிகின்றன. அவைகளில் சிலவற்றை நோக்குவோம்

صَلّى رَسُول الله الظّهر و العصر جميعاً بالمدينة مِن غير خوف و لا سفر، فقال أبوالزبير فسألت سعيداً لِمَ فعل ذلك، فقال: سألت ابن عباس كما سألتنى، فقال: أراد أن لا يُحرِجَ أحداً مِن أُمّته.

(صحيح المسلم بشرح النووي).

"நபி (ஸல்) அவர்கள் ளுஹர் மற்றும் அஸரையும், மஃரிப் மற்றும் இஷாவையும் பயம், பிரயாணம் அல்லாத வேளைகளிலும் சேர்த்து தொழுதார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார். இந்த ஹதீஸின் தொடரில் ஏன் நாயகமவர்கள் இவ்வாறு செய்தார்கள் என அப்தில்லா பின் அப்பாஸிடம் வினவப்பட்டபோது, தனது உம்மத்தினருக்கு தொழுகையை இலகுவாக்குவதற்காவே எனப் பதிலளித்தார்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

وعن ابن عباس أيضاً ، قال: جمع رسول الله (ص) بين الظهر والعصر والمغرب والعشاء بالمدينة في غير خوف ولا مطر( صحيح المسلم كتاب الصلاة)

நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வைத்து பயம், அடைமழை போன்ற காரணங்கள் எதுவுமில்லாத நேரங்களிலும் ளுஹர் மற்றும் அஸரையும், மஃரிப் மற்றும் இஷாவையும் சேர்த்துத் தொழுதார்கள் என அப்தில்லாஹ் பின் அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார்.

(ஸஹீஹுல் முஸ்லிம் – கிதாபுஸ்ஸலாத்)

ஐவேளைத் தொழுகைகளை மூன்று நேரத்தில் பயம், அடைமழை, பிரயாணம் போன்ற காரணங்கள் எதுவுமில்லாதபோதும் கூட அவற்றைச் சேர்த்து தொழலாம் என்பதற்கு நபியவர்களின் மேலே உள்ள அருள்வாக்குகள் சான்றுகளாயுள்ளன.

இஸ்லாமிய ஷரீஅத், முஸ்லிம்கள் மீது விதித்துள்ள கடமைகளில் தொழுகை மிக முக்கிய இடத்தைை வகிக்கிறது. தொழுகையை கைவிட்டவனுக்கு இஸ்லாத்தில்

எப்பங்குமில்லை எனுமளவுக்கு அதன் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டுள்ளது. தொழுகையைத் தவறவிடுவதற்கு எக்காரணமும் சொல்லலாகாது.

தொழுகையை நிறைவேற்றும் விடயத்தில் முடிந்தால் நின்ற நிலையிலும், அதற்கு முடியாவிட்டால் உட்கார்ந்த நிலையிலும், அதற்கும் முடியாவிட்டால் படுத்த நிலையிலும், அதற்குக்கூட முடியாவிட்டால் இருக்கும்நிலையில் கண்களால் தொழுதல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கும் முடியாமற்போனால் மனதால் தொழுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தளவிற்கு வலியுறுத்திக் கூறப்பட்ட பர்ழான தொழுகைகளை தொழில், பிள்ளைவளர்ப்பு, இயலாமை... போன்ற விடயங்களைக் காரணங்காட்டி கைவிடுவதற்கு இஸ்லாம் அனுமதிக்கவில்லை. தொழுகையை எந்நிலையிலும் கைவிடக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு மேற்குறித்த தொழுகைகளை சேர்த்துத் தொழுமாறு நபி (ஸல்) அவர்கள், அனுமதி வழங்கி, தொழுவதை இலகுபடுத்தியுள்ளார்கள். தொழுகைகள் தமது சமூகத்திற்குச் சுமையாக மாறிவிடக்கூடாது என்பதே நபியவர்கள் இதில் கொண்டிருந்த நோக்கம்.

இன்று தொழுவதைப் பாரமாகக் கருதுவோரும் அதனை ஒருபோதும் நிறைவேற்றாதோரும் அல்லது அதனை விட்டுவிட்டுத் தொழுவோரும், ஜும்ஆத்தொழுகையை மாத்திரம் தொழுவோருமாக எமது சமூகத்தவர்களில் பலர் காணப்படுகின்றனர். இன்னும் சிலர் வேண்டுமென்றே தம் தொழுகைகளை கழாவாக்கித் தொழுகின்றனர். தூக்கம், மறதி, மயக்கம் போன்ற மனித சக்திக்கு அப்பாற்பட்ட நிலைகளில் தவறிப்போகும் தொழுகைகளை மீட்டி(கழாவாக)த் தொழுவது அவசிமென்பதற்காக கழாத்தொழுகை என்ற ஒருவகைத்தொழுகை இருப்பதாகக் கருதி தொழுகையை வேண்டுமென்றே தவறவிட இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை. சமூகத்தில் இறையச்சம் வியாபிப்பதற்கும், தீமையிலிருந்து விடுபடுவதற்கும் தொழுகை கலாச்சாரம் மிக வேரூன்றிக் காணப்படவேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கிறது. இதற்காகவே, மக்கள் தொழுகைகளை கைவிடாமல் நிறைவேற்றி வாழுவதற்கு மேற்கூறியவாறு நபியவர்கள் வழியமைத்தார்கள். நடைமுறைப்படுத்துவதற்கு மிக இலகுவானதாக தொழுகை அமைந்திருக்கும்போதே எமது சமூகத்தில் சிலர் தொழாமலிருப்பதை விரும்புகின்றனர். ஆனால் ஐவேளைத் தொழுகைகளை நபியவர்களின் அனுமதிக்கமைய மூவேளைகளிலாவது தொழாமல், அது ஷீஆக்களின் நடைமுறை எனக்குறைகாண முயலுகின்றனர்

## 04.ஷீஆக்கள் மண்ணில் சுஜூது செய்வதேன்?

முஸ்லிம்கள் ஹஜருல் அஸ்வத் கல்லை வணங்குவதாக இன்று முஸ்லிமல்லாதோர் குற்றம் சுமத்திவருகின்றனர். இதேபோன்றுதான், முஸ்லிம்களில் சிலர், ஷீஆக்கள் கல்லை வணங்குவதாக அவர்கள் மீது பழிசுமத்துகின்றனர். இது பற்றி ஷீஆக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை இங்கு நோக்குவோம். “இயற்கைப் பொருட்களான கல், மண் மற்றும் புல்லுப்பாய் போன்றவற்றிலேயே சுஜூது இடம்பெற வேண்டும். செயற்கைப்

பொருட்களாலான விரிப்பு, இறப்பர்காபட், இறப்பர் பாய் போன்றவற்றில் சுஜூது செய்யலாகாது என்பது ஷீஆ பிக்ஹ் சட்டமாகும்.
ஷீஆ – சுன்னி ஹதீஸ் கிரந்தங்களில் நாயகம் (ஸல்) அவர்கள் மண்மீது சுஜூது செய்து, தமது உம்மத்தினரையும் மண்மீதே சுஜூது செய்யுமாறுப் பணித்த ஹதீஸ்களை இதற்கு ஆதாரமாகக் கொள்கின்றனர்.
ஸஹீஹுல் புகாரியில் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறிய ஹதீதொன்று இவ்வாறு பதிவாகியுள்ளது.

جُعِلَتْ لِيَ الاَرْضُ مَسْجِدًا وَطَهُوْرًا

"சுஜூது செய்யுந்தளமாகவும், தூய்மையானதாகவும் பூமி எனக்கு ஆக்கப்பட்டுள்ளது". இந்த ஹதீதில் தயம்மும் செய்வதற்கும், சுஜூது செய்வதற்கும் தஹூரான (சுத்தப்படுத்துவதற்குரிய) மண்ணையே உபயோகிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.
ஒருமுறை, ஹஸரத் பிலால் (ரழி) அவர்கள் சுஜூது செய்யும் போது, பூமியின் உஷ்ணம் தமது நெற்றியில் படாமலிருக்க தலைப்பாகையின் நுணியை இழுத்து, அதன் மீது தமது நெற்றியை வைத்து சுஜூது செய்தார்கள். இதனைக் கண்ணுற்ற நாயகம் (ஸல்) அவர்கள் அத்துணியை தமது கையினால் நீக்கிவிட்டு, 'பிலால் அவர்களே... மண்ணிலே நெற்றியை வையுங்கள்" எனப் பணித்தார்கள். (கன்சுல் உம்மால்)
சுஹைப் மற்றும் ரிபாஹ் (ரழி) போன்றோரிடமும் தமது நெற்றியை பூமியில் வைத்து சுஜூது செய்யுமாறு நாயகம் (ஸல்) அவர்கள் வேண்டியுள்ளார்கள். (கன்சுல் உம்மால்)
அபூஉபைதா அறிவிக்கின்றார்.

أن ابن مسعود لايسجد الا علي الارض

"நிச்சயமாக அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி) அவர்கள் மண்ணிலன்றி வேறெதிலும் சுஜூது செய்ய வில்லை" (முஸ்னத் இப்னு அபீ ஷைபா, பா: 01, பக்: 397)
அலி பின் அப்தில்லாஹ் பின் அப்பாஸ் அவர்கள் றஸீன் என்பவருக்கு எழுதிய மடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

ابعث إلي بلوح من احجار المروة عليه اسجد

"நான் சுஜூது செய்வதற்கு மர்வா (மலைக்) கற்களிலான பலகையை எனக்கு அனுப்பிவையும்" (அஸ்ரகீ, அக்பாருல் மக்கா, 02, 151)
இரண்டாம் உமர் என அழைக்கப்படும் ஹஸரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் மண்ணிலே சுஜூது செய்து வந்தார்கள். ஸஹீஹ் புகாரியின் விளக்கவுரை நூலான ஃபத்குல் பாரியில் இவ்வாறு காணப்படுகின்றது:

كان عمرابن عبد العزيز لايكتفي بالخمرة بل يضع عليها التراب ويسجد عليه

உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் சுஜூது செய்வதற்குப் பாயை மாத்திரம் போதுமாக்கிக்கிக் கொள்ளாமல், அதன்மீது மண்ணையும் வைத்து அதிலே சுஜூது செய்து வந்தார்கள். (பத்குல் பாரீ 01:410)

மண்மீது நெற்றியை வைத்து அல்லாஹ்வுக்காக சுஜூது செய்தல், மிகவும் உயர்வான அம்சமாக உள்ளது. அனைத்து படைப்பினங்களின் உரிமையாளன் அல்லாஹ் மட்டுமே

என்ற உணர்வுடன் தனது எஜமானனுக்கு முன்னிலையில், தன்னை முழுவதும் வெறுமையாகக் கருதும் ஓர் அடிமையின் பணிவை, அடக்கத்தை முழுமையாக இது வெளிப்படுத்துகிறது.
மண்ணில் சுஜூது செய்வதன் மூலம், படைத்தலில் தனது மூலப்பொருள் மண்ணே, அதனிடமே தான் மீளவேண்டும் எனும் உணர்வு எழுகிறது. இதனைப்பற்றி அல்லாஹு தஆலா பின்வருமாறு கூறுகிறான்:

'(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம். பின்னர் அதன்பாலே நாம் உங்களை மீளச்செய்வோம்" (20:55)

பணிவின் அதியுயர் நிலையைக் கொண்டதாக சுஜூது அமைகிறது. உடலுறுப்புகளில் அதி உன்னத உறுப்பான நெற்றியை, படைப்புகளில் அற்பப் பொருளான மண்மீது வைத்து மகத்துவமும், கன்னியமும் மிக்க அல்லாஹ்வுக்கு சுஜூது செய்யும் போது, சுஜூது தனது யதார்த்தத்தை அடைந்து கொள்கிறது. அலங்கார விரிப்புகளிலும், பன்னிற செயற்கைப் பொருள்களிலும் சுஜூது செய்வதன் மூலம், சுஜூதின் யதார்த்தத்தை உணர முடியாதுள்ளதுடன், மனித உள்ளத்திலுள்ள நான் என்ற கர்வநிலை ஒருபோதும் நீங்காது.
ஹிஷாம் பின் ஹகம் என்பவர், அஹ்லுல்பைத்தினரில் ஆறாவது இமாமாகிய இமாம் ஸாதிக் (அலை) அவர்களிடம் "எதன்மீது சுஜூது செய்ய வேண்டும்? எதன்மீது சுஜூது செய்யக்கூடாது?" என வினவியதற்கு இமாமவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

السجود لايجوز إلا علي الأرض أوماأنبتت الأرض إلاما أكل أولبس

"மண்மீதன்றி வேறெதிலும் சுஜூது செய்தல் கூடாது. அல்லது பூமியில் முளைத்து உண்ணவும், உடுக்கவும் பயன்படுத்தப்படாதப் பொருட்களின்மீது அது அமையவேண்டும்".
இதனைச் செவியுற்ற ஹிஷாம் நபிகள் நாயகத்தின் குமாரரே இதன் தத்துவம் யாதென வினவியதற்கு,
لأن السجود هوالخضوع لله عزوجل فلاينبغي أن يكون علي مايؤكل ويلبس لأن ابناء الدنيا عبيد مايأكلون ويلبسون والساجد في سجوده في عبادة الله فلا ينبغي أن يضع جبهته في سجوده علي معبود ابناء الدنيا الدين إغتروا بغرورها والسجود علي الأرض أفضل لأنه أبلغ للتواضع والخضوع لله عزوجل.

நிச்சயமாக சுஜூது உயர்வான அல்லாஹ்வுக்குச் செய்யும் பணிவு. இதனை உடுக்கும், உண்ணும் பொருட்களில் செய்வது பொருத்தமன்று. ஏனெனில் மனிதர்கள், தாம் உண்பதற்கும், உடுப்பதற்கும் அடிமைகளாக உள்ளனர். சுஜூது செய்பவர் தனது சுஜூதில் அல்லாஹ்வை வணங்குகிறார். இதனால் சுஜூதில் தனது நெற்றியை, மனிதர்களின் கடவுளின் மீது (அதாவது மனிதர்கள் தங்களை அடிமையாக்கிக் கொண்டதன்மீது) நெற்றிவைத்து சுஜூது செய்வது உகந்ததன்று. (இக் கடவுளானது) அவர்களை மிகக்கடுமையாக ஏமாற்றிவிட்டது. மண்ணில் சுஜூது செய்வது மிகவும் சிறப்புமிக்கது.

ஏனெனில் அது உயர்வான இறைவனுக்குச் செய்யும் பணிவாகவும், தாழ்வாகவும் அமைகிறது. (இலலுஷ் ஷராயிஃ, 2, 341)

மேலே குறிப்பிடப்பட்ட அறிவிப்புகளுக்கமைய சுஜூது மண்ணிலே இடம்பெறவேண்டும். சுஜூது செய்யப்படும் மண் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதால், ஷீஆக்கள் சுத்தமான மண்ணென உறுதி செய்து கொள்வதற்காக களி மண்ணால் செய்யப்பட்ட காய்ந்த மண் கட்டிகளை தயார்செய்து, அதன்மீது சுஜூது செய்கின்றனர். சுஜூது செய்யப்படும் மண்ணின் புனிதம் கருதி ஷீஆக்கள் சிலவேளைகளில் இமாம் ஹுசைன் (அலை) அவர்கள் ஸஹீதாக்கப்பட்ட புனிதபூமியான கர்பலா மண்ணைத் தேர்ந்தெடுப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஷீஆக்கள் மண்ணால் செய்யப்பட்ட கற்களை சுஜூது செய்வதற்காக எடுத்துக் கொள்வதற்கு ஸஹாபிகளின் நடைமுறையிலும் சான்றுகளுள்ளன. ஸஹாபிகளில் சிலர் பிரயாண வேளைகளில் சிறுசிறு கற்களை தம்மோடு வைத்துக்கொண்டனர். தொழுகையின் போது அவற்றின்மீது தம் நெற்றியை வைத்து, சுஜூது செய்தார்கள் என்பதாக அறிவிப்புகளில் காணப்படுகின்றது.

ஷீஆக்கள் மண்ணில் சுஜூது செய்வதை சரியாகப் புரிந்து கொள்ளாதோரும், அதனை என்றைக்குமே விஷமக்கண்கொண்டு பார்ப்போரும் இதன் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். அன்றி, அவர்கள் கல்லை வணங்குகிறார்கள் அல்லது கல்லுக்கு சுஜூது செய்கிறார்கள் என்றோ தப்பெண்ணம் கொள்வது தவறு. மண்ணாலான கல்லின்மீது சுஜூது செய்வதை கல்லை வணங்குதாகக் கருதினால், விரிப்பில் சுஜூது செய்வதை விரிப்பை வணங்குவதாகவே கருத வேண்டுமல்லவா?. அப்படிக் கருதுவது எந்தளவு அறிவுபூர்வமானது. நபிமொழிக்கு ஒப்பாகவே ஷீஆக்கள் மண்மீது நெற்றியை வைத்து அல்லாஹ்வுக்கு சுஜூது செய்து சிரம்சாய்க்கின்றனர்.

## 05. ஷீஆக்கள் தொழுகையில் கைவிட்டுத் தொழுவதேன்?

தொழுகையில் கைகளை எவ்வாறு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் இஸ்லாமிய பிரிவுகளிடம் பல்வேறுவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. சிலர் நெஞ்சுக்கும் தொப்புளுக்கும் இடையிலும், இன்னும் சிலர் நெஞ்சிலும், இன்னும் சிலர் தொப்புளுக்கு கீழும் கட்டி இன்னும் சிலர் தொங்கவிட்டுமாக தொழுகின்றனர். ஷீஆக்கள் தொழுகையில் கைகளை கட்டாமல் தொங்கவிட்டு தொழுவார்கள். இதற்குக் கூறப்படும் நியாயத்தை இங்கு பார்க்கலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் கைகட்டியதில்லை என்பது அஹ்லுல்பைத் வழியாக கிடைக்கப்பெற்றுள்ள ஹதீஸ்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நபிகள்(ஸல்) தொழுகையில் கைகட்டியதாக அறிவிக்கப்படும் அறிவிப்புகள் எதையும் உறுதியாக நம்பமுடியாத நிலை காணப்படுவதாலும், மாலிக்

மத்ஹபினா் போன்று ஷீஆக்களும் தமது கைகையத் தொங்கவிட்டே தொழுகின்றனா். இவ்விடயத்தை பறைசாற்றும் ஷீஆ, சுன்னி ஆதாரங்களை பின்வருமாறு நோக்கலாம்.

சுன்னத் வல் ஜமாஅத்தினரான ஷாபிஈ, ஹனபீ, ஹம்பலீ மற்றும் மாலிகீ முதலான மத்ஹபுப் பிரிவினரில் முதல் மூன்று பிரினர் மட்டுமே தொழுகையில் கைகட்டுவதை சுன்னத்தாகக் கருதுகின்றனா். எனினும் மாலிகீ மத்ஹபினா் இதற்கு மாற்றமான கருத்தைக் கொண்டுள்ளனா். கைகட்டுவது சுன்னத்து என்பதற்கு, ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஹதீதுகளின் (சனத்) அறிவிப்பாளா் வரிசைப்படி, அவை (ழயீஃப்) பலயீனமானவையாக இருப்பதுடன், கைகட்டுவதை அவை மிகத் தெளிவாக உணா்த்தவுமில்லை.

அஹ்லுல்பைத்தினரின் ஹதீதுகளிலும் கைகட்டுவதற்கான எந்த ஆதாரமும் காணப்படாத அதேவேளை, கைகட்டுதலை பித்அத்தாகப் பாா்க்கும் அறிவிப்புக்களே காணப்படுகின்றன. ஆகவே தக்பீரில் கைகட்டுதல் சுன்னத்தா? பித்அத்தா? என சந்தேகமெழுவதாலும், கைகட்டுதலுக்கான ஆதாரங்கள் பலயீனமுள்ளதாக இருப்பதாலும் கைகட்டாமல் விட்டுத் தொழுவதே சிறந்ததும், அஹ்லுல்பைத்தினரின் வழிகாட்டலுமாகும். வலது கையை இடது கையின்மீது வைத்து நெஞ்சின் மீது கைகட்டிக் கொள்வது இறைவனுக்கு வெளிக்காட்டும் ஒரு பணிவு நிலை. இதை ஒரு முஸ்தஹப்பான செயலாக சுன்னி மாா்க்க சட்டவியலாளா்கள் சிலா் கருதுகின்றனா்.

ஹனஃபிகளின் கருத்துப்படி: “கைகட்டுதல் முஸ்தஹப்பாகும். அது (வாஜிப்) கடமையல்ல. தொழுகையில் ஆண்கள் தமது வலது கையை இடது கைமேல் வைத்து தொப்புளுக்கு கீழும், பெண்கள் தமது வலது கையை இடது கைமேல் வைத்து நெஞ்சுக்கு கீழும் தக்பீா் கட்டுவது இறைவனுக்கு செய்யும் பணிவின் ஒரு அடையாளமாகும்”.

ஷாஃபிஈ மத்ஹபின்படி: “தொழுகையில் ஆண்களும், பெண்களும் தமது வலது கையை இடது கைமீது வைத்து நெஞ்சுக்குக் கீழும், தொப்புளுக்கு மேலுமாக வைத்து சற்று இடப்பக்கத்திற்கு சாயலாக தக்பீருடைய நிலையில் கைகட்டிக் கொள்வது முஸ்தஹப்பாகும்”.

ஹம்பலிகள் கூறுகிறாா்கள்: “தக்பீா் கட்டுவது சுன்னத்தாகும். தொழுகையில் ஆண்களும், பெண்களும் தமது வலது கையை இடது கைமீது வைத்து தொப்புளுக்குக்கீழ் கைகட்டிக் கொள்ளல் வேண்டும்”.

எனினும் மாலிக் மத்ஹபினா் தக்பீருடைய நிலையில் கைகட்டும் விடயத்தில் ஏனைய மத்ஹபுகளுக்கு மாற்றமான கருத்தைக் கொண்டுள்ளனா். “வாஜிபான தொழுகைகளில் கைகட்டாமல் தொங்கவிட்டுத் தொழுவதே முஸ்தஹப்பாகும்”. மாலிக் மத்ஹபினருக்கு

முன்பும் இக்கருத்திற்கு அமைவாகவே அப்துல்லாஹ் பின் சுபைர், ஸயீத் பின் முசய்யப், ஸஃத் பின் ஜுபைர், அதாஃ இப்னு ஜுரைஜ், நக்யீ, ஹஸனுல் பசரீ, இப்னு சீரீன் போன்ற தாபியீன்களும் பத்வா வழங்கியுள்ளனர்.

லைஸ் பின் ஸஃத் என்பவரும் சற்று வித்தியாசத்துடன் இக்கருத்தைக் கொண்டுள்ளார். அதாவது: "தொழுகைகளில் கைகட்டாமல் தொங்க விட்டுத் தொழுவதே முஸ்தஹப்பாகும்". ஆயினும் தொழுகையில் கியாம் எனும் நிற்றல் நிலை நீண்டதாக அமைந்து, தொழுகையாளி சிரமத்திற்குள்ளானால் அந்நிலையில் கைகட்டுதல் கூடும். இமாம் அவ்ஸாயீ அவர்களின் அபிப்பிராயப்படி தொழுகையாளி கைகட்டித் தொழுவதற்கும், விட்டுத் தொழுவதற்கும் இடையில் நிர்ணயம் பெறுகிறார். (அல்பிக்ஹ் அலா மதாஹிபில் கம்சா பக்: 110)

மாலிக் மத்ஹப் முஃப்தி முஹம்மத் ஆபித் கூறுகிறார் "தொழுகையில் கையைத் தொங்க விட்டுத் தொழுவதும் அல்லது கட்டித் தொழுவதும் இரண்டுமே நபியவர்களின் சுன்னத்தாகும். ஒருவரின் (கியாம்) நிலை நீண்டு விட்டால் தொங்க விடப்பட்ட ஒரு கையை மறுகையினால் பிடித்துக் கொள்ளமுடியும். கையைத் தொங்க விட்டுத் தொழுவது அஸ்ல் (அடிப்படை விடயம்) கைகட்டித் தொழுவது ஃப்ர்உ (துணைவிடயம்) ஆகும்."
(கலாநிதி அப்துல்ஹமீத் முபாறக், ரிசாலதுன் முக்தசிரதுன் பிஸ்ஸித்ல், பக்: 05)

ஷீஆ ஜஃபரி மத்ஹபின்படி, தொழுகையில் கைகட்டுவது ஹராமாகும். கைகட்டித் தொழுதால் தொழுகை பாத்திலாகி விடும்.
சுன்னத் வல் ஜமாஅத்சார் ஹதீஸ் கிரந்தங்களில் தொழுகையில் கைகட்டுவதை சுன்னத்தென்றோ அல்லது (ஜாயிஸ்) ஆகுமென்றோ உறுதிப்படச் சொல்லக்கூடிய எந்த ஆதாரங்களுமில்லை. மாறாக கைகட்டாமல் விட்டுத் தொழுவதற்கான ஆதாரங்களே தெளிவாகக் காணப்படுகின்றன. நபியவர்களின் தொழுகை முறைமை பற்றி விபரிக்கும் ஷீஆ, சுன்னா ஹதீதுகளில் கைகட்டுவது பற்றி எதுவும் கூறப்படவில்லை. அத்துடன் கைகட்டுவது ஒரு சுன்னத்தான காரியமாக இருந்திருப்பின் நபியவர்களின் வாழ்நாளில் அதனை அவர்கள் கடைப்பிடிக்காமல் விட்டிருக்க வாய்ப்புமில்லை.

இங்கு நபியவர்களின் தொழுகை பற்றிய ஷீஆ தரப்பு ஹதீது ஒன்றையும், சுன்னா தரப்பு ஹதீது ஒன்றையும் ஆராய்வோம். இரு சாராரிடமும் ஸஹீஹாக நோக்கப்படும் இவ்விரு ஹதீதுகளிலும் கைகட்டுவது தொடர்பாக எவ்விடயமும் கூறப்படவில்லை. தக்பீருடைய நிலையில் கைகட்டுதல் நபியவர்களின் வபாஅத்திற்குப் பின்னர் தோன்றிய ஒரு பித்அத்தான செயல் போன்றே தோன்றுகின்றது. இவ்விரு ஹதீதுகளும் நபியவர்கள் கைகட்டாமல் தொழுதார்கள் என்பதையே கூறுகின்றன.

சுன்னி கிரந்தத்தில் பதிவாகியுள்ள ஹதீஸ்:

اخبرنا ابوعبدالله الحافظ فقال ابو حميد الساعدى: انا اعلمكمبصلاة رسول الله(ص) قالوا: لم، ما كنت اكثرنا له تبعا و لا اقد مناله صحبته؟! قال: بلى، قالوا: فاعرض علينا، فقال:
كان‌رسول‌الله(ص) اذا قام الى الصلاة رفع يده حتى يحاذى بهمامنكبيه، ثم يكبر حتى يقر كل عضومنه فى موضعه معتدلا، ثميقرا، ثم يكبر و يرفع يديه حتى يحاذى بهما منكبيه، ثم يركع ويضع راحتيه على ركبتيه، ثم يعتدل و لاينصب راسه ولايقنع،ثم يرفع راسه فيقول: سمع الله لمن حمده، ثم يرفع يديه‌حتى يحاذى بهما منكبيه حتى يعود كل عظم منه الى موضعه معتدلا، ثم يقول: الله اكبر، ثم يهوى الى الارض فيجافى يديه‌عن جنبيه، ثم يرفع راسه فيثنى رجله اليسرى فيقعد عليها ويفتح اصابع رجليه اذا سجد، ثم يعود، ثم يرفع، فيقول: الله اكبر، ثم يثنى برجله فيقعد عليها معتدلا حتى يرجع او يقر كل‌عظم موضعه معتدلا، ثم يصنع فى الركعة الاخرى مثل ذلك،ثم اذا قام من الركعتين كبر و رفع يديه حتى يحاذى بهما منكبيه‌كما فعل او كبر عند افتتاح صلاته، ثم يصنع مثل ذلك فى بقيةصلاته حتى اذا كان فى السجدة التى فيها التسليم اخر رجله‌اليسرى و قعد متوركا على شقه الايسر. فقالوا جميعا: صدق‌هكذا كان يصلى رسول الله(ص)

சுனனுல் பைஹகியில் காணப்படும் இந்த ஹதீதை பல சுன்னி அறிஞர்கள் பதிவு செய்துள்ளனர்.

அபூஹமீத் ஸாயிதீ அவர்கள் கூறியதாக ஹாபிஸ் அபூஅப்தில்லாஹ் அறிவிக்கிறார்:
“நபியவர்களின் தொழுகை பற்றி உங்களைவிடவும் நான், நங்கு அறிபவனாக உள்ளேன் என்றார் (அபூஹாமித் ஸாயிதீ). எம்மை விடக் குறைந்த காலங்கலல்வா நீர் நபியுடன் இருந்துள்ளீர்!. அது எப்படியென அவரது தோழர்கள் அவரிடம் வினவினர். அதற்கவர் ஆம் என்றதும், அவரிடம் நபிகளாரின் தொழுகைபற்றிக் கூறுமாறு வேண்டினர்.
அதற்கு அவர் கூறினார்:

“இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தொழுகைக்காக நின்றால் தனது இரு கைகளையும் காதின் கீழ்ப்பகுதி வரையும் உயர்த்தி தக்பீர் சொல்வார்கள். அனைத்து உறுப்புக்களும் தத்தமது இடங்களில் அமைதியான போது (எதுவும் அசையாதநிலையில்) கிராஅத்தை ஓதுவார்கள். பின்னர் தக்பீர் கூறி தனது இரு கைகளையும் காதின் கீழ்ப்பகுதி வரை உயர்த்துவார்கள். அதன்பின் ருகூவுக்குச் சென்று இரு உள்ளங்கைகளையும் இரு முழங்கால்கள் மீதும் வைத்து அமைதியாவார்கள். (அந்நிலையில்) தலையை உயர்த்தவோ, குனிந்து தாழ்த்தவோ மாட்டார்கள். பின்னர் உயர்ந்து “சமியல்லாஹு லிமன் ஹமீதஹ்” எனச் சொல்வார்கள். அப்போது அவர்கள் தனது இரு கைகளையும் காதின் கீழ்ப்பகுதி வரையும் உயர்த்தி விட்டு முழு உறுப்புக்களும் அமைதியானதும் “அல்லாஹு அக்பர்” எனக் கூறுவார்கள். பின்னர் பூமியை நோக்கி பணிந்து சென்று, (சுஜூது செய்வார்கள் அதில்) தனது இரு கைகளையும் (பூமியின்) இரு புறங்களில் வைத்துக் கொள்வார்கள். பின்பு தனது தலையை பூமியிலிருந்து உயர்த்தி தனது இடது காலை மடித்து அதில் அமர்ந்து கொள்வார்கள். சுஜூது செய்யும்போது, தனது காலின் விரல்களை விரித்து வைத்துக் கொள்வார்கள்.

மறுபடியும் சுஜூதுக்கு மீண்டபின், எழுந்து "அல்லாஹு அக்பர்" எனக் கூறுவார்கள். பின்னர் காலை மடித்து அதில் அமர்ந்து கொள்வார்கள். உறுப்புக்கள் அனைத்தும் தத்தமது இடங்களில் (அசையாது) அமைதியாகிவிடும். இதே போன்று மற்றைய ரக்அத்திலும் செய்வார்கள். இரண்டாவது ரக்அத்தையும் முடித்தபின், எழுந்து தக்பீர் சொல்லி இரு கைகளையும் காதின் கீழ்ப்பகுதி வரையும் உயர்த்தி விடுவார்கள். தொழுகையின் ஆரம்பத்தில் செய்தவை போன்று, மேற்கண்டவாறு (கடைசி ரகஅத்தின்) இறுதி ஸஜ்தா வரைக்கும் தொழுகையின் எஞ்சிய பகுதிகளை செய்து முடிப்பார்கள். பின்னர் இறுதி ஸஜ்தாவின் முடிவில் தனது மேனியின் இடப்பக்கத்தால் உட்கார்ந்து கொள்வார்கள்."

(அபூஹமீத் ஸாயீதீ அவர்களின் இவ்விளக்கத்தை செவியுற்றிருந்தவர்கள்) ஆம் நபியவர்கள் இவ்வாறுதான் தொழுதார்கள் என அனைவரும் உறுதிப்படுத்திக் கூறினார்கள். ஆதாரங்கள்:

சுனனுல் பைஹகீ, பா:02, பக்:72,73,101,102
சுனனு அபூதாவுத், பா:01, பக்:194 (பாபு இஃப்திதாகுஸ்ஸலாத் ஹதீத் எண்கள்:730,736)
சுனனுத் திர்மிதி, பா:02, பக்:98 (பாபு ஸிபதிஸ்ஸலாத்)
முஸ்னத் அஹ்மத், பா:05, பக்:424.

மேற்குறித்த ஹதீஸில் நபியவர்கள் கைகட்டாமல் தொழுதார்கள் எனும் கூற்றை உறுதிப்படுத்தும் அம்சங்கள் பின்வருமாறு:

1.அபூஹமீத் ஸாயிதீ அவர்கள் நபிகளாரின் தொழுகையைப் பற்றிக் கூறியபோது, முக்கிய சஹாபிகள் அதனைச் சரிகண்டு உறுதிப்படுத்தியுள்ளமை, இந்த ஹதீஸ் பிற ஆதாரங்களைவிடவும் மிக நம்பகத்தன்மையுடையது என்பதைப் புலப்படுத்துகிறது. இந்த ஹதீதில் அபூஹமீத் ஸாயிதீ அவர்கள் தொழுகையின் வாஜிப், முஸ்தஹபுகளை குறிப்பிடும்போது, அதில் கைகட்டுதல் எனும் விடயத்தை அறவே குறிப்பிடவில்லை. அவரின் விளக்கத்தை செவிமடுத்தோரும் கூட அப்படியொரு விடயத்தை சுட்டிக்காட்டவுமில்லை, ஆட்சேபிக்கவுமில்லை. ஆரம்பத்தில் அபூஹமீத் ஸாயிதீ அவர்கள் தம்மை, நபிகளாரின் தொழுகையை நங்கு அறிந்தவர் எனக் கூறியதும், அதனை மறுத்த ஸஹாபிகள், அவரின் விளக்கத்தைச் செவியுற்றதும் "அபூஹமீத் ஸாயிதீ அவர்கள் உண்மைதான் சொன்னார். நபியவர்களின் தொழுகை இப்படித்தான் இருந்தது" என அவரின் கருத்தை உறுதி செய்தார்கள்.

2. அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் விளக்கத்தை செவிமடுத்த ஸஹாபிகளின் எண்ணிக்கை சுமார் பத்து எனக் குறிப்பிடப்படுகிறது. அப்பத்துப்பேரும் நபியவர்களின் தொழுகை பற்றிய கலந்துரையாடலிலே இருந்துள்ளனர். அவ்வாறு நபிகளாரின் தொழுகைபற்றிய அபூஹமீத் ஸாயிதீ அவர்களுடைய விளக்கத்தில் ஏதாவது,

விடுபட்டிருக்குமாயின் இச்சபையினரால் சுட்டிக்காண்பிக்கப்படாமல் விடுபடுவதற்கு வாய்ப்பேதும் இல்லை.

3 'தக்பீருடைய நிலையில் நபிகளார் தம்கைகளைக் கட்டியிருந்தார்'' என்ற விடயம், அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் ஹதீதில் வர்ணிக்கப்படவில்லை.

4. "அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் ஹதீதில், தொழுகையின் பொதுவான விடயங்கள்தான் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. கைகட்டுதல் போன்ற சிறிய விடயங்கள் வேறுஹதீஸ்களில் வந்துள்ளன" என கொள்ளவும் முடியாது. காரணம், அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் ஹதீதில் தொழுகையின் அனைத்து வாஜிபான விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, அனைத்து முஸ்தஹப்பான விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் கைகட்டுதல் போன்ற விடயங்கள் முஸ்தஹப்பாகவிருந்து, அவற்றைக் கூறாமல் விடுவதற்குச் சாத்தியமில்லை. இதனால் ராவியும், அவரை மெய்ப்படுத்துவோரும் கைகட்டுதல் என்ற விடயம் நபிகளாரின் தொழுகையில் இல்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

5. அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் விளக்கத்தைச் செவிமடுத்த ஸஹாபிகளில் சிலர் மூலமாக கைகட்டுதல் சம்பந்தமான ஹதீதுகள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஹதீதுகளில் வந்துள்ளவாறு கைகட்டித் தொழுதல் உண்மையாக இருந்திருப்பின் அபூஹமீத் ஸாயிதீ அவர்களின் கூற்றுக்கு அவர்கள் மறுப்புத் தெரிவித்திருக்க வேண்டும். எனினும் அவ்வாறு செய்யாது, மெய்ப்படுத்தியுள்ளமை கைகட்டுதல் ஒரு மாற்றப்பட்ட சட்டமாக அல்லது இமாம் லைஸ் பின் ஸஃத், இமாம் அவ்சாயீ, இமாம் மாலிக் ஆகியோா் கூறுவதுபோன்று நீண்ட தொழுகைளில் அசௌகரியங்கள் ஏற்படாமல் கைகளைப்பிடித்துக் கொள்ளவதற்கான அனுமதியாக இருந்திருக்க வேண்டுமே தவிர, தொழுகையிலுள்ள ஒரு அடிப்படை விடயமோ, முஸ்தஹப்போ கிடையாது.

(கலாநிதி அப்துல் ஹமீத் பின் முபாறக், ரிசாலதுன் முக்தஸரா)

இப்னு ருஷ்த் கூறுகிறாா்: "நாபிகளாரின் தொழுகை பற்றி விபரிக்கும் ஹதீஸ்களே இவ்விடயத்தில் ஸஹாபாக்கள் கருத்து முரண்பாடு கொள்வதற்கான காரணமாகும். நபிகள்(ஸல்) அவா்கள் தொழுகையில் தனது வலது கையை இடது கை மீது வைத்தாா்களா? என்பது இந்த ஹதீதுகளில் கூறப்படவில்லை."

(பிதாயதுல் முஜ்தஹித், பாகம்:01, பக்கம்: 99)

மாலிக் மத்ஹபின் ஸ்தாபகரான இமாம் மாலிகீ அவர்கள் தொழுகையில் கைகட்டுவதை அனுமதிக்கவில்லை. ஆயினும் "அல்முவத்தாஃ" எனும் நூலில் கைகட்டுவதற்கான ஹதீதை அறிவிப்புச் செய்துள்ளாரே? இது மேற்கூறப்பட்டவைக்கு முரண்பாடாகத் தோன்றுகின்றதே? என்பன போன்ற கேள்விகளை உள்ளடக்கிய விடயமொன்று, 'அல்முதவ்வனதுல்' குப்ரா எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

தொழுகையில் வலது கையை இடதுகைமீது வைப்பதை, இமாம் மாலிக் அவர்கள் பொருத்தமற்ற ஒரு செயலெனக் கருதுகிறார். "நபியவர்கள் தனது வாஜிபான தொழுகைகளில் கைகட்டியதை நான் அறியவில்லை" எனக்கூறும் அவர், தனது அல்முவத்தாஃ கிரந்தத்தில் ஸஹ்ல் பின் ஸஃதிடமிருந்து நபியவர்கள் தொழுகையில் கைகட்டியதாக ஹதீதை அறிவிப்புச் செய்ததுடன் "வெட்கமின்றியிருப்பின் எல்லாக் காரியங்களும் அனுமதிக்கப்பட்டவைகளே. ஒரு கையை மறுகைமீது வைத்தல் அதாவது வலது கையை இடது கைமீது வைத்தல், இஃப்தாரை தீவிரப்படுத்தல், சஹரை தாமதப்படுத்துதல் போன்றவை நபியவர்களின் கூற்றென அப்துல் கரீம் பின் மகாரிகீ பசரி கூறியதாகச் சொல்கின்றார். மேற்குறித்த வினாவிற்கான பதில்: இமாம் மாலிகின் அல்முவத்தா நூலானது ஒரு ஹதீஸ் கிரந்தமாகும். அதில் இடம் பெற்றிருக்கும் அனைத்து ஹதீதுகளும் அவர்களின் ஃபத்வா(மார்க்க தீர்ப்பு)க்களுக்கு அடிப்படைகளாக அமைந்தவையல்ல. இமாம் மாலிகின் பத்வா(மார்க்க தீர்ப்பு)க்களுக்கு எதிரான ஹதீதுகளும் அந்நூலில் காணப்படவே செய்கின்றன.

மாலிக் மத்ஹபின் ஃபிக்ஹைப் பற்றித் தெரிந்தோர் இதனை நன்கு புரிந்து கொள்வர். னுச. அப்துல் ஹமீத் என்பவர் தனது 'ரிஸாலதுன் முக்தசரா' எனும் நூலில் இவ்விடயத்தை சுட்டிக்காட்டுகிறார்.

(கலாநிதி அப்துல் ஹமீத் பின் முபாறக், ரிசாலதுன் முக்தஸரா, பக்கம்: 6,7)

எனவே"நபியவர்கள் தனது வாஜிபான தொழுகைகளில் கைகட்டியதை நான் அறியவில்லை" என்ற இமாம் மாலிகின் கூற்று "தொழுகையில் கைகட்டமுடியாது" என்பதற்கான ஆதாரமாகும்.

## 06. ஷீஆயிசத்தை தோற்றுவித்தவன் அப்துல்லாஹ் இப்னு ஸபாவா ?

ஷீஆயிசத்தை தோற்றுவித்தவன் அப்துல்லாஹ் இப்னு சபா எனும் யூதன் என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இது பற்றி ஷீஆக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை பின்வருமாறு காணலாம். ஷீஆவைத் ஸ்தாபித்தவர் நபி (ஸல்) அவர்கள்தான் என்பது ஷீஆக்களின் நம்பிக்கையாகும். இது தொடர்பான நபிமொழியை மேலே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஷீஆயிசத்தின் தோற்றத்தை, அப்தில்லாஹ் இப்னு ஸபா என்ற யூதனுடன் தொடர்புபடுத்துதல் ஷீஆக்களை ஓரங்கட்ட எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகும். அப்தில்லாஹ் பின் சபா கதை, கற்பனையானது என்பதை ஷீஆ, சுன்னி வரலாற்றாய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இக்குற்றச்சாட்டு தொடர்பாக, ஷீஆ அறிஞர் அல்லாமா அஸ்கரீ எனும் வரலாற்றாய்வாளர் "அப்தில்லாஹ் பின் சபா" எனும் தலைப்பில் இரு பாகங்களைக் கொண்ட ஆய்வுநூலொன்றை எழுதி, அப்தில்லாஹ் பின் சபா ஒரு கற்பனை மனிதன் என்றும், அதில் எவ்வித உண்மையுமில்லை என்றும் பலமான ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார். இவரின் கருத்தையும், நூலையும் மறுத்து இதுவரை எம்மறுப்பு நூலும் எழுதப்பட வில்லை. அப்தில்லாஹ் பின் சபாவின் கதையை சில

வரலாற்றாசிரியர்கள் அறிவித்துள்ள போதிலும், அவர்கள் அனைவரும் அதை தாரீகுத்தபரி எனும் வரலாற்றேடிலிருந்தே பதிவு செய்துள்ளனர். இமாம் தபரி அவர்களோ அப்தில்லாஹ் பின் சபா கதையை செய்ப் பின் அம்ர் தமீமீ கூபீ எனும் அறிவிப்பாளரிடமிருந்து அறிவிக்கிறார். இல்முர்ரிஜால் எனும் ஹதீஸ்களில் வரும் அறிவிப்பாளர்களைப்பற்றிய ஆய்வுத்துறையில் பரிச்சயமுள்ள அறிஞர்கள், "செய்ப் பின் அம்ர் தமீமீ கூபீ" என்பவர் கதீதுகளை இட்டுக்கட்டிப் புனைபவர், பொய்யர், பலயீனமானவர், நம்பத்தகாதவர் என்றெல்லாம் சாடியுள்ளனர். இதனால் இவரின் பலயீனமான அறிவிப்பை எவ்வகையிலும் நம்ப முடியாது.

என அல்லாமா அஸ்கரி நிருவுகின்றார்.அப்துல்லாஹ் பின் சபா கற்பனைக் கதையை பூதாகரப்படுத்தி பிரசாரம் புரிவோர், அக்கதையின் பாரதூரத்தை விளங்கிக் கொள்ளாமலே உள்ளனர். மூன்றாம் கலீபா உதுமான் அவர்களின் காலத்தில் அப்துல்லாஹ் பின் சபா என்ற யூதன் முஸ்லிம் சமூகத்தைக் குளப்பித்துண்டாடி, கலீபாவுக் கெதிராக கிளர்ச்சி செய்த குழுக்களுக்கு பின்னணியிலிருந்து செயற்பட்டான் என்ற இக்கட்டுக் கதையை இஸ்லாமிய வரலாற்றுத்துறையில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட எவரும் நம்புவதற்கில்லை.

1.குர்ஆனின் வாசிப்புமுறை போன்ற மிகச் சிறிய பிரச்சினைகளைக் கூட, மிகப்பாரதூரமாகக் கருதி அதற்கெதிரான மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்ட மூன்றாம் கலீபா அவர்கள் முழு முஸ்லிம் உம்மத்தையும் குழப்பியடித்து சிதறவைக்குமளவுக்குச் செயற்பட்ட ஒரு யூதனின் அடாவடித்தனங்களைக் கண்ணுற்றும் மௌனம் காத்தார்கள் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது அள்ளி வீசப்படுமல்லவா?

2.பல்லாயிரக்கணக்கான நபித்தோழர்கள் இன்னும் உயிருடனிருந்த அக்காலப்பகுதியில் ஒரு யூதன், பல உயிர்த்தியாகங்களுக்கு மத்தியில் உருவான இஸ்லாத்தையும் அதன் நம்பிக்கைகளையும் தகர்த்திடுமளவுக்கு பார்த்துக் கொண்டு மௌனமாகவா இருந்தார்கள்? என்றகேள்வி அந்நபித்தோழர்களை அவமதிப்பதாக அமையுமல்லவா?

3.இஸ்லாமிய வரலாற்றின் இடைநடுவே அல்லது ஆங்காங்கு யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் சம்பந்தப்படுத்தி இஸ்லாத்தை மாசுபடுத்த தொன்று தொட்டு இன்று வரை பல சதிகள் நடைபெற்று வருகின்றன. அப்துல்லாஹ் பின் சபா எனும் யூதன் இஸ்லாத்தின் நம்பிக்கைகளை மாற்றியமைத்தான் எனக் கூறி இஸ்லாத்தின் போதனைகளில் யூதகிறிஸ்தவக் கையாடல்களும், ஊடுருவல்களும் ஆழ ஊடுறுயுள்ளது போன்று கதையளப்பது, இஸ்லாத்தின் தூமையை மாசுபடுத்துவதாக அமையாதா?
எனவே அப்துல்லாஹ் பின் ஸபாவின் கற்பனைக் கதையை ஒரு புனையப்பட்ட, இட்டுக்கட்டப்பட்ட கதையாகவே ஷீஆக்கள் கருதுகின்றனர்.

## 07.முத்ஆ திருமணத்தை இஸ்லாம் அனுமதிக்கிறதா?

எந்தவொரு திருமணத்தம்பதிகளும் திருமணத்தின்போது, நிச்சயம் "ஒருநாள் நாமிருவரும் திருமணபந்தத்திலிருந்து பிரிந்துவிடுவோம்" என்பதை கருத்திற்கொண்டு மணம் முடிப்பதில்லை. அதேநேரம் விவாகரத்து எனும் திருமணபந்தத்திலிருந்து பிரிந்துவிடுவதை இஸ்லாம் தடைசெய்யவுமில்லை. விவாகரத்து என்பது திருமணத்தம்பதிகள் இருவரின் முழு சம்மதத்துடன் நடைபெறவேண்டும். இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்திற்கான நிபந்தனைகளைக் கொண்ட ஆணும், பெண்ணும் தாம் விரும்பினால் திருமணம் முடிக்கவும், தாம் விரும்பினால் பிரியவும் இஸ்லாம் அனுமதித்துள்ளது.

திருமணத்தில் இணையவும், அதிலிருந்து பிரியவுமான இச்சுதந்திரத்தை இஸ்லாம் எதுவரைக்கும் வழங்கியுள்ளது?. திருமணத்தம்பதிகள் இருவர், தம்திருமணத்திற்கு முன்னராகவே தமது விவாகரத்து நாளைத் தீர்மானிக்க இஸ்லாத்தில் அனுமதியுண்டா?.

இத்தகைய விவாகரத்துச் சுதந்திரம் இஸ்லாத்தில் உள்ளது என்பதை வெளிப்படுத்தும் ஒரு விடயம்தான் முத்ஆ எனும் திருமணம். முத்ஆ திருமணம் என்பது ஒரு ஆணும், பெண்ணும் நிர்ணயிக்கப்பட்ட ஒரு கால எல்லைக்குள் கணவன் மனைவியாக இருப்பதற்கு இணக்கம் கொண்டு, திருமணத்தின் அனைத்து விதிகளையும் கடைப்பிடித்து, திருமண பந்தத்தில் இணைந்து கொள்வதைக்குறிக்கும். முத்ஆ என்ற பெயர் கொண்டழைக்கப்படும் இத்திருமணவழிமுறை நபி (ஸல்) அவர்களது காலப்பகுதியில் நடைமுறையில் இருந்துள்ளது என்பதை அனைத்து இஸ்லாமிய அறிஞர்களும் ஏகமனதாக ஏற்கின்றனர். எனினும் அது நபியவர்களின் காலப்பகுதியிலே ஹராமக்கப்பட்டு விட்டதாக சிலரும், இரண்டாவது கலீபா அவர்களின் காலத்திலேதான் அது ஹராமாக்கப்பட்டது என இன்னும் சிலரும் அபிப்பிராயம் கொள்கின்கின்றனர். எனினும் அது நபியவர்களின் காலத்திலிருந்து இன்றுவரை ஹலாலாக உள்ளதாகவே ஷீஆக்கள் நம்புகின்றனர்.

### 7.1.இதற்கு தீர்வு என்ன?

1.முஸ்லிம் சமூகத்தில் அதிகமானவர்கள் (குறிப்பாக அறபு, இஸ்லாமிய நாடுகளில் வாழும் இளைஞர்கள்) நிலையான திருமணம் முடிப்பதற்குரிய நிலையற்று காணப்படுகின்றனர். திருமணம் முடித்தவர்களும் கூட தம்மனைவிமார்களுடன் நீண்ட காலமாக சேர்ந்து வாழும் சந்தர்ப்பமற்று இருப்பதையும் காணக்கூடியதாகவே உள்ளது.
உதாரணமாக பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்று கொண்டிருக்கும் இளைஞர்களில் பலர், தமதுநீண்ட காலங்களை அதில் செலவிடுவதால் நிலையான திருமணமுடிப்பதற்கு போதிய வசதி, வீடு, வருமானம் என்பன இன்றி சிரமப்படுகின்றனர். பல்கலைக்கழகங்களில் ஆண், பெண் சேர்ந்து தத்தமது பாடங்களையும், ஆய்வுகளையும்

மேற்கொள்ளும் கலப்பு நிலை உருவாகி, முகம்பார்த்த உரையாடல்கள், பாடமீட்டல்கள் என்பவற்றிக்கும் அவர்கள் தள்ளப்படுகின்றனர்.

2.திருமணமாகியவர்களில் பலர் வியாபார நோக்கங்களுக்காக வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் நீண்ட நாள் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர். இப்பயணங்களில் தம் மனைவிமார்களை தம்முடன் அழைத்துச் செல்லமுடியாத நிலையில் பாலியல் உணர்வுகளால் தூண்டப்படும் இவர்களுக்கு, தாம் வந்துள்ள இடங்களில் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்புக்களும் கிடைப்பதில்லை.

3.தீராத மற்றும் அபாயகர நோய்களால் பீடிக்கப்பட்டு அவஸ்த்தைப்படும் மனைவிமார்களைக் கொண்ட பல ஆண்கள் சமூகத்தில் காணப்படுகின்றனர். இவர்களின் பாலியல் ஆசைகளை அம்மனைவிமார்களால் நிவர்த்திக்க முடியாததன் நிமித்தம் குறித்த ஆண்கள் பாலியல் ரீதியான பல அழுத்தங்களை எதிர்நோக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

4.இராணுவ மற்றும் பொலிஸ் பிரிவில் கடமைபுரியும் பலர் சமூகத்தில் காணப்படுகின்றனர். பாதுகாப்பு விடயங்களுக்காக நீண்ட காலங்களை தனிமையில் கழிப்பதற்கு தள்ளப்படும் இவர்கள், தமக்கேற்படும் பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்தும் விடயத்தில் மிக சிரமத்தை எதிர் கொள்கின்றனர்.

நபி பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்திலும் இவ்விடயம் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்தது. யுத்தங்களில் கலந்து கொண்ட சஹாபா தோழர்கள் இப்பிரச்சினையை எதிர்நோக்கினார்கள். (பிற்காலத்தில் நபியவர்கள் முத்ஆ திருமணத்தை அனுமதிப்பதற்கு இதுதான் காரணமாக அமைந்தது எனக் கொள்ளப்படுகின்றது.)

மேலே குறிப்பிடப்பட்ட தேவைகளும், பிரச்சினைகளும் சமூகத்தில் என்றென்றும் உள்ளவை. இவை நபியவர்களின் காலத்தில் மாத்திரம் இருந்தவையல்ல. பாலியல் உணர்வுகள் தூண்டப்படுவதற்கான சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் சென்ற காலங்களை விட இக்காலத்தில் அதிகளவாகக் காணப்படுவதால் இந்நிலையில் சிக்கிக் கொள்பவர்கள் இரு வழிகளில் ஒரு வழியை தெரிவு செய்வதற்கு தள்ளப்படுகின்றனர். அதாவது: தக்வா அடிப்படையில் பக்குவமாக இருந்து நோன்பு நோற்று தன்னை பாதுகாத்துக் கொள்வது அல்லது விபச்சாரம் போன்ற முறைகேடான விடயங்களில் மூழ்கி தன் பாலியல் தேவையை நிவர்த்தி செய்வது. இவ்விரண்டில் முதல்வழியை கடைப்பிடிப்ப தென்பது மிகவும் வரவேற்கத் தக்கது. எனினும் இவ்வழிமுறை கூடுதலாக நடைமுறையில் இல்லாத ஒன்றாகவே இதுவரையில் இருந்து வருகிறது.

இதனால் இம்முதல் வழியைக் கடைப்பிடிக்க சிரமப்படுபவர்களுக்கும் இன்னும் அபாயகர பாவமான விபச்சாரத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாப்பாக இருக்க விரும்புவர்களுக்கும் இஸ்லாம் முன்வைக்கும் தீர்வுதான் என்ன? மனிதனின் அனைத்து பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் இஸ்லாத்தில் தீர்வு உள்ளதென்றால் இவ்விடயத்தில் இஸ்லாம் எத்தீர்வைக் கொண்டுள்ளது? எனும் கேள்வி எழுகிறது.

### 7.2.இதுவே தீர்வு

மேற்கூறப்பட்ட நிலைகளிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதற்குத்தான் முத்ஆ திருமணத்தின் தேவையை இஸ்லாம் உணர்த்தியுள்ளது என்பது கவனத்திற்கொள்ளல் வேண்டும். இஸ்லாம் மனிதனை வானவர் போன்று காம உணர்வும், இச்சைகளுமற்ற ஒரு படைப்பாக நோக்கவில்லை. அவனை அவனது இயற்கையான உணர்வுகளுடனே பார்க்கின்றது. அதற்கமைவாகவே சட்டங்களைக் கொண்டிருக்கிறது. மனிதனின் இயற்கை உணர்வுகளைப் பேணி இயற்றப்பட்ட சட்டங்களில் ஒன்றுதான் முத்ஆ திருமண வழிமுறையாகும்.

### 7.3.மிஸ்யார் திருமணம்

முத்ஆ திருமண வழிமுறையை ஏற்க மறுத்த மாற்றுக்கருத்து சிந்தனையாளர்கள் சமூகத்தில் எழும் குறித்த பாலியல் பிரச்சனைக்கு தகுந்த தீர்வை கொடுக்க முடியாமல் சிரமப்பட்டனர்.
ஈற்றில் பல அழுத்தத்திற்கு மத்தியில் முத்ஆ திருமணத்திற்கு ஒப்பான ஒருவகைத் திருமண வழிமுறையை அறிமுகப்படுத்தி அதை மிஸ்யார் திருமணம் எனப் பெயரிட்டனர். இத்திருமணமுறை சவூதி உட்பட பல்வேறு அரபுநாடுகளில் நடைமுறையில் உள்ளது. செயல் முறையில் முத்ஆ உடன் எவ்வித வித்தியாசமும் இல்லாது, பெயரளவில் மட்டும் வேறாகக் காணப்படும் மிஸ்யார் திருமணமானது எத்தகையதென்றால் திருமணமுடிக்கும் தேவையை உணரும் ஒருவர் சொற்ப காலத்தின் பின் தலாக் சொல்லி பிரிந்து விடுவதாக நாட்டம் கொண்டு ஒரு பெண்ணுடன் வழமையான திருமணமொன்றைச் செய்து கொள்வதாகும். இத்திருமணத்திற்கு உடன் படும் பெண்ணுக்கு சொத்துரிமையோ, தாபரிப்புச் செலவோ கேட்கும் உரிமை கிடையாது.

எனினும் மிஸ்யார் திருமணத்திற்கும், முத்ஆ திருமணத்திற்கும் இடையில் ஒரேயொரு வேறுபாடுதான் உள்ளது. அதாவது மிஸ்யார் திருமணத்தில் பெண் ஏற்கனவே கவனத்தில் கொள்ளப்பட்ட தலாக் மூலம் பிரிகிறாள். ஆனால் முத்ஆ திருமணத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கால எல்லை முடிவுற்றதும் அல்லது எஞ்சியிருக்கும் காலத்தை கணவன் மன்னித்து விடுவதாலும் பிரிந்து விடுகிறாள். எனவே இவ்விரு வகைத் திருமணங்களும் ஆரம்பத்திலிருந்தே திருமணபந்தத்தின் கால எல்லையைக் கவனத்தில் கொண்டதாகவே அமைந்துள்ளன.

முத்ஆ திருமணத்தை ஏற்க மறுப்பவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ சமூகத்தில் விபச்சாரத்திற்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் வழியமைக்கின்றனர். முத்ஆவிற்கு ஒப்பான மிஸ்யார் திருமணம் போன்றதொரு வழிமுறையை முன்வைத்தாலே தவிர விபச்சாரத்திற்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் தீர்வு காணமுடியாது.

ஷீஆ, சுன்னி ஹதீதுகளில் "இஸ்லாமியத் திருமண வழிமுறையான முத்ஆ திருமணத்தை நிராகரிக்காமல் விட்டிருந்தால் எவரும் விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கமாட்டார்". என காணப்படுகிறது.

قال الامام الصادق (ع):لو لا ما نهى عنها عمر ما زنى إلاّ شقىّ

அதை (முத்ஆவை) உமர் அவர்கள் தடுக்காமல் விட்டிருந்தால் துரதிஷ்ட மனிதனைத்தவிர வேறு எவனும் விபச்சாரத்தில் ஈடுபட்டிருக்கமாட்டான். என இமாம் ஸாதிக் (அலை) அவர்கள் கூறினார்கள். (வஸாயிலுஷ்ஷீஆ பா: 14 பக்:440 ஹதீஸ் இல:24)

قال على (رضى): لو لا ان عمر نهى عن المتعه ما زنى الاّ شقىّ

உமர் அவர்கள் முத்ஆவைத் தடைசெய்யாமல் விட்டிருந்தால் கெட்ட மனிதனைத்தவிர வேறு எவரும் விபச்சாரம் செய்திருக்கமாட்டான் என இமாம் அலி(அலை) அவர்கள் கூறினார்கள்.

(தப்ஸீருத்தபரீ பா:05 பக்:119, தப்ஸீருல் துர்ருல் மன்தூர் பா: 02 பக்: 140, தப்ஸீருல் குர்துபி பா: 05 பக்: 130)

''நிகாஹுத்தாயிமீ'' எனும் நிலையான திருமணம் செய்யும் வசதியற்று பாலியல் உணர்வுளால் அவஸ்த்தைப்படுவோரின் சங்கட நிலை கருதி இஸ்லாம் முன்வைத்துள்ள முத்ஆ திருமணத்தை துஷ்பிரயோகம் செய்தோர் அதனை பிறர்கண்களுக்கு தவறாக அறிமுகப்படுத்தியுள்ளனர். அதனை தமது ஆபாச வாழ்க்கையாக மாற்றியமைத்து இஸ்லாமிய சமூகத்தில் விபச்சாரமும், பாலியல் துஷ்பிரயோகங்களும் தலைவிரித்தாடுவதற்கு வழியமைத்துள்ளனர். முஸ்லிம் சமூகத்தில் நடந்தேறும் அனைத்து விபச்சார சீரழிவுகளிலும் இத்தகையவர்களுக்கு பங்குண்டு என்பதை மறந்து விடலாகாது. ஏனெனில் தமது செயல் ரீதியான துஷ்பிரயோக நடத்தை காரணமாக முத்ஆ வழிமுறை நடைமுறைக்கு வராவண்ணம் தடையாகச் செயற்படுகின்றனர்.

இஸ்லாம், மனிதனின் இயல்பூக்கத்திற்கு அமைவானதாகவே இறைவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மனிதனின் தேவைகள், உணர்வுகள் அனைத்தையும் அது கவனத்தில் கொண்டே அமையப்பெற்றுள்ளது. அது முத்ஆ திருமண வழிமுறையைக் கூறாமல் விட்டிருக்க வாய்ப்பில்லை. இத்திருமண வழிமுறை குர்ஆனிலும் ஹதீதிலும் கூறப்பட்டிருப்பதுடன் சஹாபா தோழர்கள் பலரும் இதனை தம் வாழ்வில் கடைப்பிடித்தும் வந்துள்ளார்கள். முத்ஆ திருமணம் அறிவு பூர்வமாக மேற்குறித்தவாறு

நோக்கப்பட்டாலும் குர்ஆன், ஹதீதுகளில் அதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளதைக்காணலாம்.

### 7.4.முத்ஆ திருமணம் என்றால் என்ன?

அறியாமை காரணமாக சிலர் முத்ஆ திருமணம் பற்றி தவறான விளக்கத்தைக் கொண்டுள்ளனர். முத்ஆ என்றால் விபச்சாரத்திற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரம் என பார்க்கின்ற இப்பார்வையுடையோர், சாதாரண பாமரர்களுக்கப்பால் மார்க்க அறிவைப் பெற்றவர்களாக இத்தகைய தவறான புரிதல்களை கொண்டிருப்பதுதான் ஆச்சர்யமானது. இவர்கள் தமது கொள்கையில் கொண்டுள்ள வெறியானது முத்ஆவை அங்கீகரிப்போரின் வாதங்களையும், நூற்களையும் படிப்பதற்குத் தடையாக அமைந்துவிடுகிறது. முத்ஆ பற்றி எழுதப்பட்ட நூற்களின் ஒரு வரியைக்கூட வாசிக்காதவர்களாக இவர்களை மாற்றி இருப்பதுதான் விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

### 7.5.முத்ஆ திருமணம் மற்றும் நிலையான திருமணம் இரண்டினதும் ஒற்றுமையும், வேற்றுமையும்

முத்ஆ திருமணம், நிலையான திருமணத்தினுடன் அதிக விடயங்களில் ஒன்றுபட்டதாகவே காணப்படுகின்றது. அவைகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

கணவனும், மனைவியும் எவ்வித நிர்ப்பந்தமுமில்லாத தத்தமது பூரண சம்மதத்துடன் இத்திருமணத்தில் இணைதல் வேண்டும். ‘‘நிகாஹ், ஸிவாஜ், முத்ஆ போன்ற அறபு பதங்கள் மூலமாகவே இத்திருமணத்தின் அக்த் ஓதப்படவேண்டும்’’ இது தவிர உள்ள சொற்களைப் பயன்படுத்தலாகாது.முத்ஆ திருமணத்தில் இணைய விரும்பும் பெண் கன்னியாக இருப்பின் அவரின் வலியின் அனுமதி அவசியமாகும். இத்திருமணத்தின் காலமும், இதில் கொடுக்கப்படும் மஹரும் தெளிவாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

கால எல்லையை குறிப்பிட தவறின் சில சட்டவியலாளர்களின் ஃபத்வா பிரகாரம் இத்திருமணம் நிலையானதாக மாறிவிடும். (இவ்விடயமானது இத்திருமணம் இரண்டும் ஒரே வகையானவை, காலம் குறிப்பிடப்படுவது மாத்திரமே இவ்விரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாடு என்பதை உணர்த்துகிறது.)

இத்திருமணத்தில் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லை முடியுருவது தலாக்காக கணிக்கப்படும். உடனே பெண் இத்தா அனுஷ்டிக்க வேண்டும். (உடலுறவு இடம் பெற்றிருந்தால் மட்டும்) முத்ஆ திருமணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கும், நிலையான திருமணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குமிடையில் எவ்வித வித்தியாசமும் கிடையாது. நிலையான திருமணத்தில் பிறக்கும் குழந்தைகளுக்குரிய சட்டங்கள் அனைத்தும் முத்ஆவில் பிறக்கும் குழந்தைகளுக்கும் உள்ளன. தமது பெற்றார்களிடமிருந்து

வாரிசுரிமையும் அவர்களுக்கு உண்டு. முத்ஆவில் பிறக்கும் குழந்தைகள் சட்டப்படி தமது தாய் தந்தையர்க்குச் சொந்தமானவர்களே. இதனால் இக்குழந்தைகளுக்கான அனைத்துப் பராமரிப்புச் செலவுகளும் பெற்றோர்களையே சாரும்.

குறித்த விடயங்களை சிலர் செவியுற்று வியந்து போகலாம். காரணம் முத்ஆ பற்றி அவர்கள் விளங்கி இருப்பதெல்லாம் தவறானவையே. முத்ஆ என்றதும் விபச்சாரத்திற்கு சமனான ஒன்றென்று அவர்களுக்குத் தவறாகப் புகட்டப்பட்டுள்ளது. முத்ஆ பற்றிய பிரஸ்தாப விடயங்கள், அதுபற்றி கூறப்பட்டுள்ள உண்மையற்ற மற்றும் தவறான கருத்துக்களிலிருந்து தெளிவு பெற வாய்ப்பளிக்கும் என்பதுடன், இத்திருமணம் நுண்ணறிவு மிக்க இஸ்லாத்தின் தூர நோக்குடைய ஒரு இஸ்லாமியச் சட்டம் என்பதைப் புரிந்து கொள்ள இடமளிக்கும் எனவும் நாம் கருதுகிறோம். முத்ஆ பற்றிய பூரண விளக்கமில்லாதவர்களே அதனைப் பற்றி தாறுமாறாகப் பேச முற்படுகின்றனர்.

துஷ்பிரயோகங்கள் நற்காரியங்களில் மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள், அவற்றைத் தூற்றி விமர்சிப்போருக்கு தீனியாக அமைந்து விடுகின்றன. அவர்கள் அத்துஷ்பிரயோகங்களை சாட்டாகக் கொண்டு அந்நற்காரியங்களை தகர்த்து நொறுக்க முற்படுவர். முத்ஆ திருமண விடயத்திலும் இதனையே காணமுடிகின்றது. இஸ்லாமிய சமூகத்தின் ஒரு முக்கியப் பிரச்சினைக்குத் தீர்வாகவும், ஒரு முஸ்லிம் ஹராமான செயலிலிருந்து பாதுகாப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இஸ்லாம், முத்ஆவை தீர்வாக முன்வைத்துள்ளது.

இஸ்லாத்தின் நுண்ணறிவு மிக்க இத்திட்டத்தை துஷ்பிரயோகம் செய்வோரும், காமவெறியர்களும் முத்ஆவின் உண்மை நிலையைப் புரியாதோருக்கு தவறாகக் காண்பித்து வருகின்றனர். இதனை எதிரிகள் சாட்டையாகப் பயன்படுத்தி இவ்வழிமுறையைத் தவறாக விமர்சிக்க முனைகின்றனர். ஆயினும் இஸ்லாம் கூறிய எச்சட்டமும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகாமல் தப்பியது கிடையாது.! எப்பெறுமதியான விடயமும் அதன் பெறுமதியை மதிக்காதவர்களால் துஷ்பிரயோகப் படுத்தப்படாமல் விடுபட்டது கிடையாது! என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

வரலாற்றின் ஒரு பகுதியில் அநியாயக்காரர்களின் ஆட்சியை நியாயப்படுத்த குர்ஆனை தலையில் ஏந்தினார்கள். இதற்காக குர்ஆனை வெறுக்க முடியுமா? மதீனாவில் முனாஃபிகீன்களில் சிலர் ‘‘ழிரார்’’ எனும் பள்ளியைக் கட்டினார்கள். நாயகமவர்கள் அப்பள்ளியை உடைத்து தகர்த்தொளிக்க கட்டளையிட்டார்கள். நபியவர்களின் இக்கட்டளையை வைத்து ஏனைய பள்ளிவாயல்களை உடைத்துத் தகர்க்க முடியுமா?

எனவே முத்ஆவை துஷ்பிரயோகம் செய்யும் காமுகர்களின் கைகளைத்துண்டித்து, அதற்கு பொருத்தமான அணுகுமுறைகளை முன்னெடுப்பது காலத்தின் தேவையாகும்.

மார்க்க சட்டவியலாளர்கள் இதனைச் சட்டமயமாக்கி இதற்குத் தகுமான நிகழ்ச்சி நிரல்களை வகுத்து இதிலிருந்து ஷைத்தான்களின் கைகளைத்துண்டித்து, காமுகர்களினதும் இம்மார்க்கச் சட்டத்தை ஏலனப்படுத்துவோரினதும் பாதையை மூடிவிடவேண்டும்.

## 7.5.அல்குர்ஆனின் பார்வையில் முத்ஆ திருமணம்

புனித அல்குர்ஆனில் (4:24) இவ்வகை திருமணம் “முத்ஆ” (இஸ்திம்தாஃஸ்ரீசுகம் அனுபவித்தல்) எனும் பெயர் கொண்டே அழைக்கப்பட்டுள்ளது

فَمَا اسْتَمْتَعْتُمْ بِهِ مِنْهُنَّ فَآتُوهُنَّ أُجُورَهُنَّ فَرِيضَةً.

“எனவே இவ்வாறு பெண்களிடமிருந்து நீங்கள் சுகம் அனுபவிப்பதால் அவர்களுக்காக (விதிக்கப்பட்ட மஹர்)தொகையைக் கடமையாக கொடுத்து விடுங்கள். (4:24)

நபியவர்களின் ஹதீஸ்களிலும் நிரந்தரமற்ற திருமணம் “முத்ஆ” என்பதாகவே வந்துள்ளது. மேலும் ஷீஆ, சுன்னி மார்க்க அறிஞர்களின் நூற்களிலும் நிரந்தரமற்ற திருமணம் “முத்ஆ” எனும் பெயர் கொண்டே அழைக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த வசனத்தில் இஸ்திம்தாஃ என்பது முத்ஆ திருமணத்தையே குறிக்கிறது எனினும் சிலர் அதனை வெறும் இன்பம் அனுபவித்தல் அல்லது தாம்பத்திய உறவு கொள்ளல் என வியாக்கியானம் செய்ய முனைகின்றனர். அதாவது குறித்த வசனத்தின் கருத்தை “நீங்கள் பெண்களிடம் உடலுறவு கொண்டால் அவர்களது மஹரை கொடுத்து விடுங்கள்” என்பதாகக் கூறுகின்றனர். இவ்வகை வியாக்கியானம் பின்வரும் சிக்கல்களைக் கொண்டதாக அமைகிறது.

குறித்த வியாக்கியானப்படி பெண்ணுக்குரிய மஹரைக் கொடுக்கும் நேரம் அவளுடன் உடலுறவு கொண்டதன் பிறகு அல்லது உடலுறவு இல்லாத வேறு இன்பங்கள் அனுபவித்ததன் பிறகுதான் எனக் கொள்ள வேண்டியேற்படுகிறது.
ஆனால் பெண்ணுக்குரிய மஹரைக் கொடுக்கும் நேரம் அவளுடன் உடலுறவு கொண்டதன் பிறகோ அல்லது உடலுறவு இல்லாத வேறு இன்பங்கள் அனுபவித்தன் பிறகோ அல்ல. மாறாக ஆணையும், பெண்ணையும் சேர்த்து வைக்கும் ஒப்பந்தம் ‘‘அக்த்’’ நிகழ்ந்த மறுகணமே பெண்ணுக்குரிய மஹரைக் கொடுப்பது அவசியமாகிறது. (ஆம் ஒப்பந்தம்–அக்த்– இடம் பெற்று துகூல் –உடலுறவு– கொள்ளாத நிலையில் தலாக் நிகழ்ந்தால் மஹர் அரைவாசியாகி விடுகிறது) முத்ஆ எனும் சொல் மார்க்கத்திலும், சுன்னி மற்றும் ஷீஆ சட்டக்கலை வல்லுனர்களிடமும் (அக்துல்முவக்கத்) தற்காலிக (திருமண)ஒப்பந்தத்தையே குறிக்கிறது.

பிரபல தப்ஸீர் ஆசிரியரான மர்ஹூம் தபர்ஸீ அவர்கள் மஜ்மஉல் பயான் எனும் தப்ஸீர் நூலில் குறித்த வசனத்தின் கீழ் கூறுவதாவது: "இவ்வசனம் குறித்து இரு அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.

முதலாவது: இஸ்திம்தாஃ எனும் பதத்திற்கு உடலுறவு அல்லது இன்பம் அனுபவித்தல் எனும் வியாக்கியானம். இக்கருத்தை கொண்டவர்களாக சில சஹாபாக்களும் சில தாபியீன்களும் காணப்படுகின்றனர்.

இரண்டாவது: இஸ்திம்தாஃ எனும் பதத்திற்கு முத்ஆ திருமணத்தை வியாக்கியானமாக எடுத்துக் கொண்டவர்கள். இவர்களில் அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரழி), அத்துடன் தாபியீன்களில் சிலரும் இக்கருத்தை ஆதரித்துள்ளதானது இங்கு நோக்கத்தக்கதாகும். தபர்ஸீ அவர்கள் தொடர்ந்து கூறுகையில் "மேற்குறித்த இரு அபிப்பிராயங்களிலும் இரண்டாவதே மிகத்தெளிவானது. ஏனெனில் இஸ்திம்தாஃ அல்லது முத்ஆ என்பது மக்களின் பரிபாசையிலும், ஷரீஅத்திலும் தற்காலிக திருமணத்தையே குறிக்கிறது. அத்துடன் பெண்ணுக்கான மஹர் கடமையாவதில் அவளுடன் இன்பம் கொள்வதோ அல்லது உடலுறவு கொள்வதோ நிபந்தனையல்ல. அவளுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்துடனே அது கடமையாகி விடுகிறது. (மஜ்மஉல் பயான் 3:60)

இமாம் குர்துபி தனது தப்ஸீரில் கூறுகிறார்:

"மார்க்க அறிஞர்களில் அநேகர் இவ்வசனத்தில் கூறப்படுவது, இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் நடைமுறையில் இருந்த முத்ஆ திருமண வழிமுறையைத்தான் எனக் கொள்கின்றனர்." (தப்ஸீர் குர்துபி 5:60, பத்ஹுல் கதீர் 1:449)

இமாம் சுயூதி தனது துர்ருல் மன்தூர் தப்ஸீரிலும் அபூஹய்யான், இப்னுகதீர், தஆலபீ ஆகியோர் தத்தமது தப்ஸீர்களிலும் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளனர்.

முத்ஆ திருமண வழிமுறை நபியவர்களின் காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த ஒன்றுதான் என்பது ஷீஆ, சுன்னா அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும். எனினும் சுன்னி அறிஞர்களில் சிலர் நபியவர்களின் காலப்பகுதியில் நடைமுறையில் இருந்து வந்த குறித்த திருமணச்சட்டம் பின்னர் (நஸ்க்) காலாவதியாகிவிட்டதாக கருதுகின்றனர். ஆயினும், இது தடைசெய்யப்பட்டது எப்போது எனும் விடயத்தில் பாரிய கருத்து முரண்பாடு காணப்படுகின்றது. ஸஹீஹ் முஸ்லிமுக்கு விரிவுரை வழங்கிய இமாம் நவவி அவர்கள் முத்ஆ திருமணம் தடைசெய்யப்பட்ட கால முரண்பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

- கைபர் யுத்தத்தில் மாத்திரம் ஹலாலாக்கப்பட்டு பின்னர் ஹராமாக்கப்பட்டுவிட்டது.

- உம்ரதுல் கழாவில் மாத்திரம் அது ஹலாலாக இருந்தது.
- மக்கா வெற்றியின் போது ஹலாலாக்கப்பட்டு பின்னர் ஹராமாக்கப்பட்டு விட்டது.
- தபூக் யுத்தத்தின் போது (ஹிஜ்ரி 9ம் ஆண்டு) ஹராமாக்கப்பட்டது.
- அவ்தாஸ் யுத்தத்தின் போது (ஹிஜ்ரி 8ம் ஆண்டு) மாத்திரம் ஹலாலாக இருந்தது.
- ஹஜ்ஜதுல்வதாஃவில் மாத்திரம் (ஹிஜ்ரி 10ம் ஆண்டு) அது ஹலாலாக இருந்தது.
- முத்ஆ நபியவர்களில் காலத்திலும், முதலாம் கலீபா அவர்களின் காலத்திலும் ஹலாலாகத்தான் இருந்தது. அதனை இரண்டாம் கலீபா உமர் தான் தடைசெய்தார். (இமாம் நவவீ ஷரஹு ஸஹீஹ் முஸ்லிம் 9 –191)

ஷீஆக்களைச் சாடமுனைவோர், முத்ஆ திருமணத்தை ஷீஆக்களின் சீரழிந்த ஒரு கலாசாரமாகவும், அதை ஒரு கொடிய விபச்சாரமாகவும் பேசிவருகின்றனர். இத்திருமணவழிமுறை பற்றி எந்த ஹதீஸ்களும், ஹதீஸ் நூற்களில் பதிவாகவில்லை என்பதைப்போல் அவர்கள் பேசுவதுதான் வியக்கத்தக்கது!. இமாம் முஸ்லிம் அவர்கள் இது தொடர்பான பாடமொன்றையே தனது ஸஹீஹ் முஸ்லிமில் "நிகாஹுல்முத்ஆ" (முத்ஆ திருமணம்) எனும் தலைப்பில் பதிவு செய்துள்ளதையும், நபியவர்களின் ஒரு காலப்பகுதியில் அது நடைமுறையில் இருந்துள்ளதை அனைத்து அறிஞர்களும் அங்கீகரித்துள்ளதையும் இவர்கள் அறியாமலே பேசுகின்றனரா?!!நபியவர்களின் காலப்பகுதியில் முத்ஆ திருமணம் நடைமுறையில் இருந்ததாக ஹதீதுகள் கூறும் அதேவேளை அது பின்னர் ஹராமாக்கப்பட்டு விட்டதா? இல்லையா? என்பதில் முரண்பட்ட கருத்துகள் நிலவுவதைக் காணமுடிகிறது. இது தொடர்பான குழப்ப நிலையை கண்ணுற்ற இமாம் ஷாபிஈ அவர்களின் கூற்று மிக வியக்கத்தக்கதும், நோக்கத்தக்கதுமாகும். அவர்கள் கூறினார்கள்.

لا أعلم شيئاً أحل الله ثمّ حرّمه ثمّ أحلّه ثمّ حرّمه إلاّ المتعة

முத்ஆவைத்தவிர, அல்லாஹுதஆலா (முதலில்) ஹலாலாக்கி பின்னர் ஹராமாக்கி, அதன் பின்னர் ஹலாலாக்கி பிறகும் ஹராமாக்கிய எவ்விடயத்தையும் நான் அறியேன்.
(அல் முக்னி– இப்னு குதாமா 7:572)

அவருடைய கருத்திற்கமைய குறிப்பிட்ட காலம் அது ஹலாலாக இருந்துள்ளமை கவனிக்கத்தக்கது. முத்ஆ திருமணம் பற்றி பதிவாகியுள்ள முரண்பட்ட அறிவிப்புகளில் சில:

عن عبد الله كنا نغزو مع رسول الله صلى الله عليه وسلم ليس لنا نساء فقلنا ألا نستخصي فنهانا عن ذلك ثم رخص لنا أن ننكح المرأة بالثوب إلى أجل ثم قرأ عبد الله

நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து நாம் யுத்தம் செய்து கொண்டிருந்தோம். எங்களுடைய பெண்களோ எங்களிடம் இருக்கவில்லை. (நபியவர்களிடம்) நாங்கள் எங்கள் ஆண்மையை நீக்கிக் கொள்ளட்டுமா? (எனக்கேட்டோம்) நாயகமவர்கள் அதனை விட்டும் எம்மைத்தடுத்து, நாம் பெண்களுக்கு ஆடையை (மஹராகக்) கொடுத்து தற்காலிக திருமணம் செய்ய அனுமதித்தார்கள். பின்னர் அப்துல்லாஹ் என்பவர் பின்வரும் வசனத்தை ஓதினார்.

يا أيها الذين آمنوا لا تحرموا طيبات ما أحل الله لكم ولا تعتدوا إن الله لا يحب المعتدين

ஓ! ஈமான் கொண்டோரே... அல்லாஹ் உங்களுக்கு ஹலாலாக்கியவற்றை நீங்கள் ஹராமாக்க வேண்டாம். இன்னும் நீங்கள் வரம்பு மீறவும் வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுவோரை விரும்பமாட்டான். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

عن سلمة بن الأكوع وجابر بن عبد الله : أن رسول الله صلى الله عليه وسلم أتانا فأذن لنا في المتعة

நிச்சயமாக ரஸூல் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து முத்ஆ செய்வதற்கான அனுமதியை வழங்கினார்கள் என சல்மதுப்னு அக்வஃ மற்றும் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி) ஆகியோர் அறிவிக்கின்றனர். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

عن جابر بن عبد الله كنا نستمتع بالقبضة من التمر والدقيق الأيام على عهد رسول الله صلى الله عليه وسلم وأبي بكر حتى نهى عنه عمر في شأن عمرو بن حريث

நாம் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும், அபூபக்கர் அவர்களின் காலத்திலும் ஒரு பிடி ஈத்தம் பழம், மாவு (போன்றவற்றை மஹராக) கொடுத்து முத்ஆ திருமணம் செய்து வந்தோம். உமர் அவர்கள் அம்ர் பின் ஹுரைஸ் என்பவரின் விடயத்தில் அதனைத் தடைசெய்து விட்டார் என ஜாபிருப்னு அப்தில்லாஹ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

عن أبي نضرة قال كنت عند جابر بن عبد الله فأتاه آت فقال ابن عباس وابن الزبير اختلفا في المتعتين فقال جابر فعلناهما مع رسول الله صلى الله عليه وسلم ثم نهانا عنهما عمر فلم نعد لهما

அபூநழ்ரா என்பவர் கூறுகிறார் "நான் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்களுடன் இருக்கும்போது, அவரிடம் ஒருவர் வந்து, அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்களும் அப்துல்லாஹ்பின் சுபைர் அவர்களும் இரு முத்ஆ (நிகாஹுல்முத்ஆ மற்றும் முத்அதுல்ஹஜ்) ஆகியவற்றில் கருத்து முரண்பட்டார்கள்" எனக் கூறினார்.

அதற்கு ஜாபிர் (ரழி) "நாம் அவ்விரண்டையும் நபியவர்களின் காலத்தில் செய்து கொண்டு வந்தோம். பின்னர் உமர் அவர்கள்தான் அதனைத் தடைசெய்தார். அதன் பின் அவ்விரண்டையும் நோக்கி நாம் மீளவில்லை எனக்கூறினார்.
(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

عن  عبد الملك بن الربيع بن سبرة الجهني  أمرنا رسول الله  صلى الله عليه وسلم  بالمتعة  عام الفتح حين دخلنا  مكة  ثم لم نخرج منها حتى نهانا عنها

மக்காவெற்றி கொள்ளப்பட்ட வருடத்தில் நாம் மக்காவில் நுழைந்த போது நாயகம் (ஸல்) அவர்கள் முத்ஆ திருமணம் செய்யுமாறு எமக்குக் கட்டளை பிறப்பித்தார்கள். பின்னர் மக்காவிலிருந்து நாம் வெளியேறும் வேளையில் அதனைத் தடைசெய்து விட்டார்கள் என அப்துல்மலிக் பின் ரபீஃ(ரழி) கூறுகிறார்.

(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

عن علي بن أبي طالب  قال أن رسول الله  صلى الله عليه وسلم  نهى عن  متعة النساء  يوم  خيبر

அலி(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் “நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் யுத்தத்தின் போது முத்ஆவைத் தடைசெய்தார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம் கிதாபு நிகாஹில் முத்ஆ)

முத்ஆ எனும் திருமண வழிமுறை நபியவர்களின் காலத்தில் இருந்ததாக உறுதிப்படுத்தும் மேற்குறித்த அறிவிப்புகள் அனைத்தும் அது எப்போது ஹராமாக்கப்பட்டது என்பதை தெளிவாகக் குறிப்பிட வில்லை. எனினும் முத்ஆ திருமண வழிமுறை நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும், முதலாம் கலீபா அவர்களின் காலத்திலும் நடைமுறையில் இருந்ததாகவும், இரண்டாம் கலீபாதான் அதைத் தடைசெய்தார்கள் எனும் அறிவிப்பு பின்வரும் காரணங்களினால் வலுப்பெற்று காணப்படுகிறது.

I.ஸஹீஹ் முஸ்லிமில் கிரந்தத்தில் இரண்டாம் கலீபா உமர் அவர்களே முத்ஆவைத் தடுத்தார்கள் எனும் அறிவிப்பு ஒன்றுக்கதிமாக காணப்படுகின்றன.

II.முஸ்னத் அஹ்மத், பைஹகீ, தப்ஸீருல்கபீர் போன்ற கிரந்தங்களில் பின்வரும் அறிவிப்பு காணப்படுகிறது

عن عمربن خطاب قال :متعتان كانتا مشروعتين فى عهد رسول الله(ص) و أنا أنهى عنهما و اعاقب عليهما

“நபியவர்களின் காலத்தில் ஆகுமாக்கப்பட்டிருந்த இருமுத்ஆக்களையும் நான் தடைசெய்கிறேன். அதனைச் செய்வோரை நான் தண்டிப்பேன்” என உமர் அவர்கள் கூறினார்.

(முஸ்னத் அஹ்மத் 3:325,பைஹகீ 7:206, அல்முக்னி இப்னு குத்தாமா 7:571, தப்ஸீருல் கபீர் 10:52, கன்ஸுல் உம்மால் 16:521)

III.ஷீஆ தரப்பு அறிவிப்புக்களிலும் முத்ஆ திருமணம் இரண்டாம் கலீபா அவர்களின் காலத்திலேதான் தடைசெய்யப்பட்டதாக காணப்படுகின்றது.

மேலே கூறப்பட்ட விடயங்களை கருத்தில் கொண்டு பின்வரும் முடிவுகளுக்கு வரலாம்.

1.முத்ஆவை நபியவர்கள் தடைசெய்தார்களா? இல்லையா? எனும் சந்தேகம் எழுவதால் அது ஆரம்பத்தில் ஹலாலாக இருந்ததனால் அது இன்னும் ஹலாலகவே உள்ளது எனும் முடிவுக்கு வரலாம்.

2.கலீபா உமர் அவர்கள்தான் அதனை தடைசெய்தார்கள் எனும் அறிவிப்புகள் காணப்படுவதால், ஒன்றில் நபியவர்கள் காலத்தில் தடைசெய்யப்பட்டதாக வரும் அறிவிப்புகளை மறுக்க வேண்டும். அல்லது அவைகளை சரிகண்டு இரண்டாம் கலீபா அவர்கள் தடைசெய்ததாக வரும் அறிவிப்புகளை நிராகாரிக்க வேண்டும்.

3.நபியவர்கள் ஹலாலாக்கிய முத்ஆவை இரண்டாம் கலீபாதான் தடைசெய்தார் எனும் அறிவிப்புகளை நம்பினால், நபியவர்கள் ஹலாலாக்கிய ஒன்றை வேறு எவரும் ஹராமாக்க முடியாது.

4.மேலே கூறிய திருமறைவசனம் (4:24) முத்ஆ திருமணத்தை கூறியிருக்கும் அதேவேளை, அஹ்லுல்பைத்துகள் ஊடாக பதிவாகியுள்ள ஹதீதுகளிலும் முத்ஆ திருமணத்தை நபியவர்கள் ஹராமாக்கவில்லை என்பதாகவே காணப்படுகிறது. இப்படியும் ஒரு அபாண்டம்“ஷீஆக்களின் சீர்கெட்ட முத்ஆ திருமணத்தின் விளைவால், அவர்கள் வாழும் பகுதிகளில் வீதிச்சிறார்கள் அதிகரித்துக் காணப்படுகிறார்கள்” என்ற இன்னுமொரு அபாண்டம் கூறப்படுகிறது. இது தொடர்பாக ஷீஆ சமூகத்தில், குறிப்பாக ஷீஆக்கள் முழு சுதந்திரம் பெற்று வாழும் ஈரானில் கண்ட விடயங்களை எவ்வித ஒளிவு மறைவின்றியும் இங்கு பதிவுசெய்கிறோம்.

1.முத்ஆ திருமணம் ஷரீஆ சட்டத்தில் ஹலாலாக இருந்தும் கூட, இது ஒரு இரண்டாம் நிலைச்சட்டமாகவே ஷீஆ சமூகத்தில் பார்க்கப்படுகிறது. ஷீஆக்கள் முத்ஆ திருமணமுறையை ஹலாலாகக் கருதியபோதிலும், அது அச்சமூகத்தில் கொடிகட்டிப்பறக்கும் ஒன்றாகக் காணப்படுவதில்லை. அப்படியான ஒரு சட்டத்தை அவர்கள் கடைப்பிடித்து வாழ்கிறார்களா? என சந்தேகிக்குமளவு அது காணப்படுவதை, அச்சமூகத்தில் நடமாடும் ஒருவரால் புரிந்து கொள்ள முடியும்.

முத்ஆவை ஹலாலாகக் கருதும் உங்கள் சமூகம், அதனை எந்தளவு நடைமுறைப்படுத்தி வருகிறது? என ஈரானிய ஷரீயா கவுன்சிலில் அங்கம் வகிக்கும் அல்லாமா ஜஃபர் அல்ஹாதீ எனும் ஒரு ஷீஆ அறிஞரிடம் வினவினோம். அதற்கவர் “முத்ஆ இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அனுமதிக்கப்பட்டதாக இருப்பினும், அது அல்அஹ்காமுஸ்ஸானவியா எனும் இரண்டாம் நிலைச்சட்டமாகவே அதனை நாம்

நோக்குகிறோம். அது ஹராமா? ஹலாலா? எனக்கேட்டால் நாம் அதனை ஹலால் என்றே கூறுவோம். எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பல வரையறைகளையும், விதிகளையும் நாம் கொண்டிருக்கிறோம். அதனை எவரும், தாம் நினைத்த விதம் சுதந்திரமாக தம்கையிலெடுக்க எமது நாட்டில் சட்டமில்லை. அதேபோன்று அதனை எவரும் துஷ்பிரயோகம் செய்து சீர்கேடாக்கிடவும் நாம் விடமாட்டோம்" என பதிலளித்தார்.

2.முத்ஆ திருமணத்தில் பெற்றெடுக்கப்படும் குழந்தை சட்டப்படி பெற்றோருக்குச் சொந்தமானது. இதனால் அதனைப் பராமரிக்கும் பொறுப்பு பெற்றோர்களையே சாரும். ஈரான் போன்ற நாடுகளில் பொதுவாக சிறார்கள் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைவாக ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களூடாக பயிற்றுவிக்கப் படுகிறார்கள். இளம் வயதிலிருந்தே பாரிய சாதனைகளைப் படைக்கக் கூடியவர்களாக வளர்த்தெடுக்கப் படுகிறார்கள். கலைத்துறைகள் மற்றும் குர்ஆன் மனனமிடல் போன்றவற்றில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இதனால் வீணாக வீதியோரங்களில் அலைந்து திரியும் சிறுவர்களை ஈரானின் எப்பகுதியிலும் காணமுடியாது. முத்ஆ திருமணத்தின் விளைவாக வீதிச்சிறார்கள் அதிகரித்து காணப்படுகிறார்கள் என்பது எதிரிகளின் பொய்ப்பிரசாரங்களில் ஒன்று.

முத்ஆ திருமணத்தினூடாக வீதிச்சிறார்கள் உருவாகிறார்கள் அல்லது முத்ஆவில் இணைந்து காலமுடிவில் பிரிந்து செல்லும் பெண், கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்படுவாளே போன்ற ஐயங்களையெல்லாம் கூறுவோரின் கூற்று நியாயமானதாயின், இவைகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல்தான் நபியவர்கள் இத்திருமணமுறைக்கு அனுமதி வழங்கினார்களா? என்ற ஐயம் நபியவர்கள் மீது எழுக்கூடும் (நஊது பில்லாஹி மின்ஹா).

## 08. ஷீஆ நம்பிக்கையில் தகிய்யா என்ற நடிப்பு உள்ளதா?

"ஷீஆக்களின் சீரழிந்த கொள்கைகளில் ஒன்று தகிய்யா. தகிய்யா என்றால் நடிப்பு, உள்ளொன்றை வைத்து புறம் வேறாக நடந்து கொள்வது. இது நிஃபாக் எனும் நயவஞ்சகம்" என்பன ஷீஆக்களை எதிர்த்து செய்யப்படும் பிரசாரங்களாகும்.
தகிய்யா என்றால் என்ன? இது குறித்து ஷீஆக்களின் நம்பிக்கை என்ன? என்பன போன்ற விடயங்களை இங்கு தருகிறோம்.

ஒரு முஃமின் தனது கொள்கையைப் பகிரங்கமாக வெளிக்காட்டிக் கொள்வதன் மூலம் எதிரிகளின் மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆழாகலாம் என அஞ்சினால் இதற்காக அவன் தனது கொள்கையை மறைத்துக் கொள்ள மார்க்கம் அவனுக்கு அனுமதியளித்துள்ளதை தகிய்யா எனப்படுகிறது. இதை குர்ஆனும், நபியவர்களின் சுன்னாவும் அனுமதிப்பதாக ஷீஆக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## 8.1.நிஃபாக்(நயவஞ்சகம்) மற்றும் தகிய்யாவுக்கிடையிலான வேறுபாடுகள்

உள்ளத்தில் குஃப்ரை அல்லது இஸ்லாத்திற்கு எதிரான கருத்தை வைத்துக்கொண்டு வெளியில் முஸ்லிமாக நடிப்பதை நிஃபாக் (முனாபிக் தனம்) என்கிறோம். ஆனால் தகிய்யா என்பது உள்ளத்தில் பரிபூரணமான ஈமானையும், இஸ்லாமிய நம்பிக்கையையும் வைத்துக் கொண்டு வெளியில் எதிரிகளினால் ஏற்படும் உயிராபத்து கருதி, அதனை வெளிப்படுத்தாமல் இருப்பதை தகிய்யா என்கிறோம். தகிய்யாவின் யதார்த்தத்தில் ஈமானும், நிபாக்கின் யதார்த்தத்தில் குப்ரும் இருக்கிறது. எனவே தகிய்யா ஈமானுடன் சம்பந்தப்பட்டது. நிபாக் குப்ருடன் தொடர்புடையது.

தகிய்யா மற்றும் தக்வா எனும் பதங்கள் “வகய–வகா” எனும் மூலப்பதத்திலிருந்து உருவானவை. இதனால் தக்வாவுக்கும், தகிய்யாவுக்குமிடையில் நேர்பாடான தொடர்புகளும் தக்வாவுக்கும், நிபாக்கிக்குமடையில் எதிர்மறையான தொடர்புகளுமே காணப்படுகின்றன.

## 8.2.தகிய்யாவுக்குரிய ஆதாரங்களும், சான்றுகளும்

1.புனித அல்குர்ஆனில் நபி மூஸா(அலை) அவர்களை பரிபூரணமாக ஈமான் கொண்ட மனிதர் ஒருவர் பற்றி கூறப்படுகிறது. அவர் பிர்அவ்னின் கூட்டத்தில் வாழ்ந்து வந்தார். அவர் தனது ஈமானை மறைத்துக் கொண்டு நபி மூஸா (அலை) அவர்களுக்கு ஆதரவாக, பிர்அவ்னின் தர்பாரிலிருந்து செயற்பட்டார். நபிமூஸாவைக் கொலைசெய்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்த பிர்அவ்னியர்களை திசை திருப்பினார். இவர் ஓரிறைக் கோட்பாட்டை வெளிப்படுத்தாமல் மறைத்து வந்தார் என்பதற்காக இவரை அல்குர்ஆன் இகழ்ந்து கண்டித்து வெறுக்கவில்லை. மாறாக அவரை (ரஜுலுன் முஃமினுன்) முஃமினான மனிதர் என்று புகழ்ந்து சிலாகித்துக் கூறுகிறது. அவர் பற்றி குர்ஆன் குறிப்பிடுகையில்,

وَقَالَ رَجُلٌ مُّؤْمِنٌ مِّنْ آلِ فِرْعَوْنَ يَكْتُمُ إِيمَانَهُ أَتَقْتُلُونَ رَجُلًا أَن يَقُولَ رَبِّيَ اللَّهُ وَقَدْ جَاءَكُم بِالْبَيِّنَاتِ مِن رَّبِّكُمْ وَإِن يَكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهُ وَإِن يَكُ صَادِقًا يُصِبْكُم بَعْضُ الَّذِي يَعِدُكُمْ إِنَّ اللَّهَ لَا يَهْدِي مَنْ هُوَ مُسْرِفٌ كَذَّابٌ

பிர்அவ்னின் குடும்பத்தாரில் தம் ஈமானை மறைத்து வைத்திருந்த ஒரு முஃமின் இவ்வாறு கூறினார்: ஒரு மனிதர், மெய்யாகவே உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான அத்தாட்சிகளை உங்களிடம் கொண்டு வந்தநிலையில் “என் இறைவன் அல்லாஹ்வே தான்!' என்று கூறுவதற்காக அவரை நீங்கள் கொன்று விடுவீர்களா?. எனவே அவர் பொய்யராக இருந்தால், அப்பொய் அவருக்கே (கேடு) ஆகும். ஆனால் அவர் உண்மையாளராக இருந்தால், அவர் உங்களுக்கு வாக்களிக்கும் சில (வேதனைகள்) உங்களை வந்தடையுமே! நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறியப் பொய்யரை நேர்வழியில் செலுத்தமாட்டான்.' (40:28)

2. குரைஷிக் காபிர்கள் ஹஸரத் அம்மார் யாசிர் (ரழி), அவரது தந்தை யாசிர் (ரழி), தாய் சுமையா (ரழி) ஆகியோரை சிறைப்பிடித்து கடுமையாக சித்திரவதை செய்து

இஸ்லாத்தை விட்டு விடும்படி கூறினர். அம்மார்(ரழி) அவர்களின் தந்தையும், தாயும் குரைஷிக் காபிர்களின் தண்டனையை சகித்துக் கொண்டு தம் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் மறுத்து விட்டனர். இதனால் அவ்விருவரையும் காபிர்கள் கொலைசெய்தனர். ஆனால் அம்மார்(ரழி) அவர்களை சித்திரவதைக்குள்ளாக்கிய போது அவர் தனது உள்ளத்தினாலன்றி, தனது நாவினால் அவர்களின் வேண்டுகோளை ஏற்றதன் விளைவாக விடுதலையானார்.

தான் செய்தது தவறோ எனப்பயந்து நபியவர்களிடம் ஓடோடி வந்து நடந்த விடயத்தைக்கூறினார். அதற்கு நபியவர்கள் "நீர் அவர்களின் வேண்டுகோளை ஏற்கும் போது, உமது உள்ளம் எவ்வாறிருந்தது?" எனக்கேட்டார்கள். அதற்கு அம்மார் பின் யாசிர் (ரழி) அவர்கள் "எனது உள்ளம் பரிபூரண ஈமானுடனே இருந்தது எனக் கூறினார்." அதனை செவிமடுத்த பெருமானார் அவர்கள் "அப்படியானால் உம்மீது எத்தவறும் கிடையாது. அதே நேரத்தில் உனது தாயும் தந்தையும் (ஷஹீதாக) இறைபாதையில் தம்மை அர்ப்பணித்தோராவர்" என நவின்றார்கள். அவ்வேளையில்தான் இவ்வாறு நடந்து கொண்டதில் எத்தவறுமில்லையென்ற பின்வரும் திருமறை வசனம் நபிகளாருக்கு இறக்கியருளப்பட்டது.

مَن كَفَرَ بِاللّهِ مِن بَعْدِ إيمَانِهِ إِلاَّ مَنْ أُكْرِهَ وَقَلْبُهُ مُطْمَئِنٌّ بِالإِيمَانِ وَلَـكِن مَّن شَرَحَ بِالْكُفْرِ صَدْرًا فَعَلَيْهِمْ غَضَبٌ مِّنَ اللّهِ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ

எவர் ஈமான் கொண்டபின் அல்லாஹ்வை நிராகரிக்கிறாரோ அவர் (மீது அல்லாஹ்வின் கோபம் இருக்கிறது) அவருடைய உள்ளம் ஈமானைக் கொண்டு அமைதி கொண்டிருக்கும் நிலையில் யார் நிர்ப்பந்திக்கப்படுகிறாரோ அவரைத் தவிர – (எனவே அவர் மீது குற்றமில்லை) ஆனால் (நிர்ப்பந்தம் யாதும் இல்லாமல்) எவருடைய நெஞ்சம் குஃப்ரைக்கொண்டு விரிவாகி இருக்கிறதோ இத்தகையோர் மீது அல்லாஹ்வின் கோபம் உண்டாகும் இன்னும் அவர்களுக்குக் கொடிய வேதனையும் உண்டு.

(16:106 (தப்சீர் இப்னு கதீர் , தப்சீருத்தபரீ)

3.தகிய்யா எனும் அம்சத்தை மிக தெளிவாக பின்வரும் திருமறை வசனம் எடுத்து இயம்புகின்றது.

لاَّ يَتَّخِذِ الْمُؤْمِنُونَ الْكَافِرِينَ أَوْلِيَاء مِن دُوْنِ الْمُؤْمِنِينَ وَمَن يَفْعَلْ ذَلِكَ فَلَيْسَ مِنَ اللّهِ فِي شَيْءٍ إِلاَّ أَن تَتَّقُواْ مِنْهُمْ تُقَاةً وَيُحَذِّرُكُمُ اللّهُ نَفْسَهُ وَإِلَى اللّهِ الْمَصِيرُ

முஃமின்கள் (தங்களைப் போன்ற) முஃமின்களையன்றி, காஃபிர்களைத் தம் உதவியாளர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி (உங்களில்) எவரேனும் அப்படிச் செய்தால், (அவருக்கு) அல்லாஹ்விடத்தில் எவ்விடயத்திலும் சம்பந்தம் இல்லை. இன்னும், அல்லாஹ் தன்னைப் பற்றி உங்களை எச்சரிக்கிறான். மேலும், அல்லாஹ்விடமே (நீங்கள்) மீள வேண்டியிருக்கிறது (3:28)

அஹ்லுஸ்ஸுன்னாக்களின் முஸ்னத் அபீஷைபா எனும் பிரபல நூலில் பின்வரும் சம்பவம் பதிவாகியுள்ளது. பொய் நபியான முஸைலமா நபித்தோழர்கள் இருவரை சிறைப்பிடித்தான். தன்னை நபியாக ஏற்றுக் கொள்ளும்படி அவ்விருவரையும் வற்புறுத்தினான். அதில் ஒருவர் முஸைலமாவின் வேண்டுகோளை மறுத்தார். அதற்காக அவர் கொல்லப்பட்டார். இரண்டாமவர் ஆபத்தை அஞ்சி முஸைலமாவின் வேண்டுகோளை (வாயினால் மாத்திரம்) ஏற்றுக் கொண்டார். இதற்காக அவர்விடுதலை செய்யப்பட்டார். இச்செய்தி நபியர்களுக்கு கிடைத்தது. அதற்கு நபியவர்கள் "முதலாமவர் உண்மைக்காக உயிர்நீத்தார், இரண்டாமவர் மீது எக்குற்றமும் கிடையாது. அவருக்கு அல்லாஹ்வின் அனுமதியுண்டு" எனக் கூறினார்கள். (முஸ்னத் அபீஷைபா 12:358)

பெருமானாரின் மூன்று வருட கால இரகசியப் இறைகொள்கை பிரசாரம், தகிய்யாவின் முழு எடுத்துக்காட்டாகும். பிரசாரத்தில் யுக்திகளைக்கையாண்ட நபியவர்கள் தன்னை ஆவேசமாக பகிரங்கப்படுத்தி மடத்தனமாக அழித்துக் கொள்ளாமல் தன் பாதையை வெற்றிகரமாக நிதான சிந்தனையோடு முன்னெடுத்தார்கள். இங்கு தகிய்யா என்பது ஒரு முஸ்லிம் காபிர்களுக்கு அஞ்சி தனது கொள்கையை மறைத்துக் கொள்வதைத்தான் குறித்த ஆதாரங்கள் உணர்த்துவதாக சிலர் வாதிடலாம்.

குறித்த ஆதாரங்கள் காபிர்களுக்கு முன்னிலையில் மாத்திரம் தகிய்யா செய்வதைக் கூறவில்லை. ஒரு முஃமினின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடியவர் காபிராகவும், முனாபிக்காகவும், முஸ்லிமாகவும் இருக்கலாம். இதனை குறித்த ஆதாரங்கள் பொதுவாகவே கூறியுள்ளன.

புனித குர்ஆனையும், நபியவர்களின் வழிகாட்டல்களையும் எவருக்கும் அஞ்சாமலும் தயங்காமலும் பின்பற்றி, அதேபோன்று பிற முஸ்லிம்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் இஸ்லாத்தின் அடிப்படைகளை எவ்வித வித்தியாசமுமின்றி நம்பி வாழும் ஷீஆ முஸ்லிம்களை இன்று முஸ்லிம்களில் தீவிரவாதப்போக்குடைய சிலர் காபிர்கள் எனக்கூறி அவர்களின் இரத்தத்தை ஓட்டுவது ஹலால், ஷீஆக்களைக் கொலை செய்வோர் சுவனம் செல்வர் என மிக அபாயகரமான ஃபத்வாக்களை வழங்கி ஈராக், பாகிஸ்தான்,சிரியா ... போன்ற நாடுகளில் ஷீஆக்களை கொலை செய்தும் அவர்களின் சொத்துக்களையும் உடமைகளையும் அபகரித்தும் வருகின்றனர்...

அமெரிக்காவின் எதிர்பார்ப்புக்கமைய தீவிர மற்றும் வெறி உணர்வுகளுடன் காணப்படும் இவர்களுக்கு (தாலிபான்,அல்கைதா,ஐ.எஸ்.எஸ்...) முன்னிலையில் சிக்கிக் கொள்ளும் ஒரு முஸ்லிம் தகிய்யாவை கடைப்பிடிப்பதைத்தவிர வேறுவழி இல்லை.

உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றவர் ஒரு முஸ்லிம் என்றாலும் அவர் முன்னிலையிலும் தகிய்யா செய்வதை இமாம் ஷாபிஈ அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

تجوز التقية بين المسلمين كما تجوز بين الكافرين محاماة عن النفس

“காபிர்களுக்கு மத்தியில் தகிய்யா செய்வது ஆகுமாக இருப்பது போல் முஸ்லிம்களுக்கு மத்தியிலும் தகிய்யா செய்வது ஆகும்” என இமாம் ஷாபிஈ அவர்கள் கூறுகிறார்கள்

(தப்ஸீருந்நைஷாபூரீ – தப்ஸீருத்தபரியின் விரிவுரை – நூல் 3:118)

## 8.3.தகிய்யாவின் வகைகள்

1.தடைசெய்யப்பட்ட தகிய்யா: ஒரு முஃமின் தன்னை அச்சுறுத்திற் கொண்டிருப்பவருக்கு முன்னிலையில் தகிய்யா செய்வதால் இஸ்லாத்தின் அடிப்படைக்கொள்கைகளும், அதன் தூண்களும் அழிந்து போகுமாக இருந்தால் அங்கு தகிய்யா அர்த்தமற்றதும், அனுமதிக்கப்படாததுமாகும். அந்நிலையில் தகிய்யா செய்வது ஹராமாகும்.

இமாம் ஹுசைன் அவர்கள் யசீதுக்கெதிராகப் போர்கொடிதூக்கி இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக தன்னுயிரை அர்ப்பணித்துக் கொண்டது இதற்கான சான்றாகும்.

2. ஒற்றுமைக்கான தகிய்யா: முஸ்லிம்களில் ஒரு பிரிவினர் தமது சமய நம்பிக்கைகளில் சிலதை மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்க முனைந்தால் அதன் மூலம் முழு முஸ்லிம் சமூகத்தினதும் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படும் என அஞ்சினால் அப்பிரிவினர் முழு சமூகத்தின் ஒற்றுமை கருதி சில விட்டுக் கொடுப்புகளைச் செய்வதாகும்.

தகிய்யா சான்றுகள்:தகிய்யாவை பறைசாற்றும் பல ஆதாரங்கள் இஸ்லாமிய மூலாதாரங்களில் காணப்பட்ட போதிலும் அதை ஷீஆக்களின் ஒரு கொள்கையாகவே எதிரிகளால் சித்தரிக்கப்படுகிறது. தகிய்யாவைக் கைக்கொண்டு வாழ்பவர்கள் ஷீஆக்கள் மாத்திரம்தான் எனக் கொள்ளப்பட்ட போதிலும் ஷீஆ அல்லாதோரும் அதனை தம் வாழ்வில் கடைப்பிடித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது. அதன் சில சான்றுகளை கீழே காண்போம்.

அல்குர்ஆனும், நபிவாழ்க்கையுமே முஸ்லிம்களின் வாழ்வியல் சட்டங்கள். இதனால் அவர்கள் தமது பொருளாதார, அரசியல், சமூக, தனிமனித விவகாரங்கள் அனைத்திலும் குர்ஆன் மற்றும் நபிவழிக்கு அமைவாக நடக்கவே கடமைப்பட்டுள்ளனர். ஆயினும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக ஒரு (காபிரான) பௌத்த அல்லது இந்து நாட்டில் வாழும்போது அந்நாட்டின் அரசியல் யாப்பு, சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்க பணிக்கப்படுகின்றனர். இந்நாட்டுச் சட்டதிட்டங்கள் அல்லாஹ்வை மறுப்பவர்களினால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்கள் என்ற போதிலும் அவைகளை முஸ்லிம்கள் கடைப்பிடித்து வாழ்வது தகிய்யாவின் ஒரு வடிவமாகும். (காபிரான) நாட்டின் தேசிய கீதம் இசைக்கப்படுகின்ற போது முஸ்லிம்களும் எழுந்து மரியாதை செய்கிறார்கள்.

(பெற்றோர், முதியோர், அந்தஸ்த்தில் உயர்ந்தோர் மற்றும் ஆசான்களுக்கு எழுந்து மரியாதை செய்வதை பித்அத்) என கருதுவோர் கூட இதற்கு விதிவிலக்கல்ல. இதற்கு தகிய்யா என்றே கூறவேண்டும்.

குஃப்ரில் வாழும் பெரும்பான்மைச் சமூகத்தாருக்கு அஞ்சி முஸ்லிம்கள் பல மார்க்க விடயங்களில் விட்டுக் கொடுப்புகளுடன் நடந்து கொள்கிறார்கள். இது தகிய்யாவின் சான்றுகளில் ஒன்றுதான். இஸ்லாமிய இயக்கங்கள் இப்புவியில் இஸ்லாமிய ஷரீஆவை நிலைநிறுத்துவதை தமது குறிக்கோளாக கொண்டு செயற்படுகின்றன. இதனை அவர்கள் ஊடகங்கள் ஊடாக பகிரங்க அறிவித்தல் மூலம் (பெரும்பான்மை சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் அஞ்சி)சொல்லாமலிருப்பது தகிய்யாவாகாதா?

முஸ்லிம்களில் ஒரு பிரிவினரின் பார்வையில் பித்அத்தாக பார்க்கப்படுகின்ற, கூட்டு துஆ, தல்கீன், வைபவங்களுக்கு பின் ஓதப்படும் ஸலவாத்து, ராதிபு மற்றும் அவ்ராது மஜலிஸுகள் போன்ற பல விடயங்களை வேறு ஒரு மத்ஹபினர் செய்வதைக் கண்ணுற்றும் அதனை அப்பிரிவினர் தடுத்து நிறுத்தாமல் ஒற்றுமை கருதி சகித்து, மௌனமாகி விடுகின்றனர். இந்நடைமுறைக்குப் பெயர் தகிய்யாவாகும்.

அரசாங்கத்தினால் பணிக்கப்படும் தேசிய மீலாத் நிகழ்ச்சியை அரச பாடசாலைகளில் அனுஷ்டிக்க வேண்டப்படும்போது அப்பாடசாலைகளில் கடமையாற்றும் மீலாத்விழாவை விரும்பாதோர் கூட அதனை அனுஷ்டிக்க தள்ளப்படுகின்றனர். இதன் பெயர் தகிய்யாவாகும்.

தொழுகைக்குப்பின் கூட்டுதுஆ ஓதுவதை மனதால் வெறுக்கும் சில பேஷ் இமாம்கள் பள்ளிவாயல் நிருவாகத்தின் அழுத்தத்தினால் அதை ஓதுகின்றனர்!. இதுவும் தகிய்யாவாகும் .“தொப்பி அணிவது முஸ்தஹப்போ, வாஜிபோ இல்லை. இதனால் அணியத்தேவையில்லை” என்றெல்லாம் கூறும் உலமாக்கள், மக்கள் அவர்களை மதிக்கமாட்டார்கள் என்றஞ்சி, எப்போதும் தொப்பியை அணிந்து கொள்வார்கள். அதைக் கழற்றவே மாட்டார்கள். இது ஒருவகை தகிய்யா. (ஷீஆக்களின் பார்வையில் தொப்பி, தலைப்பாகை போன்றவற்றை தலையில் அணிவது நபிகளார் காட்டித்தந்த முஸ்தஹப்பான ஓர் அமலாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

(சுனனுந் நபி, பக்:122 மற்றும் மஹஜ்ஜதுல் பைழா, பா:4, பக்:143)

தலைப்பிறையை தீர்மானிக்கும் விடயத்தில் தேசியப்பிறையை நம்பிக்கை கொண்டவர்கள் சர்வதேசப்பிறையை நம்பியவர்களுடன் முரண்படுகின்றனர். எனினும் சில காலங்களில் இவர்களில் ஒரு பிரிவினர் மறுபிரிவினரின் ஆதிக்கம் காரணமாக தமது தலைப்பிறை விடயத்தை அடக்கிவாசிக்க முற்படுவது தகிய்யாவின் ஒரு வடிவமாகும்.

எனவே ஷீஆக்கள் மாத்திரம் தகிய்யா செய்கிறார்கள் எனக் கொள்ளமுடியாது. முஸ்லிம் பிரிவுகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் தகிய்யா செய்கிறார்கள் என்பதை ஏற்றாகவேண்டும்.

**09.ஷீஆக்கள் அஹ்லுல்பைத்தினரின் பெயர்களின் பின் "அலைஹிஸ்ஸலாம்" எனச் சொல்வதேன்?**

இதுபற்றி ஷீஆ நம்பிக்கையை பார்க்கும் போது அலைஹிஸ்ஸலாம் என்பது அவர்மீது (அல்லாஹ்வுடைய) சாந்தி உண்டாகட்டும் என பிரார்த்தித்துக் கூறும் ஒரு வாக்கியம். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைச் சந்திக்கும் போது அஸ்ஸலாமு அலைக்கும் என கூறுவதைப்போன்ற ஒரு வாக்கியமே இது. எனினும் அலைஹிஸ்ஸலாம் எனும் வாக்கியம் ஒரு விஷேட அமைப்பைக் கொண்டு காணப்படுவதால் குறிப்பிட்ட சிலரின் பெயர்களைக் கூறும் போது மாத்திரமே அது பயன் படுத்தப்பட்டுள்ளது.

மலக்குகள், ரஸூல்மார்கள், நபிமார்கள், இமாம் மஹ்தி ஆகியோரே அவர்கள். இவர்களின் பெயர்களைக் கூறும்போது குறித்த வாக்கியத்தைக் கூறி அல்லாஹ்வின் சாந்தி அவர்மீது உண்டாகட்டும் என பிராத்திப்பது மாத்திரமில்லாமல் அவர்களின் பெயர்களை கண்ணியப் படுத்துவதாகவும் இவ்வாக்கியம் அமையப் பெற்றுள்ளது. எனினும் மலக்குகள், ரஸூல்மார்கள், நபிமார்களுக்கப்பால் இவ்வார்த்தை அஹ்லுல்பைத்தினருக்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது.

இமாம் புகாரி அவர்கள் தனது ஸஹீஹுல் புகாரியில் அஹ்லுல்பைத்தைச் சேர்ந்த இமாம் அலீ, அன்னை பாத்திமா, இமாம் ஹஸன், இமாம் ஹுசைன் ஆகியோரின் பெயர்களை மாத்திரம் இவ்வாக்கியத்துடன் இணைத்து பின்வருமாறு கூறியிருப்பது, இதற்குத் தெளிவான ஆதாரமாகும்.

عن علي عليه السلام قال كانت لي شارف ... فلما أردت أن أبني بفاطمة عليهاالسلام بنت رسول الله...

(புகாரி. கிதாபுல் பைஃ பாகம்:03 பக்கம்:78)

وطرق النبي (ص) باب فاطمة وعليا عليهماالسلام ليلة للصلاة

(புகாரி. பாகம்:02 பக்கம்:126)

رأيت النبى (ص) وكان الحسن بن علي عليهماالسلام يشبهه

(புகாரி. கிதாபுல் மனாகிபு பாகம்:04 பக்கம்:486)

عن علي بن الحسين علهماالسلام أخبره...

(புகாரி. கிதாபுத் தவ்ஹீத், பாபுல் முஷீஅதி வல்இராததி பாகம்:09 பக்கம்:418)

**10.முஹர்ரம் மாதத்தில் அனாசாரங்களா?**

ஷீஆக்கள் முஹர்ரம் மாதத்தில் தம் மேனிகளைக் கீறிக்கிழித்துக் கொள்ளும் காட்சிகள் சில ஊடகங்களில் காண்பிக்கப்படுகிறதே இச்செயலுக்கு மார்க்கத்தில் அனுமதியுண்டா?

நபிகளாரின் பேரர், சுவனத்து வாலிபர்களின் தலைவர் இமாம் ஹுசைன்(அலை) அவர்கள் கர்பலா களத்தில் கொலைசெய்யப்பட்ட நிகழ்வானது, அவரை நேசித்துப் பின்பற்றுகின்ற ஷீஆக்களிடம் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். இறைவனின் (42:23) கட்டளைக்கமையவும் நபிபெருமானாரின் பணிப்புரைக்கமையவும் நபிபெருமானாரின் குடும்பத்தினர் மீது அன்பு காட்டும்படி அவர்களது உம்மத்தினர் பணிக்கப்பட்டிருக்கையில், நபிகளாரின் உறவுகள் கர்பலா மண்ணில் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். பெருமானாரின் குடும்பத்தினர் மீது நேசம் கொள்வதற்குப் பதிலாக, அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட சோக நிகழ்வு ஷீஆக்களின் மனங்களை வாட்டி வதைக்கும் ஒரு வரலாற்று நிகழ்வாகும். இமாம் ஹுசைன்(அலை) அவர்கள் யசீத் போன்ற அநியாய ஆட்சியாளர்களுக் கெதிராக எழுந்து போராடியமை நபியவர்களின் சன்மார்கத்திற்குப் புத்துயிர் கொடுத்தது. அன்றைய அப்போராட்டம் இன்றும்கூட நினைவு கூறப்படுவதுடன், அது இன்று இஸ்லாத்தை மாசுபடுத்த யசீத் போன்று இஸ்லாமிய வேடம்தரித்தவர்களுக் கெதிராகப் போராடும் உணர்வைக் கொடுக்கக்கூடிய ஒரு முன்னுதாரணமாகப் பார்க்கப்பட வேண்டும் என்பது ஷீஆக்களின் நம்பிக்கையாகும்.

கர்பலா போராட்டத்தை முன்னுதாரணமாகக் கொண்டே ஈரான் இஸ்லாமியப்புரட்சி மற்றும் இஸ்ரேலுக் கெதிரான லெபனானிய ஹிஸ்புல்லாக்களின் போராட்டம் வெற்றி வாகை சூடின. இதனால் ஷீஆக்கள் கர்பலா நிகழ்வுக்கு மிக முக்கியத்துவமளித்து நினைவு கூறுகிறார்கள். இமாம் ஹுசைன்(அலை) இன்றுதான் கொல்லப்பட்டார் எனும் அளவு அந்நிகழ்வை தம் பிரதேசங்களில் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கிறார்கள்.

கர்பலா நிகழ்வு பற்றிக் கருத்தரங்குகள், மாநாடுகள் நடாத்துவார்கள், புத்தகங்கள், கற்றுரைகள், கவிதைகள் எழுதிவெளியிடுவார்கள். சொற்பொழிவு நிகழ்ச்சிகளை நடாத்தி பெருமானாரின் குடும்பத்தினருக்கு நிகழ்ந்த துயரங்களை நினைத்து கண்ணீர் வடிப்பார்கள். கறுப்பாடை அணிந்து முஹர்ரம் மாதத்தில் சோகம் அனுஷ்டிப்பார்கள்.

இது இவ்வாறிருக்க, ஷீஆக்களில் அதி தீவிர போக்குடைய சிலர் இந்தியா, பாக்கிஸ்தான் மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் சில மார்க்க விரோத செயல்களில் ஈடுபடுவதை காணக்கூடியதாக உள்ளது. அவர்கள் கர்பலா நிகழ்வை நினைத்து தம்மேனிகளை வருத்திக் கொள்கின்றனர். எல்லாப்பிரிவுகளிலும் தீவிர போக்குடையோர் காணப்படுவது போன்று ஷீஆக்களிலும் இத்தகையோர் உள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் இவர்கள் சிறு தொகையினராக உள்ளனர் என்பதும், (மேனிகளை கீறிக்கிழித்துக் கொள்ளும்) இவர்களின் செயல் ஷீஆ (முஜ்தஹிதுகள்) மார்க்க அறிஞர்களால் ஹராம் என ஃபத்வா கொடுக்கப்பட்டிருப்பதும், ஈரான் போன்ற நாடுகளில் இவை வன்மையாகக் கண்டிக்கப்பட்டு நடைமுறையில் இல்லாத ஒன்று என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நடைமுறையில் முஸ்லிம்கள் தப்பாக

நடக்கிறார்கள் என்பதற்காக இஸ்லாத்தைக் குறைகூற முடியுமா? என்ற கேள்வியைத்தான் இங்கும் கேட்க வேண்டியுள்ளது.

அஹ்லுல் சுன்னாக்களில் இருக்கின்ற பிரிவனரில் யார் உண்மையான அஹ்லுல் சுன்னா என்பதில் கருத்து முரண்பாடுகள் இருப்பதைப் போன்று, ஷீஆப்பிரிவினரிலும் இந்நிலையை உணராமல், ஷீஆக்களின் மீது பழிதீர்க்க முனையும் எதிரிகள் ஷீஆக்களைப்பற்றித் தவறாகப் பிரசாரம் செய்வதற்கு, (ஷீஆ மார்க்க மேதைகளால் தடைசெய்யப்பட்ட) இதனை ஒரு சாட்டையாகப் பாவிக்கின்றனர். ஊடகங்களில் இரத்தம் ஓட்டும் காட்சிகளைக் காண்பித்து ஷீஆக்களைப்பற்றி தவறான கருத்துக்களை மக்கள் மனதில் விதைக்க முனைகின்றனர். இச்செயல்களுக்கும் யதார்த்தமான ஷீஆயிசத்திற்கும் இடையில் மிக நீண்டதொரு இடைவெளியுள்ளது.

### 11. ஷீஆக்களின் (பாங்கு) அதான் வித்தியாசப்படுகிறதா?

அஹ்லுஸ்ஸுன்னாக்களைப் போன்று ஷீஆக்களும் தொழுகைக்கு முன் அதான் கூறுகிறார்கள். எனினும் அதில் ஹய்ய அலல் ஃபலாஹ் எனும் வாக்கியத்திற்குப் பின் حَيَّ عَلَي خَيْرِ الْعَمَلِ (ஹய்ய அலா கைரில் அமல்) எனும் வாக்கியத்தையும் சேர்ப்பதுண்டு. நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் அதானின் வடிவம் இவ்வாறே அமைந்திருந்ததாகவும், அவ்வடிவம் பின்னர் இரண்டாம் கலீபா அவர்களது காலத்தில் (சிறந்த அமல் தொழுகை எனக் கூறப்பட்டால் மக்கள் ஜிஹாதை மதிக்க மாட்டார்கள் என்பதற்காக) அவ்வாக்கியம் நீக்கப்பட்டதாகவும் வரலாற்றில் குறிப்பிடப்படுவதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அல்லாமா கூஷ்ஜி தனது “ஷரஹு தஜ்ரீதுல் இஃதிகாத்” எனும் நூலில் இவ்விடயத்தைக் குறிப்பிடுகிறார்.

கன்சுல் உம்மால் எனும் ஹதீஸ் கிரந்தத்தில் நாயகமவர்களுடைய காலத்தில் அதானில் கூறப்படாத الصلاة خير من النوم எனும் வாசகம் இரண்டாம் கலீபாவினால் அதானுடன் சேர்க்கப்பட்டது எனப் பதியப்பட்டுள்ளது. இஸ்லாத்தில் கூறப்படுகின்ற அத்தனை விடயங்களும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆதாரங்களை அடிப்படையாக கொண்டமைதல் வேண்டும். இவ்வாறின்றி இஸ்லாத்தில் புகுத்தப்படும் எவ்விடயமும் பித்அத்தாகும். எனவே தீனின் எக்காரியத்திலும் ஒருவர் தனது சுய சிந்தனைக்கேற்ப கூட்டல் குறைத்தல் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

ஆயினும் ஷீஆக்கள் அதான் கூறும்போது அல்லாஹ், முஹம்மத் எனும் இருசாட்சியங்களையும் கூறிவிட்டு اشهد أن عليا ولى الله (நிச்சயமாக அலி அல்லாஹ்வின் வலீ என சாட்சியம் கூறுகிறேன்) எனும் வாக்கியத்தை சேர்த்துக் கூறுகின்றனர். இரு ஷஹாதத்துகளுக்குப் பின் கூறப்படும் இவ்வாக்கியம் ஷீஆக்களின் ஒரு சுலோகமாகும். இதற்கான பின்னணி யாதெனில் வரலாறு நெடுகிலும் உமையா, அப்பாசியர்களால் இம்சிக்கப்பட்டு வந்தவர்கள் அஹ்லுல்பைத்தினர். அஹ்லுல்பைத்தினரில் இமாம்

அலியவர்கள் உமையாக்களின் மிம்பர்களில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சபிக்கப்பட்டுவந்தார். அவரின் மீது அதீத பகைமை கொண்டிருந்த உமையாக்கள் அவரின் வரலாற்றுத் தடயங்களை அழித் தொழிக்க முனைந்தனர். இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்பட்ட அக்கால ஷீஆக்களாகிய அஹ்லுல்பைத் பிரியர்கள் அலியவர்களின் இமாமத்தை சாட்சியம் கூறுதலை ஒரு சுலோகமாக மாத்திரம் பாங்கில் இணைத்துக் கொண்டனர்.

இதனால் இவ்வாக்கியத்தை அதானிலுள்ள ஒரு பகுதியாகவோ அல்லது வாஜிபான வாசகமென்றோ கருதுவதில்லை. அவ்வாறு கருதுவதும் ஹராமாகும். இவ்வாறான நியாயமான நோக்கத்திற்காக கூறப்படும் இவ்வாக்கியம் பித்அத்தாகக் கருதப்படமாட்டாது என்பது ஷீஆ நம்பிக்கையாகும்.

**12.ஈரானில் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் புறக்கணிக்கப்படுகின்றனரா?**

அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமாஅத் சகோதரர்களின் பகைமையுணர்வைத் ஷீஆக்களுக்கெதிராகத் தூண்டி விடுவதற்காக இப்படியான பிரச்சாரமொன்று முன்னெடுக்கப்படுகிறது. அதாவது "ஈரானில் வாழும் சுன்னிகள் ஷீஆக்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு அவர்களின் முழு சுதந்திரமும் பறிக்கப்பட்டு, தமது மார்க்கக் கடமைகளைச் செய்வதற்கு பள்ளிவாயல்களின்றி புறக்கணிக்கப் படுகின்றார்கள். ஈரானிலுள்ள யூதர்கள் கிறிஸ்த்துவர்களுக்கிருக்கும் சுதந்திரம் கூட அவர்களுக்கில்லை" என்பது இப்பிரசாரத்தின் ஒரு பகுதியாகும்.

இப்பிரசாரமும் இஸ்லாத்தின் எதிரிகளால் முன்னெடுக்கப்படும் பொய்ப் பிரசாரங்களில் ஒன்று என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஏனெனில் ஈரான் இஸ்லாமியக் குடியரசானது பல்லின மக்களும் முழு சுதந்திரம் பெற்று வாழும் நாடுகளில் முதன்மை இடத்தைக் கொண்டது என்றால் அதுமிகையாகாது. அந்நாட்டு விவகாரங்களை எதிரிகளின் ஊடகங்களிலல்லாது, நேரடியாகக் காணும் எவரும் இவ்வுண்மையை ஏற்றுக் கொள்வர். சுன்னி முஸ்லிம்களுக்கு அரபு நாடுகளில் வழங்கப்படாத அளவு மதச்சுதந்திரமும், கருத்துச்சுதந்திரமும் ஈரானில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய ஈரானிய பாராளுமன்றத்தில் 20 சுன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். பதினொரு ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிவாயல்கள் சீஸ்த்தான், பலூச்சிஸ்தான், குர்திஸ்தான் போன்ற சுன்னிப் பிரதேசங்களில் உள்ளன. பல இஸ்லாமிய கலாபீடங்களும், அரபு மதரஸாக்களும் அப்பிரதேசங்களில் காணப்படுகின்றன. கனிசமான சுன்னி மாணவர்கள் ஈரானியப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுகின்றனர். ஈரானின் வளர்ச்சிக்கும் முன்னேற்றங்களுக்கும் உதவி ஒத்தாசை வழங்கும் ஈரானிய சுன்னி முஸ்லிம்கள், ஈரானிய ஷீஆ முஸ்லிம்களுடன் இறுக்கமான ஒற்றுமையுடன் வாழுகின்ற முறைமை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இது இவ்வாறிருக்க இஸ்லாத்தினதும் ஈரானினதும் எதிரிகள் ஈரானுக்குள் ஊடுருவல் செய்ய ஈரானின் சுன்னி பிரதேசங்களை தளமாகப் பயன்படுத்துகின்றனர். அல்கைதா, தாலிபான், ஜூன்துல்லாஹ் போன்ற பயங்கரவாத அமைப்புகளின் நடமாட்டங்கள் அப்பிரதேசங்கள் ஊடாகவே இடம்பெறுகின்றன. அரபு நாட்டுப் பணங்களுக்கு சோரம் போகும் சில கும்பல்கள் ஈரானின் வளர்ச்சியையும், ஷீயா சுன்னா ஒற்றுமையையும் சிதைப்பதற்கு பல வகையான முயற்சிகளை அங்கு மேற்கொள்கின்றன.

இவ்விடயத்தில் விழிப்பாக இருக்கும் ஈரானிய அரசும் ஈரானிய சுன்னி முஸ்லிம்களும் அந்நாசகார சதிகளை முறியடிப்பதற்கு ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றனர். ஈரான் இஸ்லாமியக்குடியரசு, இஸ்லாத்தின் யதார்த்த பூர்வமான ஒற்றுமையைக் கடைப்பிடிக்கும் ஒரு முன்னுதாரண நாடாகத் திகழ வேண்டும் என்பதற்காக பலதியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் செய்து வருகின்றது. இவ்வொற்றுமையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புரட்சிக்காலத்திலும், ஈராக்கியப் போர்காலத்திலும் பல ஷீஆ, சுன்னா ஷுஹதாக்கள் தங்கள் உயிர்களை இஸ்லாமியக் குடியரசுக்காக தியாகம் செய்துள்ளனர்.

இப்பகுதிகளிலிருந்து கொண்டு நாசகார செயல்களில் ஈடுபடுவோரை ஈரானிய அரசு கைது செய்து தண்டனை வழங்கும் போது அதனை ஈரானின் எதிரிகள் சுன்னிகளை அடக்கி ஒடுக்குவதாகப் பொய்ப் பிரசாரம் செய்து பூதாகரப்படுத்திக் காட்டுவதில் மிகவும் சிரத்தைக் காட்டுகின்றனர்.

சவூதி அரேபியாவின் மன்னர் காலித் பல்கலைக்கழகத்தில் உதவிப்பேராசிரியராகக் கடமையாற்றுவதாகக் கூறும் இலங்கை நாட்டைச்சேர்ந்த ஒருவர் ஈரானைப்பற்றியும், ஷீஆக்களைப்பற்றியும், ஈரானில் சுன்னாக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் பற்றியும் உண்மைக்குப் புறம்பான பல தகவல்களை கூறியிருந்தார்.

இத்தகவல்களை இணையத்தளத்தில் google ஊடாக search செய்து பார்த்தால் அறிந்து கொள்ளலாம் என அறிவுரை கூறியுள்ளார். அரபுமன்னர்களின் தயவில் வாழும் எவரும் ஈரானுக்கு ஆதரவாகவோ, ஷீஆவுக்கு ஆதரவாகவோ நிச்சயம் பேசமாட்டார் என்பது உறுதி. இவரின் கருத்தைப் பொறுத்தவரையில் இன்று google இணையத்தளங்களை நிருவகிப்பவர்களும், அவைகளைப் பராமரிப்பவர்களும் இஸ்லாத்தின் எதிரிகளும், அவர்களின் வரிசையில் உள்ளவர்களும்தான். இவர்களின் கருத்துக்களை நம்புமாறு குறித்த உதவிப்பேராசிரியர் அழைப்பு விடுப்பது மிகவும் ஆச்சரியமானது!. ஒரு கருத்தை சரியாகப்புரிந்து கொள்வது,அக்கருத்திக்குரியவர்களை முறையாக அணுகி தீர விசாரித்தறிவதில்தான் தங்கியுள்ளதல்லவா?.

## 13.ஷீயாக்கள் ஆயிஷா நாயகி மீது அவதூறு கூறுகின்றனரா?

ஷீஆ விரோத போக்குடையோரின் பிரசாரங்களில் முக்கியமானதொன்றுதான் “ஷீயாக்கள் ஆயிஷா நாயகியை தூற்றுவதென்பது”. ஷீயாக்கள் ஆயிஷா நாயகியை தூசிப்பதாகவும் (நஊதுபில்லாஹி மின்ஹா) விபச்சாரியென அவதூறு கூறுவதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது. அன்னை ஆயிஷா பற்றி ஷீயாக்களின் நம்பிக்கையை நோக்கும் போது ஷீயாக்களின் தலைசிறந்த அறிஞர்கள் ஆயிஷா நாயகியை அவமதிப்பதற்கு எந்த அனுமதியையும் வழங்கவில்லையென்பதையும் அன்னாரின் மரியாதையைப் பேணுவது கடமையென கூறியுள்ளதையுமே காணலாம்.

ஷீஆக்களின் தலைசிறந்த அறிஞர்களுள் ஒருவரான சுல்தானுல் வாயிழீன் ஷீராஸீ கூறுகின்றார் “அன்னையர்களான ஆயிஷா,ஹப்ஸா உட்பட நபிகளாரின் மனைவியரை தூசிப்பதோ அவர்கள்மீது வீண்பழிசுமத்துவதோ ஷீயா நம்பிக்கையாகாது. இச்செயலில் ஈடுபடுபவர் காபிர், இறைவிரோதி என்பதுடன் அவர் சபிக்கப்பட்டவராவார். அவரது இரத்தமும் பொருளும் ஹலாலாகும். இத்தீய செயலில் ஈடுபடுவதானது இறைத்தூதரின் உயரிய அந்தஸ்தை அவமரியாதைக்குட்படுத்தியதாக அமையுமென்பதே எமது நம்பிக்கையாகும்”;; (பீஷாவர் இரவுகள் பக்கம்: 177)

ஷீயஆக்களின் பிரபல தப்ஸீர் நூலான அல்மீசானின் ஆசிரியரும் இறையியல் மற்றும் மெய்யியல் அறிஞருமான அல்லாமா தபாதபாயீ இவ்வாறு கூறுகின்றார் “நபியவர்களின் மனைவியர் விசுவாசிகளின் தாய்மார்களாக உள்ளனர் என்பது ஒரு மார்க்க (ஷரீஆ) சட்டமாகும். இது நபியவர்களுக்குரிய தனிச்சிறப்பு. அதாவது ஒரு முஸ்லிம் தனது தாய்க்கு மரியாதை செய்வது கடமையாகும். அதேநேரத்தில் தனது தாயை மணந்து கொள்வதும் ஹராமாகும். இதுபோன்றே நபியவர்களின் மனைவியருக்கு மரியாதை செய்வதும் கடமை. அவர்களை மணமுடிப்பதும் ஹராம். (அல்மீசான் 16:414)

ஷீயாக்களின் பிரபல முஜ்தஹிதுகளில் ஒருவரான ஆயதுல்லாஹ் மகாரிம்ஷீராசீ கூறுகின்றார்: “நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து முஃமின்களினதும் ஆத்மீக தந்தையாக இருப்பது போன்று அவர்களின் மனைவிமார்களும் முஃமின்களின் ஆத்மீக தாய்மார்களாவர். இக்கருத்தானது நபிகளாரின் மனைவியரை மதித்து நடப்பதற்கும் அவர்களை மணமுடிக்க இயலாது என்பதோடு மாத்திரமே உள்ளது. வாரிசுரிமை மற்றும் இவர்களின் பெண் பிள்ளைகளை மணத்தல் போன்றவை இதிலிருந்து விதிவிலக்குப் பெறும்.

(தப்சீர் அல் அம்துல் பா:14 பக்:204)

ஷீயாக்களின் தலைசிறந்த முஃப்தியும் முஜ்தஹிதுமானஆயதுல்லாஹ் ஸீஸ்தானி கூறுகின்றார்: “சஹாபாக்களையோ நபியவர்களின் மனைவியரையோ ஏசுவது

அஹ்லுல்பைத் இமாம்களின் நடத்தைக்கு மாற்றமான செயலாகும்" (அல்ஃபதாவா–அலிஸீஸ்தானி)

ஈரான் இஸ்லாமியக்குடியரசின் ஆன்மீக தலைவர் ஆயதுல்லாஹ் செய்யித் அலி காமெனயீ: "அஹ்லுஸ்சுன்னா சகோதரர்களின் புனிதங்களை இழிவுபடுத்துவதும், நபிகளாரின் மனைவியரை குறைகூறுவதும் ஹராமாகும்.''

ஆயிஷா நாயகி பற்றிய குற்றச்சாட்டு தொடர்பில் நாம் சமகால ஷீயா அறிஞர்கள் பலரை அனுகினோம். அவர்களின் தெளிவான நிலைப்பாட்டை பின்வருமாறு கண்டறியக்கூடிதாக இருந்தது. "ஆயிஷா நாயகியவர்களின் வாழ்க்கை வரலாற்றில் தமது காலத்து கலீபா அலியை எதிர்த்து நடாத்திய ஜமல்(ஒட்டகை)யுத்தம், நபிகளாரின் மனைவியரை ஜாஹிலிய கால பெண்கள் போன்று வெளியில் நடமாடாமல் வீடுகளுக்குள் தங்கியிருக்கும்படி இறங்கிய (33:33) இறைகட்டளையை தாண்டிச்சென்றமை, நபிகளாரின் இரகசியங்களைப் பேணாமல் அவர்களை இன்னல்களுக்குட்படுத்திய போது இறைவனே சூரா தஹ்ரீமை(66) இறக்கி அதில் فقد صغت قلوبكما (ஆயிஷா ஹப்ஸா ஆகிய) உங்களிருவரினதும் உள்ளங்கள் (உண்மையிலிருந்து)சாய்ந்து விட்டன (66:03) என்று இறைவனே சாடிக் கூறுமளவு பல விமர்சனத்திற்குரிய விடயங்கள் ஆயிஷா நாயகி தொடர்பில் காணப்பட்ட போதிலும் ஆயிஷா நாயகியவர்கள் கற்புத்தூய்மை பெற்றவராகவே இருந்தார். அவர் நபியவர்களுடன் வாழ்ந்த காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் பின்னரும் அவர் தனது கற்பொழுக்கத்தை இழக்கவில்லை" என்பதாகும்.

ஆயிஷா நாயகி விடயத்தில் விபச்சாரம் என்ற வார்த்தையைக்கூட பிரயோகிப்பது மிக அசிங்கமாகவும் சங்கடமாகவும் இருக்கின்ற இதேவேளை, ஷீயாக்கள் ஆயிஷா நாயகியை விபச்சாரி என்கின்றனர் என்று ஷீயாக்கள் மீது சரமாரியாக இப்பழி சுமத்தப்படுவதை கண்ணுற்ற நாம் இக்கதையை ஆராய்ந்தறிய விரும்பினோம்.

### 13.1.புனையப்பட்ட இஃப்க் கதையும் அதை பதிவு செய்துள்ள நூற்களும்

சுன்னத்வல்ஜமாஅத் வரலாற்று நூற்களில் இப்னு ஹிஷாம் மற்றும் இப்னு இஸ்ஹாக் ஆகியோரின் பதிவுகளுக்கமைய உர்வா பின் சுபைர், சயீத் பின் முசய்யப், அல்கமா பின் வக்காஸ், உபைதுல்லாஹ் பின் உத்பா போன்ற அறிவிப்பாளர்கள் வாயிலாக அன்னை ஆயிஷா நாயகி கூறியதாக பின்வரும் இஃப்க் என பிரபலமான சம்பவம் பதிவாகியுள்ளது.

அன்னை ஆயிஷா கூறுகின்றார் "நாயகமவர்கள் எப்போதாவது பிரயாணம் மேற்கொள்ளவிரும்பினால் தனது மனைவியர் ஒருவரை அழைத்துச்செல்லவது வழக்கம். இதற்காக மனைவியரில் ஒருவரை குலுக்கல் மூலம் தேர்ந்தெடுப்பார்கள். ''பனீமுஸ்தலக'' யுத்தத்திற்காக பிரயாண ஏற்பாடுகளைச் செய்த நபியவர்கள் தன்னுடன்

அழைத்துச்செல்வதற்காக எனது பெயரை குலுக்கல் முறையில் தெரிவுசெய்தார்கள். என்னை ஒட்டகையின் பல்லாக்கில் ஏற்றி அப்பிரயாணத்தை மேற்கொண்டார்கள். குறித்த யுத்தம் முடிவுற்று திரும்பிக் கொண்டிருக்கும் வேளை மதீனா நகரை அண்மித்த இடமொன்றில் ஓய்வெடுக்க நேர்ந்தது. குறித்த நாளின் முதல் பகுதி இரவை கழித்த நபியவர்கள் பிரயாணத்தை தொடருமாறு கட்டளை பிறப்பித்தார்கள். அந்நேரத்தில் நான் எனது சுயதேவையை நிறைவேற்றுவதற்காக பல்லாக்கைவிட்டிறங்கி, சற்று தூரத்திற்கு சென்றுவிட்டேன். போகும் போது எனது கழுத்தில் "ழபார்" வகை மணிகளைக் கோர்த்த கழுத்தணி (மாலை) இருந்தது. நான் எனது தேவையை நிவர்த்தி செய்து விட்டு ஓய்விடத்தை வந்தடைந்தேன். நபிகளாரும் தோழர்களும் பிரயாணத்தைத் தொடர தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

பல்லாக்கில் ஏறிய நான் எனது கழுத்தை அவதானித்த போது அணிந்திருந்த மாலை தொலைந்திருப்பதைக்கண்டேன். அதனைத் தேடி மலங்கழிக்கச்சென்ற இடத்தை நோக்கி விரைந்தேன். அதனை கண்டெடுத்துக் கொண்டு மீண்டுவந்தபோது நபிகளாரும் தோழர்களும் அங்கிருந்து சென்றிருப்பதைக் கண்டேன். நான் பல்லாக்கிலிருப்பதாக நினைத்துக் கொண்ட அவர்கள் என்னை விட்டு விட்டு சென்றுவிட்டார்கள். அங்கு எவரும் இருக்க வில்லை. என்னைத் தேடி மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கையில் ஆடையால் போர்த்திக் கொண்டு அவ்விடத்திலேயே இருந்து கொண்டேன். என்னைப்போன்று படையிலிருந்து விடுபட்ட ஸப்வான் பின் முஅத்தல் நானிருக்கும் இடத்தை வந்தடைந்தார். ஆச்சரியப்பட்டு "நாயகத்தின் துணைவியா? ஏன் நீங்கள் தனித்துவிட்டீர்?" எனக் கேட்க நான் எப்பதிலும் கூறாமல் மௌனமாக இருந்தேன்.

அவர் ஒட்டகையொன்றை என்னருகில் கொண்டு வந்தார். அவர் தூரத்தில் நிற்க, நான் அதில் ஏறிக்கொண்டேன். விடுபட்ட நாங்களிருவரும் நபியவர்களும் தோழர்களும் சென்றுகொண்டிருக்கும் இடத்தை வந்தடைந்தோம். அங்கு பொய்யர்கள் என் மீது (சப்வானுடன் தகாத உறவு கொண்டதாக)அபாண்டத்தை கட்டவிழ்த்து விட்டிருப்பதைக் கண்டேன். இச்செய்தியால் படைக்குள் பரபரப்பு ஏற்படலாயிற்று.

பின்னர் மதீனாவை வந்தடைந்தோம். எனக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டுவிட்டது. எனது விடயத்தில் சிலர் கூறிய அவதூறைப்பற்றி அல்லாஹ்வின் தூதரும் எனது பெற்றோரும் எதுவும் கூறவில்லை. எனினும் அல்லாஹ்வின் தூதரவர்கள் என்மீது முன்னர் கொண்டிருந்த அளவு எந்த அன்பையும் காட்டவில்லை. நான் முன்பு நோயுற்றால் என்னை தொடராக சுகம் விசாரிப்பார்கள். ஆனால் இப்போது அவ்வாறல்ல. "என்னை எனது தாயாரின் வீட்டுக்குச் செல்ல அனுமதியுங்கள் அங்கு எனது தாய் என்னை பார்த்துக்கொள்வார்". என நான் கேட்க, அதற்கு உடனே அனுமதித்தார்கள். நான் எனது தாயாரின் வீட்டுக்குச் சென்றேன். அங்கிருக்கும் காலமெல்லாம் மக்கள் என்னைப்பற்றி

என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நான் யாதும் தெரியாதிருந்தேன். சுமார் இருபது நாட்களின் பின் நான் சுகமானேன்.

பின்னர் ஒரு நாள் உம்மு முசத்தஹை சந்தித்தேன். என்னைப்பற்றி மக்கள் பேசிக்கொள்வதை அவர் கூற எனது ஈரல் பிழந்துவிடுமளவு நான் அழுதேன்.
எனது விடயம் தொடர்பாக அவ்ஸ், ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த இருவருக்கு மத்தியில் சன்டை மூழ்கும் நிலைகூட உருவானது. பின்னர் நபியவர்கள் எனது விடயம் தொடர்பாக அலி பின் அபுதாலிப் மற்றும் உசாமா பின் சைத் ஆகியோருடன் ஆலோசனை நடாத்தினார்கள். "அல்லாஹ்வின் தூதரே! நீங்களும் நாங்களும் உங்கள் மனைவியிடமிருந்து இதுவரை யாதொரு தவறையும் காணவில்லை, மக்கள் பிழையாக பேசிக் கொள்கின்றார்கள்" என உசாமா கூற, "நாயகமே! பெண்கள் அதிகமாக உள்ளனர். நீங்கள் வேறொரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள்" என்று அலி ஆலோசனை கூறினார். இவ்வாறு நாட்கள் சென்று கொண்டிருக்க திடீரென் ஒருநாள் நபியவர்கள் என்னைப்பார்த்து

"ஆயிஷாவே! நன்மாராயம்! நீர் சுத்தவாளி என்பதை அல்லாஹ் எனக்கு அறிவித்துவிட்டான்" என்றார்கள். இதனைக் கேட்ட நான் "அல்லாஹ்வுக்கு நன்றி" என்றேன். பின்னர் நபியவர்கள் இது தொடர்பாக இறக்கப்பட்ட (24வது அத்தியாயத்தின்) வசனங்களை மக்களுக்கு ஓதிக்காண்பித்துவிட்டு, என் விடயத்தில் அப்பட்டமாக பழிசுமத்திய முஸத்தஹ் பின் அதாதா, ஹஸ்ஸான் பின் தாபித், ஹம்னா பின் ஜஹ்ஷ் ஆகியோருக்கு ''ஹத்'' தண்டணை வழங்குமாறு கட்டளையிட்டார்கள்"

இப்னு இஸ்ஹாக்கின் பதிவுக்கமைய ஸப்வான் பின் முஅத்தல் ஆண்மையற்றவர் என்றும் அவர் ஒரு போரில் ஷஹீதானார் எனவும் காணப்படுகிறது. புனையப்பட்ட இக்கதையில் காணாமல் போன அன்னை ஆயிஷா அவர்கள் ஸப்வானுடன் தகாத தொடர்பு கொண்டிருந்ததாக வதந்தி பரப்பப்பட்டது.
ஆயிஷா நாயகியின் இச்செயலால் சினமுற்ற நபியவர்கள் நாயகியை ஒருமாதகாலமாக வெறுத்திருந்தார்கள்' என்றும் "ஆயிஷா நாயகியை விட்டும் ஒதுங்கி வாழுமாறு" அலி பின் அபீதாலிப் அவர்கள் ஆலோசனை கூறியதாகவும் இக்கதை நீண்டு செல்கிறது.

### 13.2.இஃப்க் கதை பற்றிய ஷீயா தரப்பு வாதங்கள்

ஆயிஷா நாயகியை முறைகேடான ஒரு சம்பவத்துடன் தொடர்பு படுத்தும் குறித்த கதை சுமார் பதினைந்திற்கு மேற்பட்ட அறிவிப்புகள் மூலம் அஹ்லுஸ்சுன்னா வரலாற்று மற்றும் ஹதீஸ் கிரந்தங்களில் காணப்படுகின்றன. இக்கிரந்தங்கள் எதுவும் ஷீயாக்களின் கிரந்தங்கள் அல்ல என்பது விந்தையிலும் விந்தையாகும். ஆயிஷா நாயகியை பற்றிய இந்த அவதூறைக் கூறும் நூற்கள் எதுவும் ஷீயா நூல்கள் அல்ல, ஷீயாக்கள் இந்த

அவதூரைக் கூறவில்லை என்பதை (மனச்சாட்சி கொண்ட)பிரபல சுன்னி அறிஞரான இமாம் ஆலூசீ கூறுகின்றார்:

ونسب للشيعة قذف عائشة رضي الله تعالي عنها بما براها الله تعالي منه وهم ينكرون ذلك اشد الانكار وليس في كتبهم المعول عليها عندهم عين منه ولا اثر اصلا.

“ஷீயாக்கள் ஆயிஷா நாயகியைப் பற்றி அவதூறு கூறுவதாக சொல்லப்படும் குற்றச்சாட்டை அவர்கள் வன்மையாக மறுக்கின்றார்கள். இந்த அவதூறு பற்றிய எந்தவொரு சிறிய தடயமும் அவர்களின் நம்பத்தனமான நூற்களில் காணப்படவில்லை”.

(தப்சீர் றூஹுல் மஆனி. இமாம் ஆலூசீ சூரா நூர் 16 வது அத்தியத்தின் கீழ்)

நபியவர்களின் மனைவியர் ஒருவரின் விடயத்தில் அவதூறு கூறப்பட்டதை அடுத்து, அந்த அவதூறு பொய்யானது என்று மறுத்துரைக்கும் குர்ஆனின் 24வது அத்தியாயம் இறங்கியது. இந்த அத்தியாயத்தில் கூறப்படும் பெண்மணி பெருமனார் (ஸல்) அவர்களின் மனைவியரான மாரியதுல் கிப்திய்யா என்பது ஷீயாதரப்பு கருத்தாகும். நபியவர்களின் ஆண்குளந்தை ஹஸரத் இப்ராஹீம் மரணித்த போது ஸல்லல்லலாஹு அலைஹி வஆலிவசல்லம் அவர்கள் கவலையுற்றார்கள். இதனைக்கண்ணுற்ற ஒருவர் நபியவர்களைப் பார்த்து “நீங்கள் எதற்காக கவலைப்படுகின்றீர்?. அது உங்களின் குளந்தையல்லவே! அது ஜுரைஹ் என்பவருக்கு பிறந்த பிள்ளையல்லவா?” எனக்கூறி மாரியா நாயகி மீது பழி சுமத்தினார்.

இந்த பழியை மறுத்துரைத்து குறித்த வசனங்கள் இறங்கியுள்ளதாக ஷீஆ தரப்பு தப்ஸீர் வியாக்கியானம் காணப்படுகிறது. (பார்க்க: தப்ஸீருஸ்ஸாபீ பா:3 பக்:424, பிஹாருல் அன்வார் பா:22 பக்:153, தப்சீர் அல் கும்மி பா:2 பக்:99, தப்சீரல் மீசான் பா:15 பக்:104)

உலகத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட நபியவர்கள், ஷீயாக்களின் பார்வையில் பிழை, தவறிழைக்காத்தன்மை கொண்ட பரிசுத்தம் பெற்ற மஃஸூமாவார்கள். குறித்த சம்பவத்தில் எந்த விதமான ஆதாரமுமின்றி அன்னை ஆயிஷாவை வெறுத்து ஒரு மாதகாலமாக பிரிந்திருப்பதென்பது அவர்களின் கருணைக்கும் இஸ்மத் பரிசுத்த தன்மைக்கும் முரணானது.

இமாம் அலி அவர்களும் இக்கற்பனைக்கதையில் காட்சிதரும் ஒருவர். “ஆயிஷா நாயகியை விட்டு விட்டு வேறொரு பெண்ணை மணந்து கொள்ள” நபியவர்களுக்கு ஆலோசனை கூறியதாக அவர்கள் மீது பழி சுமத்தப்படுகிறது. ஷீயாக்களின் முதல் இமாமான இமாம் அலி அவர்களும் ஒரு மஃஸூமாவார். உறுதிப்படுத்தப்படாத ஒரு காட்சியை வைத்து நபிகளாருக்கு ஆலோசனை சொல்லுவதென்பது ஷீஆ நம்பிக்கைக்கு மாற்றமானது.

எனவே ஆயிஷா நாயகி பற்றி ஷீயாக்கள் அவதூறு கூறுவதென்ற குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றதும் அங்கீகரிக்க முடியாததுமாகும். பெயர்,முகவரியற்ற ஒருவர் தன்னை ஷீயா என கூறிக்கொண்டு ஆயிஷா நாயகியையும் சஹாபாக்களையும் தூற்றினால் அது ஒட்டுமொத்த ஷீயாக்களின் நம்பிக்கையாகவோ கருத்தாகவோ கொள்ளமுடியாது.
ஷீயாக்களின் எக்கொள்கையையும் அவர்களின் பிரபல்யமிக்க அறிஞர்கள், அவர்கள் அங்கீகரிக்கும் மூல நூற்கள் போன்றவற்றினூடாக அறிய முயற்சிப்பதே சிறந்த அணுகுமுறையாகும்.

## 14.ஷீயாக்கள் ஈரானில் கஃபா கட்டி ஹஜ் செய்கின்றார்களா?

“ஷீயாக்கள் ஈரானிலே ஹஜ் செய்கின்றார்கள். அங்கு கஃபா கட்டி அங்கேயே ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள் அவர்கள் மக்கா செல்வதில்லை” என்று மதீனா பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற மதனீ ஒருவர் நமது நாட்டிலுள்ள பள்ளிவாயலொன்றில் உரைநிகழ்த்திக் கொண்டிருந்தார். இதற்குச் சான்றாக சில புகைப்படங்களை அவர் காட்சிப்படுத்தினார். இதைக்கண்ணுற்ற நாம் இம்மௌலவியின் அறிவுத்தரத்தையும் அவர் மேற்கொண்டு சொல்லும் விடயங்களின் உண்மைத் தன்மையையும் ஒருமுறை சிந்தித்துப்பார்த்து மிகவும் கவலையடைந்தோம். இறைவனாலன்றி இச்சமூகத்தைக் காப்பாற்ற முடியாது என்றுமே எண்ணிக்கொண்டோம்.

மேற்குறித்த மதனி ஈரானில் கண்ட காட்சி உண்மைதான். ஆனால் அதனை அவர் சரியாகப்புரியாமல் உள்ளார் அல்லது விடயம் தெரிந்திருந்தும் ஏதோ சில காரணங்களுக்காக இவ்வாறு பேச பணிக்கப்பட்டிருக்கிறார் என்றும் எண்ணத்தோன்றியது. ஷீயாக்களும் ஏனைய முஸ்லிம்களைப்போன்று ஹஜ் கடமையைக் கொண்டவர்கள்தான். இதனை நிறைவேற்ற புனித மக்காவுக்குத்தான் செல்லவேண்டும் என்பதும் அவர்களின் நம்பிக்கைதான்.

இதன் காரணமாக அதிகபட்சம் ஹாஜிகள் ஹஜ்ஜிக்காக புனித மக்கா செல்லும் நாடுகளில் ஈரானும் ஒன்று. வருடா வருடம் இலட்சக்கணக்கில் ஈரானிலிருந்து ஷீயாக்கள் ஹஜ்ஜிக்காக சவுதிஅரேபியா செல்வதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆனால், ஈரானிய ஷீயாக்கள் தமது ஹஜ் கடமையை சரியாகவும் முறையாகவும் செய்வதற்காக மக்கா செல்லுமுன், மாதிரி ஹஜ் ஒன்றை தமது நாட்டில் செய்து பார்த்து, அதற்கான முழு பயிற்சியையும் எடுத்துக்கொள்வது வழக்கம்.

இதற்காக பெரியதொரு மைதானத்தில் மாதிரி கஃபாவை அமைத்து ஆலிம்களின் முழு பயிற்சியையும் பெற்றுக் கொள்வார்கள். (ஒரு தொகை பணத்தை செலவழித்து அந்த இபாதத் வழிபாட்டின் எந்த நுணுக்க, நுட்பங்களையும் இழந்து விடக் கூடாது என்பதற்காக) அதன் பின்னரே அவர்கள் புனித மக்கா நோக்கி செல்கின்றார்கள். இதனை

படம்பிடித்து ஷீயாக்கள் ஈரானிலே ஹஜ் செய்கின்றார்கள் என்று கூறுவது யாரை ஏமாற்றுவதற்காக?. இதைப்போன்றுதான் இத்தகைய ஆலிம்களின் ஏனைய கருத்துக்களையும் தீரவிசாரித்தே தெளிவு காணவேண்டியுள்ளது.

மேலே குறிப்பிட்டப்பட்ட ஐயங்களைப்போன்று எவ்வித அடிப்படைகளுமற்ற இன்னும் பல ஐயங்கள் ஷீயாக்கள் தொடர்பாக முன்வைக்கப்படுகின்றன. அவற்றின் தரத்தை கருதி அவற்றிக்கு பதிலளிப்பதை தவிர்த்துக் கொள்கிறோம்.

## ஷீஆக்கள் பற்றி சுன்னிஅறிஞர்கள்

### ஷெய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி

(அல்–அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் முன்னால் விரிவுரையாளர்)

ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி தனது “கய்ஃப நப்ஹமு அல் இஸ்லாம்” (நாம் எவ்வாறு இஸ்லாத்தை விளங்கிக் கொள்கிறோம்) என்ற நூலின் 142ம் பக்கத்தில் பின்வருமாறு எழுதுகின்றார்.

“சுயநலம், பெருமை ஆகியவற்றிற்கான இச்சை போன்ற... ஆட்சியாளர்களின் கொள்கையைப் பாதிப்படையச் செய்த ... குழப்பங்களின் விதியிலிருந்து இஸ்லாம் தப்பித்துக் கொள்ளவில்லை. எனவே ஈமானுடன் தொடர்பற்ற விஷயங்கள் தீனில்(மார்க்கத்தில்) ஊடுருவியதன் காரணமாக முஸ்லிம்களிடையே அல்–ஷீஆ, அல்–சுன்னா எனும் இரு பெரும் பிரிவுகள் ஏற்பட்டன. ஆயினும் இவ்விரு பிரிவினரும் ஒரே இறைவனிலும், முஹம்மது(ஸல்) அவர்களின் தூதிலுமே நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அவர்களுள் யாரொருவருமே, மார்க்கத்திற்கு நன்மையளிக்கக் கூடிய (இஸ்லாமிய) நம்பிக்கையின் அம்சங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கும் விடயத்தில், மற்றவரை விட சிறந்து விளங்குவதாகக் கூறமுடியாது. (இரு பிரிவினரும் சமநிலையிலேயே உள்ளனர்)”

### அஷ்–ஷேய்க் அல்–இமாம் மஹ்மூத் ஷல்தூத்

அஷ்–ஷேய்க் அல்–இமாம் மஹ்மூத் ஷல்தூத் அவர்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற மார்க்கத் தீர்ப்பு

(எகிப்தின் முன்னால் உயர் முஃப்தியும் அல்–அஸ்ஹர் பல்கலைக் கலகத்தின் முன்னால் தலைவரும்)

قيل لفضيلته

إن بعض الناس يرى انه يجب على المسلم لكي تقع عباداته معاملاته على وجه صحيح أن يقلد أحد المذاهب الأربعة المعروفة وليس عن بينها مذهب الشيعة الإمامية ولا الشيعة الزيدية ،فهل توافقون – فضيلتكم على هذاالرأي على اطلاقه فتمنعون تقليد مذهب الشيعة الإمامية الإثنا عشرية مثلا:

فاجاب فضليه :

1-أنّ الإسلام لا يوجب على احد من إتباعه اتباع مذهب معين بل نقول: إنّ لكل مسلم الحق في ان يقلد باديء ذي بدء أي مذهب من المذاهب المنقولة نقلا صحيحا والمدونة احكامها في كتبها الخاصّة ولمن قلد مذهبا من هذه المذاهب أن ينتقل الى غيره أي مذهب – كان ، ولا حرج عليه في شيء من ذلك،

2-أنّ مذهب الجعفرية المعروف بمذهب الشيعة الإمامية الإثنا عشرية مذهب يجوز التعبد به شرعا كساعر مذاهب أهل السنّة فينبغي للمسلمين أن يعرفوا ذلك وان يتخلصوا منالعصبية بغير الحقّ لمذاهب المعينة ، فما كان دين الله وما كانت شريعته بتابعة لمذاهب أو مقصورة على مذهب ،فالكل مجتهدون مقبولون عندالله

تعالى يجوز لمن ليس أهلا النظر والإجتهاد تقليدهم والعمل بما يقررونه في فقههم ولا فرق في ذلك بين العبادات المعاملات
- محمود شلتوت -

"ஒரு முஸ்லிம் தனது வணக்க வழிபாடுகள், தொழில் நடைமுறைகள் முறையானதாகவும், சரியானதாகவும் அமைவதற்காக, அல் ஷீஆ அல் இமாமிய்யா சிந்தனைப் பிரிவை (மத்ஹபை) உள்ளடக்காத நான்கு அறியப்பட்ட சிந்தனைப் பிரிவு (மத்ஹபு)களில் ஒன்றைப் பின் தொடர வேண்டும் என சில மனிதர்கள் கருதுகின்றனர். கன்னியத்திற்குரிய தாங்கள் இவ் அபிப்பிராயத்தில் உடன் படுகின்றீர்களா? மேலும், உதாரணமாக அல் ஷீஆ அல் இமாமிய்யா அல்–இஸ்னா அஷரிய்யா சிந்தனைப் பிரிவை (மத்ஹபை)ப் பின்பற்றுவதை தடைசெய்கின்றீர்களா?" என அன்னாரிடம் கேட்கப்பட்டது.

ஷெய்க் ஷல்தூத் பின்வருமாறு பதிலளித்தார்கள்:

இஸ்லாம் தன்னை பின் பற்றுபவர்களை ஒரு குறிப்பிட்ட சிந்தனைப் பிரிவை (மத்ஹபை)ப் பின்பற்றுமாறு கட்டளையிடவில்லை. நான்கு மதிக்கப்படுகின்ற சட்டங்கள் அவற்றிற்குறிய விசேஷ நூல்களில் திரட்டப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கின்ற பல மதிப்பிற்குரிய சிந்தனைப் பிரிவு (மத்ஹபு)களுள் ஏதேனும் ஒன்றை பின்பற்றத் துவங்குகின்ற உரிமை ஒவ்வொறு முஸ்லிமுக்கும் இருக்கிறது என நாம் கூறுகின்றோம். மேலும் ஒரு குறிப்பிட்ட மத்ஹபைப் பின்பற்றுகின்ற எந்த ஒரு முஸ்லிமும் இன்னொன்றிற்கு (அதாவது வேறொரு மத்ஹபுக்கு) மாறமுடியும். அவ்வாறு செய்வதற்காக அவன் எத்தகைய அவமானத்தையும் தேடிக் கொள்ளமாட்டான்.

"அல் ஷீஆ அல் இமாமிய்யா அல் இஸ்னா அஸ்ரிய்யா" எனப்படும் ஜஃபரி மத்ஹபும் ஏனைய சுன்னி சிந்தனைப் பிரிவுகளைப் போன்று வணக்க வழிபாடுகளில் பின்பற்றுவதற்கு சட்ட ரீதியாகவும், இறைவனாலும் அனுமதிக்கப்பட்ட ஒரு சிந்தனைப் பிரிவுதான். இதனை முஸ்லிம்கள் அறிந்து சில குறிப்பிட்ட மத்ஹபு மீது தாம் காட்டும் நியாயமற்ற ஒரு தலைப்பட்சமான பற்றுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அல்லாஹ்வுடைய தீனும், அவன் கூறிய தெய்வீக வாழ்க்கை நெறியும் ஒரு குறிப்பிட்ட மத்ஹப்பிற்குரியதில்லை. அல்லது ஒரு மத்ஹபைச் சார்ந்திருப்பதில்லை. இதற்கமைய அவர்கள் அனைவரும் வல்ல அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட வல்லுனர்களாவர். மார்க்கத் தீர்ப்பு வழங்குவதற்கு மார்க்க அறிவுத் துறையிலும், சட்டத் துறையிலும் தேர்ச்சி இல்லாதவர்கள் இந்த சட்ட வல்லுனர்களைப் பின்பற்றுவதற்கும் வணக்க வழிபாடுகள் தொழில் நடைமுறை போன்ற விஷயங்களில் அவர்களின் சட்டத் தொகுப்புகளில் காணப்படும் அவர்களின் தீர்ப்புகள் மற்றம் பதிவுகள் முதலானவற்றிக்கு அமைய நடப்பதற்கும் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## மௌலானா அபுல் அஃலா மௌதூதி

ثورة الخميني ثورة الإسلامية والقائمون عليها هم جماعة إسلامية وعلى جميع المسلمون عامَة والحركات الإسلامية خاصَّة ان تؤيد هذه الثورة وتعاون معها في جميع المجالات.

( مولانا مودودي – مجلة الدعوة القاهرة عدد 29-1979 )

கொமைனி அவர்களின் புரட்சி ஓர் இஸ்லாமிய புரட்சியாகும். அதன் காப்பாளர்கள் ஜமாஅதே இஸ்லாமைச் சேர்ந்தவர்களே. பொதுவாக அனைத்து முஸ்லிம்களும் குறிப்பாக இஸ்லாமிய இயக்கங்களும் இந்தப்புரட்சிக்கு ஆதரவு கொடுத்து அதன் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்தாசை வழங்குவது கடமையாகும்.

(மௌலானா அபுல் அஃலா மௌதூதி "அல் காஹிறா" சஞ்சிகை மலர் 29 – 1979)

ஷீஆ மத்ஹபின் இமாம்களில் ஆறாவது இமாமான இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்கள் ஹனபி மத்ஹபின் ஸ்தாபகரான இமாம் அபூ ஹனிபா மற்றும் மாலிகீ மத்ஹபின் ஸ்தாபகரான இமாம் மாலிக் இப்னு அனஸ் அவர்களினதும் ஆசிரியராகத் திகழ்ந்துள்ளார்கள்.

انّ الإمام جعفر الصادق المتوفي 148ه وهو رافع لواع الفقه الشيعى كان استاذ الإمامين السنيين – ابي حنيفة النعمان بن ثابت المتوفى – 15 ه وابي عبد الله مالك بن انس المتوفى 173ه

" لولا سنتان لهلك النعمان " –الإمام ابو حنيفة

"இமாம் ஜஃபர் (ரஹ்) அவர்களிடம் நான் 2 வருடங்கள் கல்வி கற்க வில்லையென்றால் நான் அழிந்தே போயிருப்பேன்."

– இமாம் அபூ ஹனீபா (ரஹ்)

ما رأيت أفقه من جعفر بن محمّد- الإمام مالك-

இமாம் மாலிக்:

"இமாம் ஜஃபரைவிட தலைசிறந்த மார்க்கச் சட்டக்கலை மேதை ஒருவரை நான் காணவில்லை".

## இமாம் அபூ ஸஹ்ரா

சுன்னத் ஜமாஅதின் தலை சிறந்த முஜாஹிதுகளில் ஒருவரான இமாம் அபூ ஸஹ்ரா அவர்கள் கூறுகிறார்கள் :

لا شك انّ الشيعة فريقة إسلامية إذا إستبعدنا مثل السبئية الذين الهوا عليا ونحوهم

(من المعروف إنّ السبيئة كافر في نظر الشيعة ) ولا شك انّها في كل ماتقول تتعلق بنصوص قراني واحاديث منسوبة إلى النبي(صلى)

– الشيخ جليل الإمام ابو زهره في كتابه تاريخ المذاهب الإسلامية - ص-29

நிச்சயமாக ஷீஆ ஒரு இஸ்லாமியப் பிரிவே, அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அலி(ரழி) அவர்களைக் கடவுளாக நம்பும் சப்யிய்யா பிரிவினரை நாம் ஒதுக்கிவிடவேண்டும். (ஷீஆ மத்ஹபின் பார்வையில் சப்யியாக்கள் காபிர்களாவர் என்பது பிரபல்யமானதாகும்) எனவே, திட்டமாக ஷீஆக்கள் கூறுவது திருக்குர்ஆனோடும், திரு நபி(ஸல்) அவர்களின் ஹதீஸ்களுடனும் நெருங்கியத் தொடர்புடையவையே.

இமாம் அபூ ஸஹ்ரா(ரஹ்) நூல் – இஸ்லாமிய மத்ஹபுகளின் வரலாறு பக்கம் – 29

## இமாம் அப்துல் ஹலீம் மஃமூத்

இமாம் அப்துல் ஹலீம் மஃமூத் (எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக் கழகத்தின் வேந்தர்)

فإنّ الأزهر لا يحمل إلى اخواننا الإمامية وإلى إخواننا الزيدية إلاّ كل ودّ ونحن الان في دور ندعو فيه إلى وحدة والاخوة وإذا حدث شيءٍ من هنا او هناك فسنحاول ان نصلحه وإن تصلحوه ونسير جميعا في طريق الإسلام والحب والودّ

تحريرا في مئة 1977\10\25

அல் அஸ்ஹர்(பல்கலைக்கழகம்) நமது சகோதரர்களான இமாமிய்யாக்கள், ஸைதியாக்களுடன் எல்லாவகையிலும் அன்பைப் பரிமாறிக் கொள்ளவே விரும்புகிறது. இப்போது நாம் ஒற்றுமையாகவும், சகோதரத்துவத்தை நிலை நிருத்துவதற்காகவும் அனைவரையும் அழைக்க வேண்டிய கடமைப்பாடுள்ளவர்களாக இருக்கிறோம்.
இங்கு, அங்கு ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் அதை இணக்கமாக்கி வைப்பதற்கு நாம் முழு முயற்சி எடுக்க வேண்டும். சமாதானம், அன்பின் வழியில் நாம் செல்வோம்

– இமாம் அபூ ஹலீம் மஃமூது

அஹ்லுல் சுன்னாக்களுல் தலை சிறந்த சிந்தனையாளர்களின் ஏகோபித்த கூற்று :

الشيعة مذهب إسلامي عظيم

“ஷீஆ ஒரு பிரதான இஸ்லாமிய மத்ஹபாகும்”

முஹம்மத் அல் பஹ்ஹாம் (ஷைஹுல் அஸ்ஹர் )

அல் இமாம் இப்னு ஷல்தூத்
அஹ்மத் ஹஸன் அல் பாகூறி
அப்துர் ரஹ்மான் நஜ்ஜாரி
பேராசிரியர் ஹாமித் ஹுப்னி தாவூத்
பேராசிரியர் சுலைமான் துன்யா
பிக்ரி அபுந் நஸ்ர்
அப்துல் ஹாதி மஸ்வூத் அல் இப்யாரி
அப்துல் முன்கிம் ஹுபாஜி
அஷ்ஷைஹ் அல் ஹஸ்ஸாலி

## அம்மான் மாநாட்டில் வெளியிடப்பட்ட பத்வா

ஜஃபரீ(ஷீயா), இபாழி, ழாஹிரி மத்ஹபுகள் அங்கீகரிக்கப்பட்டவையே, அவற்றைப் பின்பற்றுவோர் காபிரென்பது மார்க்க விரோதம், அம்மான் மாநாட்டில் இஸ்லாமிய அறிஞர்கள் தீர்மானம்.(2004.09.09 – ஜோர்தான்)

இஸ்லாமிய உலகின் தலைசிறந்த மார்க்க மேதைகள் கலந்து கொண்ட அனைத்துலக இஸ்லாமிய மாநாடொன்று ஜோர்தான் தலைநகரான அம்மானில் நடந்தது. இஸ்லாம் சமயத்தின் யதார்த்த நிலையும் இன்றைய சமுதாயத்தில் அதன் பங்களிப்பும் என்ற தலைப்பிலான பல்வேறு முக்கிய தீர்மானங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றும் மாநாட்டு இறுதியில் வெளியிடப்பட்டது.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த ஷாபியீ, ஹனபீ, மாலிகி, ஹன்பலீ நான்கு மத்ஹபுகளையும் மேலும் ஜஃபரீ(ஷீயா), ஸைதீ, இபாழீ, ழாஹிரீ மத்ஹபுகளையும் பின்பற்றுவோரை வழிகெட்டவர்கள் என்றோ காபிர்கள் என்றோ கூறுவது ஆகுமானதல்ல என அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் கீழ் ஜித்தாவைத் தலைமையாகக் கொண்டு இயங்கும் இஸ்லாமிய பிக்ஹ் நிறுவனம், அல்அஸ்ஹர் பல்கலைக்கழகம், எகிப்து நாட்டு முப்தி, ஓமான் தேசத்து முப்தி, ஆயத்துல்லாஹ் ஸீஸ்தானி, துருக்கி மதவிவகார கவுன்சில், ஜோர்தான் பிக்ஹ் மற்றும் பத்வா கவுன்சில், அறிஞர் யூசுப் கர்ழாவி முதலானோரின் கருத்துக்களையும் இத்தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அடிப்படையாகக் கொண்டதாக அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

இறை திருப்தியை நாடியும் இம்மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அறிவுபூர்வமான ஆய்வுகளின் முடிவாகவும் பெறப்பட்ட தீர்மானங்களை இந்த அறிக்கையின் மூலம் அறியத்தருகின்றோம்.

1.அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் ஷாபியீ, ஹனபீ, ஹன்பலீ மாலிகி நான்கு மத்ஹபுகளில் ஒன்றைப்பின்பற்றுவோரும், ஜஃபரீ(ஷீயா), ஸைதீ, இபாழீ, ழாஹிரீ மத்ஹபுகளையும் பின்பற்றுவோரும் முஸ்லிம்கள் ஆவர். அவர்களைக் காபிர்கள் எனக் கூறுவது அனுமதிக்கப்பட்டதல்ல. அவர்களது உயிர், சொத்து, மரியாதை என்பவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்துவது தடைசெய்யப்பட்டதாகும். அவ்வாறே ஷெய்குல் அஸ்ஹரின் பத்வாவுக்கு அமைய அகீதாவில் அஷ்அரி கோட்பாட்டைப் பின்பற்றுவோர் உண்மையான ஸூபி வழிமுறைகளைப் பின்பற்வோர் சரியான சிந்தனையுள்ள ஸலபிகள் ஆகியோரையும் காபிர் எனக்கருதுவது மார்க்க முரணான செயலாகும். இந்த அடிப்படையில் அல்லாஹ்வையும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களையும் ஈமானின் ஏனைய அம்சங்களையும் விசுவாசிக்கின்றதோடு மார்க்கத்தின் அடிப்படைகளைப் பேணி

நடக்கின்ற, மார்க்க முரணான விடயங்களை மறுக்கின்ற ஒருவரை அல்லது குழுக்களை முஸ்லிம்கள் அல்லர் எனக் கூறுவது எவ்விதத்திலும் அனுமதிக்கப்பட்டதல்ல.

2.குறிப்பிட்ட எட்டு மத்ஹபுகள் மத்தியிலும் காணப்படுகின்ற கருத்து வேறுபாடுகளை விட கருத்தொற்றுமைகளே அதிகம் காணப்படுகின்றன. இஸ்லாத்தின் அடிப்படையான அம்சங்களில் இம்மத்ஹபுகளைப் பின்பற்வோர் மத்தியில் வேறுபாடுகள் கிடையாது. ஏகஇறைவன், மனிதகுலத்திற்கு இறைத்தூதைச் சுமந்து வந்த இறுதித்தூதர், பரிபூரண குர்ஆன் என்பனவற்றை இவர்கள் அனைவரும் விசுவாசிக்கின்றனர். இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான கலிமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் என்பவற்றோடு ஈமானின் அம்சங்களான தவ்ஹீத், மலக்குகள், வேதங்கள், நபிமார்கள், மறுமை, இறைவனுடைய நாட்டம் என்பவற்றிலும் நம்பிக்கை கொள்கின்றனர். இந்த மத்ஹபுகளுடைய உலமாக்கள் மத்தியில் காணப்படும் கருத்து வேறுபாடுகள் மார்க்கத்தின் அடிப்படை அம்சங்களோடு சம்மாந்தப்பட்டவை அன்று, உண்மையில் அவை கிளை அம்சங்களோடு சம்பந்தப்பட்டவையாகும். இது "நமது முன்னையோர், அறிஞர் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பது அந் சமூகத்திற்கு ஆரோக்கியமானதாகும்." என்று சொல்லும் வகையைச் சார்ந்ததாகும்.

3.ஒரு மத்ஹபைப் பின்பற்றுவது என்பதன் அர்த்தம், அந்த மத்ஹபுகளின் பத்வாக்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ள சரியான வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதாகும். ஆகவே அந்த மத்ஹபுகள் தமது சரியான வழிமுறைகளின் அடிப்படையில் வழங்கிய தீர்ப்புகளை, அவ்வழிமுறைகளைக் கருத்திற் கொள்ளாமல் அந்த மத்ஹபின் அடிப்படைகளைப் பேணாமல் கையாளுவதோ அல்லது அவ்வடிப்படைகளில் அன்றி புதிய பத்வாக்களை வெளியிடுவதோ முறையானது அல்ல.

4.ஹிஜ்ரி 1425 லைலத்துல் கத்ர் இரவில் வெளியிடப்பட்டு ஜோர்தான் அல்-ஹாசிமிய்யீன் மஸ்ஜிதில் வாசிக்கப்பட்ட பிரகடனத்தை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது. மத்ஹபுகளை உத்தியோக பூர்வமாக அங்கீகரிப்பது சம்பந்தமாகவும், மேற்படி மத்ஹபுகளை பின்பற்றுவோர் மற்றும் அவற்றைச் சார்ந்த உலமாக்கள் தமக்கிடையில் சந்திப்புக்களையும், கலந்துரையாடல்களையும் வைத்துக் கொள்வது சம்பந்தமாகவும் அதில் வலியுறுத்தப்பட்டது.

5.முஸ்லிம்கள் தமது கருத்து வேறுபாடுகள் ஒரு புறம் இருக்க தமக்கு மத்தியில் ஒற்றுமையையும், கருத்துடன்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தில் நிலைப்பாடுகளை வகுத்துக்கொள்ள வேண்டும் எனக் கோருகின்றோம். பரஸ்பரம் கண்ணியமளித்தல், தமது நாடுகளுக்கும், சமுதாயங்களுக்கும் இடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தல், இறைதிருப்தியைப் பெற்றுத்தரும் விதத்திலான நல்லுறவையும், சகோதர வாஞ்சையையும் ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பாடுபட வேண்டும் எனவும், தமக்கு மத்தியில் வேறுபாடுகளோ, குழப்பங்களோ, கலகங்களோ உருவாகுவதற்கு எவ்வித

சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டாம் எனவும் வேண்டிக் கொள்கின்றோம். ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான். "நிச்சயமாக விசுவாசிகள் அனைவரும் சகோதரர்கள் ஆவர். உங்களுடைய சகோதரர்கள் மத்தியில் சமாதானம் ஏற்படுத்துங்கள். உங்களுக்கு அருள் புரிவதற்காக அல்லாஹ்வை அஞ்சுங்கள்"(4:114)

இவ்வறிக்கையின் இறுதியில் இரண்டு முக்கிய விடயங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவதாக மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கும், அபகரிக்கப்பட்ட புனித பூமிக்கும் மிகநெருக்கமான அம்மானில் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் ஒன்று கூடியுள்ள அனைவரும் முதலாவது கிப்லாவும், மூன்றாவது புனிதத்தலமுமாகிய மஸ்ஜிதுல் அக்ஸாவை அது எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கவும், ஆக்கிரமிப்பை முறியடிக்கவும் புனிதமதத்தளங்களை மீட்டெடுக்கவும் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு விதமான முயற்சிகளை அங்கீகரித்து ஆதரவு வழங்குகின்றனர்.

இரண்டாவதாக இஸ்லாமிய உலகில் சுதந்திரம், அடுத்தவரின் கருத்துக்கு மதிப்பளித்தல் என்பன மிக ஆழமான கருத்தோட்டத்தில் நோக்கப்படுவதன் அவசியத்தையும் இதில் கலந்து கொண்டோர் வலியுறுத்துகின்றனர்.

(பார்க்க: www.ammanmessage.com)

## இதுவே தீர்வு!

முஸ்லிம் சமூகத்தை இன்று ஆட்கொண்டிருக்கும் பிரச்சினைகள், பிளவுகள் அனைத்திற்கும் ஷீஆக்களின் பார்வையில் இரண்டு காரணங்களே பிரதானமானவை.

1.அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வபாத்திற்குப் பிறகு அவர்களால் நியமிக்கப்பட்ட அஹ்லுல்பைத் இமாம்களின் அரசியல் தலைமைத்துவம் புறக்கணிக்கப்பட்டமை.

2.குறித்த அஹ்லுல்பைத் இமாம்களது ஈருலக வழிகாட்டல்களையும், குறிப்பாக அவர்களது குர்ஆனிய விளக்கங்களையும் அண்ணல் நபியின் சுன்னாவைப் பற்றிய தெளிவுரைகளையும் செவிமடுக்காமை.

முஸ்லிம்கள் இவ்விரு விடயங்களையும் புறக்கணித்தமையால் இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். குர்ஆன் வசனங்களின் சரியான விளக்கம் எது? நபிகளாரின் உண்மையான சுன்னா யாது? எனத் தெரியாமல் தத்தளிக்கும் இத்தருணத்தில் அவைகளை உறுதியாகவும், தெளிவாகவும் பெறுவதற்கு, நபிகளார் மூலம் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட அஹ்லுல் பைத்துகளையும், அஹ்லுல்பைத் இமாம்களையும் பின்பற்றாமல், தத்தமது விருப்படி, மார்க்க விடயங்களை அமைத்துக் கொள்வதும், நாயகமவர்களின் அங்கீகாரம் பெறாத இமாம்களையும், மத்ஹபுகளையும்,

அமீர்களையும், சிந்தனைகளையும் பின்பற்றுவதும் எவ்வகையிலும் ஒரு முஸ்லிமை சரியான பாதைக்கு இட்டுச் செல்லாது.

صلواكمارأيتموني أصل"நான் தொழுவதை நீங்கள் எப்படிக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்" எனும் நாயகமவர்களின் கூற்றுக்கமைய நபிகளாரின் சுன்னாவை தமது கண்களினால் நேரடியாகக் கண்டு அவர்களுடன் முழு நேரமாகவும் வாழ்ந்து அவர்களின் வழிமுறையை பின்பற்றியோரில் முதன்மையான இடத்தை வகிப்போராக அஹ்லுல்பைத்தினர் உள்ளனர். இவர்களை அல்லாஹ் தூய்மைப்படுத்தி (33:33) உள்ளான் எனும் காரணத்தினால் நாயகமவர்கள் "அஹ்லுல்பைத்துகளைப் பின்பற்றி வாழுமாறும், அவர்களைப் பின்பற்றினால் நீங்கள் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள், அவர்கள் வழிகெட்டவர்களுமல்ல மற்றவரை வழிகெடுக்கவுமாட்டார்கள்" என முஸ்லிம்களை பணித்தார்கள். இதோ அவர்கள் அஹ்லுல்பைத்துகளைப் பின்பற்றி நடக்க வலியுறுத்திக்கூறிய சில ஹதீதுகள்

إنّي تاركٌ فيكُم الثَقَلَيْن كتابَ الله وَعِتْرَتي أهلَ بَيْتي ما إنْ تَمَسَّكْتُمْ بهما لَنْ تَضلُّوا أبَداً وإنّهما لَنْ يَفْتَرِقا حَتى يَرِدا عَلَيَّ الحَوْضَ.

நான் உங்கள் மத்தியில் பெறுமதிமிக்க இரு விடயங்களைவிட்டுச் செல்கிறேன். அவ்விரண்டையும் நீங்கள் இறுக்கமாகப் பற்றிப்பிடித்துக் கொண்டால் ஒருபோதும் வழிதவறமாட்டீர்கள். அது அல்லாஹ்வுடைய வேதமும் எனது குடும்பத்தினராகிய அஹ்லுல்பைத்துமாகும். இவ்விரண்டும் ஹவ்ழு (எனும் சுவனத்தின் நீர்தடாகத்தில் நீர் அருந்த) என்னிடம் வரும்வரை ஒன்றைவிட்டு ஒன்று பிரியமாட்டாது.

(திர்மிதி 2:307, தாரமீ 2:432, முஸ்னத் அஹமத் 3:14,17,26,59 மற்றும் ஹாகிம் 3:109)

قال النبى (ص): مثل اهلبيتى فيكم كمثل سفينة نوح من ركبها نجا ومن تخلف عنها غرق

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உங்கள் மத்தியில் எனது அஹலுல்பைத்திற்கு உதாரணம் நூஹ் நபியின் கப்பலைப்போன்றது. எவர் அதில் ஏறிக் கொள்கிறாரோ அவர் வெற்றி பெறுவார். எவர் அதில் ஏற மறுக்கிறாரோ அவர் மூழ்கி அழிந்து விடுவார். (முஸ்னத் அஹ்மத்)

قال النبى (ص):النجوم امان لاهل الارض من الغرق و اهل بيتى امان لامّتى من الاختلاف

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நட்சத்திரங்கள் கடலில் பயனிப்போருக்கு வழிகாட்டியாய் இருக்கின்றன. (அது போலவே) எனது அஹ்லுல்பைத்தினர் எனது உம்மத்தினரை முரண்பாடுகளிலிருந்து பாதுகாப்போராக உள்ளனர். (ஹாகிம்)

எனவே நபிவழிகாட்டலின்படி வாழவிரும்பும் ஒவ்வொரு முஸ்லிமும் அஹ்லுல்பைத்தின் வழிகாட்டல்களுக்கமைய நடத்தல் அவசியமாகும். முஸ்லிம் சமூகம் பல வகையாகப் பிரிந்து இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள போதிலும் ஷீஆக்கள்

என்றுமே முஸ்லிம் சமூகத்திற்கிடையில் பிளவை ஏற்படுத்த முனைந்ததில்லை. அவர்கள் என்றும் ஐக்கியத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தவே முயற்சித்து வருகின்றனர். முஸ்லிம்கள் தமது சமயத்தைப் பின்பற்றும் வழிமுறைகளில் பல (மத்ஹபு) பிரிவினராக இருந்தாலும் அப்பிரிவுகள் அனைத்தும் ஒரே கொடியின்கீழ் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே ஷீஆக்களின் அவாவாகும். இது நிறைவேற ஒத்துழைப்பு வழங்குமாறு அவர்கள் ஏனைய இஸ்லாமியப் பிரிவுகளிடம் நேசக்கரம் நீட்டி நிற்கின்றனர். ஏனைய இஸ்லாமியப் பிரிவுகளைச் சேர்ந்தோரை மரியாதைக்குரியவர்களாக மதிக்கும் அவர்கள் அப்பிரிவுகளின் அறிஞர்களினதும், தலைவர்களினதும் மார்க்கரீதியான பணிகளை மரியாதைக் கண்கொண்டு பார்க்கின்றனர். இஸ்லாமியப் பிரிவுகளின் கருத்துக்களையும், சிந்தனைகளையும் ஷீஆக்கள் தங்களது நூற்களில் பதிவுசெய்துள்ளனர்.

அல்கிலாஃப் எனும் ஷெய்ஹ் தூஸியின் (ஷீஆ அறிஞர்) பிக்ஹு நூலையும், மஜ்மஉல் பயான் எனும் தபர்ஸியின் தப்ஸீர் நூலையும் இதற்கு சான்றாகக் குறிப்பிடலாம். இந்நூல்களும் இது போன்ற பல அகீதா, தப்ஸீர், தாரீஹ், பிக்ஹு, ஹதீஸ் நூல்களும் உள்ளன. அவைகள் எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழக சுன்னி அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தஜ்ரீதுல் இஃதிகாத் எனும் செய்ஹ் நஸீருத்தீன் தூஸீயின் நூலுக்கு அலாவுதீன் கூஷ்ஜி எனும் சுன்னி (அஷ்அரி) அறிஞர் விளக்கவுரை வழங்கியிருப்பது இதற்கான பல சான்றுகளில் ஒன்றாகும்.

## தீர்வுகளை எட்டுவதற்கானதற்கான சிறந்த அணுகுமுறை

ஷீஆ அறிஞர்கள் தமக்கும், சுன்னி உலமாக்களுக்குமிடையில் பிக்ஹு, அகீதா, தாரீஹ் மற்றும் முஸ்லிம்களின் சமகாலப் பிரச்சனைகள் போன்றவற்றில் காணப்படும் முரண்பாடுகளை சினேகிதமான உரையாடல்கள் மூலம் பேசித்தீர்க்க தொன்று தொட்டு இன்றுவரை முயற்சித்து வருகின்றனர். வீண்பழி சுமத்துதல், அபாண்டம் கூறுதல், தப்பெண்ணம் கொள்ளல் போன்றவை தமக்கிடையில் ஏற்படக்கூடாது என விரும்பி இஸ்லாமிய நெருக்கத்தையும், அன்பையும் வளர்ப்பதுடன் இஸ்லாத்தின் எதிரிகளான அமெரிக்க ஏகாதிபத்தியம், சியோனிசம் போன்றவை முஸ்லிம் உம்மாவின் ஒற்றுமைக்கு உலை வைக்கா வண்ணம் தம்மைப் பாதுகாத்து கொள்வது அவசியமென நம்புகின்றனர்.

இதனால் அல்லாஹ்வையும், இஸ்லாத்தின் அடிப்படைகளையும் சரியாக விசுவாசம் கொண்டுள்ள முஸ்லிம்கள் எப்பிரிவினரைச் சார்ந்தவர்களாயினும் அவர்களை காபிர்களென்றோ, இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள் என்றோ கூறுவதை ஷீஆக்களின் பண்பாகக் காணமுடியாது. அனைத்து பிரிவுகளினதும் பார்வையில் காபிர்களெனக் கருதப்படுவோரை ஷீஆக்களும் காபிர்களென்கின்றனர். இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்ட 'பஹாயிஸம்', 'காதியானியிஸம்', ஹஸரத் அலியை இறைவனெனக் கூறும் 'அலியுல்லாஹிசம்' போன்ற சிந்தனைப் பிரிவுகளை முற்றிலும் இஸ்லாத்தை விட்டும் வெளியானவர்கள் என ஷீஆக்களும் நம்புகின்றனர்.

எனவே, தவறான சிந்தனைகளைத் தவிர்த்து வஹியின் நிழலிலும், பகுத்தறிவின் நிழலிலும் சந்தேகங்களைத் தெளிவு கண்டு ஆதாரபூர்வ மற்றும் அழகான கருத்துக்களை முழு மனதோடு ஏற்றுக் கொள்வதே குர்ஆனின் பார்வையில் நன்மாராயம் கூறப்பட்ட பண்பாகும்.

“(நபியே) எனது அடியார்களுக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக. அவர்கள் எத்தகையோரெனில் (பல்வேறு) கூற்றைச் செவியுறுவார்கள். பின்னர் அதில் மிக அழகானவற்றைப் பின்பற்றுவார்கள். அவர்கள் எத்தகையோரெனில் இறைவன் அவர்களை நேர்வழியில் செலுத்தி விட்டான். இன்னும் அவர்கள்தாம் அறிவுடையோராவர்” (39:18)

இன்று ஷீஆக்கள் பற்றி தவறாகக் கூறப்படும் அனைத்து கட்டுக்கதைகளையும், பொய்ப்பிரசாரங்களையும் தவிர்த்து அவர்களைப் பற்றிய உண்மைகளையும், யதார்த்தங்களையும் உள்ள முறையில் உரியபடி அறிய முற்படுவோமாக!
சிறிதாக இடம் பெற்றிருக்கும் இத்தொகுப்பு ஷீஆக்கள் பற்றிய ஓர் சுருக்கமான அறிமுகத்தை மாத்திரமே தருகின்றது.

இன்ஷா அல்லாஹ் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு விடயத்தையும், விரிவாக எமது அடுத்தடுத்த வெளியீடுகளில் எதிர்பாருங்கள்...

அல்லாஹ் எம் அனைவருக்கும் உண்மையை, அதன் உரிய வடிவத்தில் அறிந்து அதனை ஏற்று நடக்க நல்லருள் புரிவானாக!

ஷீஆ வரலாறும், கோட்பாடும் பற்றிய விரிவான தகவல்களை அறிய பின்வரும் (அரபு,ஆங்கிலம்)இணையத்தளங்களைப் பார்வையிடலாம்.

www.al-islam.org
www.ahl-ul-bait.org
www.al-shia.com
www.aqaed.com
www.ahl-ul-bait.org
www.imamsadeq.org
www.balagh.net

Al-Intizar Publication.